
இலண்டன்

£1.00 / RM 4

# சுடரொளி

**Chuderoli** **May - June** **சித்திரை - வைகாசி** **2010**

தந்தை செல்வாவின்
109 வது பிறந்த நாள்
31.03.2010




அகவை 65 இல்
திரு. சிதம்பரப்பிள்ளை




அகவை 50 இல்
திரு. யோகா

## தலைமோகும் ஈழத்து அரசியலில்
## தலை நிமிர்ந்து நிற்குமா த.தே.கூ தலைமை



அமுதுப் புலவருக்கு
அஞ்சலி



# A-Lanka Travel Ltd

*We make it easy to take it easy*

TOOTING BROADWAY

**171 Tooting High Street, Tooting, London SW17 0SZ**

**020 8672 5551, 020 8672 2010**

வாரத்தில் 7
நாட்களும் எமது
முழுமையான சேவை

6495 ATOL PROTECTED

**We Serve all 7 Days in a week**

உலகின் எப்பாகத்திற்கும்
நியாயமான விலையில் விமானச்
சீட்டுக்களை உடன் பெற்றிட
நம்பிக்கையான தமிழர் ஸ்தாபனம

For **Special Family Discount and Emergency Ticket** Only.
Please Contact
Wimal on 07956 206 709

உங்கள் சகல
பிரயாணத்
தேவைகளுக்கும்
அழையுங்கள்...

**020 8672 5551**
**020 8672 2010**

SriLankan
Emirates
SINGAPORE AIRLINES
ETIHAD
QATAR AIRWAYS
BRITISH AIRWAYS

*Worldwide Travel Agent*

## Special Rates for
(Subject to availability)

**Colombo £260 + Tax,**
(Srilankan Airlines with 10000 flymiles)

**Madras £190 + Tax,**
(with British Airways)

**Canada £199 + tax,**

**Singapore, Europe & Australia**

For special offers please listen to Sooriyoothayam Radio on 1035MW
Mon - Fri 10 to 11 pm

## Indian Visa services available

A-Lanka Travel

அவசர உடன் டிக்கட்களுக்கு
அழையுங்கள் : 07956 206 709
விமல் / விஜி
Wimal / Viji

Email: wimal@a-lankatravel.co.uk | Web: www.a-lankatravel.co.uk

இலண்டன்

# சுடரொளி

# CHUDEROLI

கலை இலக்கிய அரசியல் சமுக இதழ்

சுடர் 7 ஒளி 3 சித்திரை-வைகாசி 2010

**கௌரவ ஆசிரியர் :**
திரு. சி. சரவணபவன் (சிற்பி), M.A.,

**பிரதம ஆசிரியர் :**
திரு. ஐ.தி. சம்பந்தன்

**சிரேட்ட ஆலோசகர்கள் :**
டாக்டர் பொன் பாலசுந்தரம்
திரு. என். செல்வராஜா (நூலகவியலாளர்)

**ஆசிரியர் குழு ஆலோசகர்கள் :**
திரு. மயில் மனோகரன்
திரு. எஸ். கருணானந்தராசா
திருமதி. திருச்செல்வஉமா ஜெயக்குமார்

**பதிப்பாசிரியர் :**
திரு. இரா. மதிவாணன், எம்.எஸ்.ஸி.,

**நிர்வாகம் :**
திருமதி. செல்வதி சம்பந்தன், B.A,(Hons)

**வடிவமைப்பு :**
உலகத் தமிழர் பதிப்பகம், சென்னை
Email : utpmathi@yahoo.co.in

**வெளியீடு :**
Chuderoli Publication Society,
15, Rutland Road, London E7 8PQ UK
Tel : 0044 208 552 6992
Mob : 07852 950 089
Email : itsampanthan@hotmail.com

**தமிழகப் பிரதிநிதி :**
திரு. இரா. மதிவாணன், எம்.எஸ்.ஸி.,
4, Sourashtra Nagar, 7th Street,
Choolaimedu, Chennai - 600 094.
Tel : 0091 44 65180155/0 9444 111 951
E-mail : eramathi@rediffmail.com

**இலங்கைப் பிரதிநிதி :**

**மலேசிய தொடர்பாளர் :**
திரு. தி. மணிவண்ணன், Tel : 017-2294368

| Subscription | | | Annual | Life |
|---|---|---|---|---|
| UK | : | £ | 12 | 120 |
| Europe | : | £ | 15 | 150 |
| India | : | Rs. | 200 | 2000 |
| Sri Lanka | : | Rs. | 400 | 3000 |
| Malaysia | : | RM | 30 | 300 |
| Singapore | : | SG$ | 15 | 150 |
| Other countries | : | £ | 20 | 200 |

படைப்பின் கருத்துகளுக்குப்
படைப்பாளரே பொறுப்பு


## இந்த இதழில்


1. எமது நோக்கு -பொதுத் தேர்தலும் ஈழத் தமிழர்களும் 3
2. அஷ்டாவதானி' நா. கதிரைவேற்பிள்ளை - *மணிவாசகப்பிரியா* 5
3. சுடரொளி ஆசிரியருக்கு விருதளிப்பு 7
4. ஸ்ரீ விக்ரமராஜசிங்கன் 9
5. தமிழினத்தின் தன்னிகரில்லா மாவீரன் - *க. செல்வநாயகம்* 10
6. பொங்கலோ பொங்கல் - *பொன் பாலசுந்தரம்* 11
7. கவிநாயகர் கந்தவனத்துடன் இலக்கியச் சந்திப்பு 12
8. இலண்டனில் பரத நாட்டிய அரங்கேற்றம் 14
9. தமிழர் சிங்களவர் உறவு - *நாணயக்காரா* 16
10. Annual Vaigasi Festival - Malaysia 20
11. பால் நீர் உறவு -*கா. விசயரத்தினம்* 21
12. சைவ முன்னேற்றச் சங்கத்தின் புதிய தலைவர் - *ஐ.தி.ச.* 22
13. விடை பெறுவீர் அமுதுப் புலவரே! - *என். செல்வராஜா* 27
14. ஆன்மிகத்தின் பொருள் -*வெ. இன்சுவை* 30
15. நூல் தேட்டம் ஆங்கில நூல் தொகுப்பு -*என். செல்வராஜா* 35
16. பத்மநாப ஐயர் ஒரு நடமாடும் நூலகம் -*இளந்திரையன்* 38
17. புலம்பெயர் மக்களும் நாடு கடந்த தேசியத்துவமும் 40




## தந்தை செல்வாவின் தீர்க்க தரிசனம் நிதர்சனமாகும் காலம் வந்துவிட்டதா?

1898 மார்ச் 31ஆம் திகதி பிறந்து 1977 ஏப்பிரல் 26ஆம் திகதி வரைவாழ்ந்து 1944லிருந்து இலங்கை அரசியலில் குறிப்பாக ஈழத் தமிழர் அரசியல் வரலாற்று நாயகனாக விளங்கிய திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் கியூ.சி. அவர்களின் 122ஆவது பிறந்த நாள் 31-3-2010 ஆகும். அன்னாரது பிறந்தநாளில் அப்பெருந்தலைவன் காட்டிய அரசியல் பாதையையும் தீர்க்க தரிசனத் தையும் நினைவு கூருவோமாக.

இரு இனமக்கள் வாழும் இலங்கை ஒரு சுபீட்சம் நிறைந்த நாடாக விளங்க வேண்டுமாயின் சமஷ்டி ஆட்சிமுறையே சிறந்தது என்று 1949இல் கூறியவர். அகில இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை 18-12-1949இல் ஆரம்பித்து வைத்து சமஷ்டிக் கொள்கையைப் பிரகடனப்படுத்தினார். தந்தை செல்வாவின் 30 வருட அகிம்சை வழிப்போராட்டத்தை இனவாத சிங்கள அரசியல் தலைமைகள் இராணுவ பலத்தால் முறியடித்தனர்.

அதன் பிரதிபலிப்பே தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்ட வளர்ச்சி. மிகப் பலம்பொருந்திய தமிழ் இராணுவத்தைக் கட்டியெழுப்பிய பெருமை விடுதலைப் புலிகளுக்கே உரியது.

உலக. வல்லரசுகளையே அதிசயிக்க வைத்த விடுதலைப் புலிகளின் ஆயுதப்போராட்டத்தை ''பயங்கரவாதம்'' என்ற நாமத்தைச் சூட்டி 10 நாடுகள் வழங்கிய ஆயுத பலத்துடன் சிங்கள இனவாத அரசு விடுதலைப் புலிகளின் போராட்டத்தை வீழ்ச்சியடையச் செய்தது. இதில் இந்தியா செய்த துரோகத்தை ஒரு போதும் மறக்கமுடியாது. மீண்டும் ஜனநாயக வழியில் போராடி தமது அரசியல் தீர்வைக் கொண்டு வர வேண்டிய நிலைக்கு ஈழத்தமிழர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

தந்தை செல்வா 1949இல் தீர்க்கதரிசனமாகக் கூறிய சமஷ்டி அரசியல் மீண்டும் ஒலிக்கத் தொடங்கியுள்ளது. ஏப்பிரல் 8ஆம் தேதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இக்கோரிக் கையை முன்வைத்துள்ளது. இத்தகைய கோரிக்கையை இந்தியாவின் உதவியுடனும் சர்வதேச நாடுகளின் ஆதரவுடனும் முன்னெடுக் கலாம் என்ற நம்பிக்கையுடன் திரு. இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு செயற்படுகிறது.

தந்தை செல்வாவின் தீர்க்க தரிசனம் நிறைவேறும் காலம் வந்துவிட்டதா?

- ஐ.தி.ச.

சிந்தனைப் பகுதி

# பசுவுடன் இணைந்தது எப்படியோ?

சி. மாசிலாமணி



என்றுமே உள்ள பொருளின் இயல்புகள் பற்றி ஆராய்வதே இந்தியத் தத்துவ ஞானம். உயிர்கள் துன்பம் கண்டு, அதன் காரணத்தை அறிந்து அதைப் போக்கும் நோக்கில் உருவானதே இந்தத் தத்துவ ஞானம். அது நான்கு வேதங்களாகிய ருக் (தோத்திரம்) யசுர் (யாகம்) சாமம் (இசை) அதர்வணம் (மாந்திரிகம்) ஆகியவை ஊடாகவும் அவற்றின் சாரமாகிய உபநிடதங்கள் ஊடாகவும் வெளி வருகிறது. வித் என்ற வடமொழிச் சொல் லுக்கு அறிதல் என்று பொருள். எனவே வேதங்கள் என்ற சொல்லுக்கு அறிவு நூல்கள் என்று பொருள். அது சரியாகச் சிந்திப்பதற்கு வழி வகுத்து முறையாக வாழவும் வழிகாட்டுவதாகக் கருதப்படுகிறது. மறைந்து நிற்கும் பரம்பொருளை விளக்குவதால் இவற்றை மறை என்றும் அழைப்பர். இந்த நான்கு வேதங்களையும் அவற்றின் சாரமாகிய உபநிடதங் களையும் ஒப்புக் கொள்ளாதவர்களையும் அவைதிகர் எனப் பெயரிட்டு இந்தியத் தத்துவ ஞானம் தன்னுள் அடக்கி உள்ளது. எடுத்துக்காட்டிற்கு உலகாயதரும் சமணரும் பௌத்தரும் இந்தப் பிரிவில் அடங்குவர்.

அறிவை நமக்குத் தரும் வாயில்கள் பற்றிப் பார்ப்போமானால் காட்சி (பிரத்தியட்சம்) கருதுதல் (அனுமானம்) உரை (ஆப்த வாக்கியம்) என்று அவற்றை மூன்று வகைப்படுத்தலாம். காண்பது, கேட்பது, தொடுவது போன்ற புலன்கள் வழி வருவது முதல் வாயில். அனுபவம் எமக்கு நேரடி யாகத் தருபவை இரண்டாவது வாயில். நேரடியாகக் கண்டவர்கள் மூலம் வருவது மூன்றாவது வாயில். இந்த மூன்று வாயில்கள் வழியேதான் மறைந்து நிற்கும் பரம்பொருள் பற்றிய அறிவையும் நாம் பெறு கிறோம்.

இந்த அடிப்படையில் உருவான இந்தியத் தத்துவங்கள் அவைதிகம், ஐவகைத் தரிசனம், மூவகை வேதாந்தம், சைவ சித்தாந்தம் என நான்கு பிரிவுகளாலானது. இவற்றுள் உயிர், (ஆத்மா), என்று ஒன்றில்லை. உடலின் இயலும் குணமும்தான் அது என்கின்றனர் உலகாயதரும், பற்றே துன்பம், பற்றிலி வீடு என்கிற பௌத்தத்தின் உயிர் பற்றிய கருத்தும் தவிர மற்றைய எல்லோரும் ஆத்மா ஆதி அந்தம் அற்றது என்றே கூறுகிறார்கள். உயிர் பற்றிய அடிப் படைக் கருத்தில் ஒற்றுமை இருந்தாலும், ஆத்மாக் கள் பல என்போரும், ஒரே ஒரு பரமாத்மாதான் பல ஆத்மாக்களாகத் தோன்றுகின்றது என்கின்ற வேதாந்திகளும் கருத்தில் வேறுபட்டாலும் இந்தியத் தத்துவ ஞானத்தின் ஒட்டு மொத்தக் கரு ஆதி அந்தம் அற்ற பிரம்மம்தான்.

கசிவநெறியாளர்கள் அதாவது சைவசித்தாந்தி கள் எப்போதுமே சாதிக்கு முன் உரிமை கொடுப் பவர்கள். இதன் ஒரு அங்கமாகத்தானே ஆறுமுக நாவலர் திருவருட்பா ஆசிரியருக்கு எதிராக வழக்குத் தொடுத்தார். மிதித்த புல் சாகாது என்று பழகிய எவரும் இந்தக் கூற்றை ஏற்பார்கள். அவ்வளவு மென் மையானவர். ஆனால் அவர்தாம் தருமகர்த்தாவாக உள்ள சிவன் கோயிலுக்குள் சாதி குறைந்தவர்கள் செல்லக்கூடிய நிலை வந்ததும் தருமகர்த்தாப் பதவி யையே அதற்காகத் தூக்கி எறிந்தார். இது அவர்கள் சமயப் பற்றைக் காட்டுகிறது. அப்படியானால் பன்னிரு திருமுறை, பதினான்கு சாத்திரங்கள் வாயி லாக ஆணவம், கன்மம், மாயை பற்றிப் பேசும் சைவ சித்தாந்தம் அவர்களுக்குத் தவறான வழியைக் காட்டியதோ?'

புத்தர்கூட பல கேள்விகளுக்கு மௌனம் சாதித்தார் என்பதைப் பௌத்தம் பற்றி அறிந்தவர்கள் புரிந்து கொள்வார்கள். அவற்றிற்கு எல்லாம் பதில் கூறும் இந்து சமயப் பிரிவுகள் எவையும் மாயை பற்றிய இறுதிக் கேள்விக்குத் திருப்தியான பதில் அளிக்கத் தவறுகின்றன. அநாதியான ஆன்மா அநாதியிலிருந்து பாசத் தொடர்புடையது என்றே இந்து சமயப் பிரிவுகள் கூறுகின்றன. அப்படியானால் பரம்பொருள், ஆன்மா, பாசம் ஆகிய மூன்றுமே அனாதியாகின்றன. பிறப்பில்லாமல் கன்மம் இல்லை. அப்படியானால் எப்படிக் கன்மம் ஏற்பட்டுப் பிறப்பு ஏற்பட்டது? விருப்பு வெறுப்பற்ற பரம்பொருள் எந்தப் பாசத்தையும் ஏற்படுத்தியிருக்காது. ஆகையால் அநாதி என்பதிலும் பந்தம் எங்ஙனம் ஏற்பட்டதென விளக்க முடியவில்லை என்பதே இந்தியத் தத்துவ ஞானங்களில் தொனிக்கின்றது. ஆகையால் பசுவு டன் பாசம் இணைந்தது பற்றி ஏதும் அறியோம் பராபரமே என்றுதான் கூறவேண்டும். ✱

# எமது நோக்கு

## பொதுத் தேர்தலும், ஈழத் தமிழர்களும்

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் ஈழத் தமிழர்களிடையே பெரும் பிளவுகளையும் சிக்கல்களையும் உருவாக்கியுள்ளது.

இந்நிலைமையைக் கருத்தில்கொண்டு தாயகத் தமிழர்களும் புலம்பெயர் தமிழர்களும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய நிலையிலுள்ளோம். எமது செயற்பாடுகள் யதார்த்தமாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் வீழ்ச்சியிலிருந்து வீறுகொண்டு எழ முடியும்.

முள்ளிவாய்க்கால் வீழ்ச்சியின் பின் நடைபெறும் இத்தேர்தல் ஈழத் தமிழர்களைப் பல்வேறு கூறுகளாகப் பிளவுபடுத்திவிட்டது. ஜனநாயக வழிகளைப் பயன்படுத்த நாம் பக்குவப்பட வேண்டும்.

வன்னித் தலைமை மிகக் கட்டுப்பாடாக வைத்திருந்த ஈழத் தமிழர்களும் புலம்பெயர் தமிழர்களும், ஜனநாயகம் என்று கூறிக்கொண்டு பல்வேறு கூறுகளாகப் பிரிந்து நிற்கின்றனர். தமிழர்களை அழித்தொழிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் இனவாத அரசுக்கு இப்பிளவுகள் சாதகமாக அமைந்துவிட்டன என்பதை எமது மக்கள் சிந்திக்கத் தவறுவது ஏன்?

முள்ளிவாய்க்காலின் பின் மிக மோசமான அவலத்தை அனுபவித்து வரும் தாயக மக்களுக்கு இத்தேர்தல் வேதனையையும் குழப்பத்தையும் சிக்கல்களையும் ஏற்படுத்தியுள்ளன.

இது ஒரு சாபக்கேடு என இலண்டன் புதினம் ஆசிரியர் திரு. இராஜகோபால் தெளிவாகப் 'புதினம்' பத்திரிகையில் கூறியுள்ளார்.

''வியூகம் அமைத்த தமிழ்த் தேசியக் கட்டமைப்பைச் சுற்றி வளைக்க, உள்ளிருந்த ஒரு குழுவும் அதற்கு எதிராகப் போட்டியிடுவதே பெரும் சோகம்.

திருகோணமலையில் தமிழர் தரப்புக்கு ஒரு ஆசனம் கிடைப்பதற்குத் தீவிரமாகச் செயற்பட வேண்டும்.

ஆனாலும் தமிழ்க் காங்கிரஸ் அங்குக் களமிறக்கப்படுவதால் ஒரு உறுப்பினருக்கான வாய்ப்பு கைநழுவிச் சென்றுவிடலாம்'' எனக் கூறியிருப்பதை ஈழத்தமிழர்கள் கருத்தில் கொள்ளவேண்டும்.

ஆயுதப்போராட்டம் வீழ்ச்சியடைந்த பின் தமிழர்கள் ஜனநாயக வழியில்தான் போராட்டம் நடத்தி இழந்த உரிமைகளையும் அரசியல் தீர்வையும் பெற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதை அனைவரும் அறிவீர்கள்.

வன்னித்தலைமை செயலற்றுப்போன பின்னாத் தமிழர் தாயகத்தில் வலுவான தமிழ் அரசியல் சக்தி ஒன்று உருவாக வேண்டும் என்று புலம்பெயர் தமிழர்கள் வற்புறுத்தி வந்தனர்.

தமிழர்கள் அரசியல் தலைமையை இழந்துவிட்டாகளோ என்று சிந்தித்துக் கொண்டிருந்த வேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது அரசியல் நடவடிக்கைகளை மிக விவேகமாக முன்னெடுத்து அதுதான் ஈழத்தமிழர்களின் பலமான கட்சி என்பதை நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலிலும், ஜனாதிபதித் தேர்தலிலும் நிரூபித்துள்ளனர்.

அந்த நம்பிக்கையில் நடைபெறவுள்ள தேர்தலில் வடகிழக்கு ஐந்து மாவட்டங்களிலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. சென்ற தேர்தலில் 22 ஆசனங்களைப் பெற்ற கூட்டமைப்பு இத்தேர்தலிலும் பெரும்பான்மை ஆசனங்களைப் பெறலாம் என்ற நம்பிக்கையுடன் களமிறங்கியுள்ளது. ஆனால் இறுதி நேரத்தில் கூட்டமைப்பிலிருந்து பிரிந்தவர்களினால் திருகோணமலையைத் தமிழர்கள் இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலை தாயக மக்களுக்கும் புலம்பெயர் உறவுகளுக்கும் ஏமாற்றத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்திவருகிறது. ஆனாலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுதியாகவும் நம்பிக்கையுடனும் தமது அரசியல் நடவடிக்கைகளையும் தேர்தல் பிரசாரத்தையும் மேற்கொண்டு வருகின்றனர்.

நீண்டகால அரசியல் அனுபவ உள்ளவரும், தந்தை செல்வாவின் அரசியல் பாசறையில் வளர்ந்து வந்தவருமான இரா. சம்பந்தன் அவர்கள், த.தே. கூட்டமைப்பின் தலைமை ஏற்று, களத்தின் அரசியல் நிலையைக் கருத்தில்கொண்டு அரசியல் நுகர்வுகளை மேற்கொண்டு வருகின்றார்.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமை, தன்னாட்சி, ஒஸ்லோ இணக்கப்பாடு ஆகியவற்றின் அடிப்படை

யில் ஒரு அரசியல் தீர்வுத் திட்டத்தையும் தயார் நிலையில் வைத்துள்ளனர். எல்லாவற்றையும் இழந்துள்ள நிலையில் தமிழர் தாயகம் தமிழர்களின் பாரம் பரியப் பிரதேசம் என்பதை நிலைநாட்டும் ஒரு அரசியல் தீர்வை எய்த முயலும் த.தே. கூட்டமைப்பை வலுப்படுத்தவேண்டியது தமிழ் மக்களின் கடமையாகும். தேவையற்ற விமர்சனங்கள் தவிர்க்கப் படவேண்டும். அது சிங்கள இனவாத அரசுக்கு சாதகமாக அமைகிறது.

இந்த அரசியல் திட்டத்திற்கு ஆதரவாக இந்தியாவின் நல்லெண்ணத்தையும் வளர்த்து வருகின்றனர். சர்வதேச நாடுகளும் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு அவசியம் என வற்புறுத்தி வருகின்றனர். இந்த நல்ல சூழ்நிலையைப் பயன்படுத்தி, தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய அரசியல் தீர்வை முன்வைப்பதற்கு முயற்சி மேற்கொண்டுவரும் வேளையில் பொதுத் தேர்தல் திடீரென வந்துவிட்டது.

தேர்தலை எதிர்கொண்டு மீண்டும் மக்களின் அமோக ஆதரவைப் பெற்றுத் தமிழ்மக்களின் பல்வேறு பிரச்சினைகளோடு, விரைவான அரசியல் தீர்வையும் நோக்கிச் செல்ல வேண்டிய த.தே. கூட்டமைப்புக்கு, இனவாத அரசினாலும் உள்ளிருந்து பிரிந்து சென்றோராலும் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டு வருகின்றன.

தமிழீழத்தின் தலைநகராகப் பாதுகாத்து வந்த திருகோணமலைத் தமிழ் நாடாளுமன்ற ஆசனத்தை இழக்கும் சூழ்நிலை கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்க் காங்கிரஸால் ஏற்பட்டிருக்கிறது. திருமலையில் தமிழர் பிரதிநிதித்துவம் பாதிக்கப்பட்டால் அதுபற்றி எந்தக் கவலையும் இல்லை என்று கஜேந்திரகுமார் கூறியுள்ளார்.

ஒரு பக்கம் மகிந்த ராஜபக்ஸ்சா தலைவர் திரு. சம்பந்தன் அவர்களைத் தோற்கடிக்கவேண்டுமென்று கோடிக்கணக்காக நிதியைச் செலவிடும் அதேவேளை, காங்கிரஸ் கட்சியின் போட்டியும் இணைந்து திருகோணமலையைச் சிங்களவர்களுக்குத் தாரைவார்த்துக் கொடுக்கும் பயங்கர நிலை உருவாகியுள்ளது. இதிலிருந்து திருகோணமலையைப் பாதுகாக்க என்ன செய்யலாம் எனப் புலம்பெயர் தமிழர்கள் சிந்தித்துச் செயலாற்ற வேண்டியது அவசியம் ஏற்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியம் என்று சொல்லிக்கொண்டு தமிழ்ப் பிரதேசத்தைச் சிங்களவர்களுக்குத் தாரை வார்த்துக் கொடுக்கத் துணை போகலாமா?

தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களால் உருவாக்கப்பட்ட தேசியக் கூட்டமைப்பைச் சிதறடிப்பதற்குச் சில சக்திகள் செயற்படுகின்றன. தலைவர் மீது விசுவாசம் கொண்டவர்கள் நாடாளுமன்ற ஆசனம் கிடைக்கவில்லை என்பதற்காக, இன்றைய சூழ்நிலையில், அரசியல் அனுபவம் வாய்ந்தவர்கள் இல்லாத நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தலைமை தாங்கி அரசியல் சாணக்கியத்துடன் ஈழத் தமிழர்களின் அரசியலை வழிநடத்தி வருகின்றார். அவரிடத்திலும் சில குறைபாடுகள் இருக்கலாம். தவறுகள் இருக்கலாம். அதற்காக எதிரிகளுக்குச் சாதகமாகப் பிளவுபட்டவர்கள் நடக்கலாமா? த.தே. கூட்டமைப்பின் தலைமையையும் அவருக்குத் துணையாகச் செயற்படும் மாவை, பிரேமச்சந்திரன் ஆகியோரைத் தோற்கடிப்பதுதான் எமது முதற்கடமை என்று தேர்தல் பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றார் தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. கஜேந்திரகுமார் அவர்கள்.

இது நாகரிகமான அரசியலா என்று புலம் பெயர் உடன்பிறப்புகளே சிந்தியுங்கள். எது எப்படியானாலும் த.தே. கூட்டமைப்பிலிருந்து பிரிந்தவர்களை ஒன்றிணைத்து வன்னித் தலைமையின் அபிலாசைகளை நிறைவேற்ற வேண்டுமென அண்மையில் இலண்டனில் கூடிய த.தே. கூட்டமைப்பின் ஆதரவாளர் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அறிகின்றோம். அந்த நல்ல முயற்சியைத் தாயக மக்களும், புலம்பெயர் உடன் பிறப்புகளும் வரவேற்கின்றனர். அதற்கு முட்டுக்கட்டையாக இருப்பவர்கள் யார் என்பதை இனம்காண வேண்டும்.

எமது ஒற்றுமையின் பலத்தைக் கொண்டே ஒரு அரசில் தீர்வை எட்டமுடியும். இந்த ஒற்றுமையை நிலைநாட்ட, தேசியத் தலைவரால் தோற்றுவிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அமோக வெற்றிபெற, உட்பகைமைகளையும் கோபதாபங்களையும் மறந்து ஆதரவு நல்கவேண்டியது அனைத்துத் தமிழர்களின் தலையாய கடமையாகும். இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவற விட்டால் நாம் மேலும் வீழ்ச்சியை நோக்கியே செல்லவேண்டிய நிலை ஏற்படும். ஈழத் தமிழர்கள் புத்திசாலிகள், விவேகமுள்ளவர்கள் என்பதை நிரூபிக்க இத் தேர்தலைப் பயன்படுத்துங்கள். *

- ஆசிரியர்



# 'அஷ்டாவதானி' நா. கதிரைவேற்பிள்ளை

மணிவாசகப்பிரியா

புலவர்கள் என்றாலே அவர்களுக்குள் சர்ச்சைகளும் கருத்து வேறுபாடுகளும் ஏற்படுவது வழக்கம். ஆனால், தனிப்பட்ட முறையில் அவர்களுக்குள் எந்தவிதமான வெறுப்போ, காழ்ப்புணர்ச்சியோ இருந்ததில்லை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

புலமையில் சிறந்த சான்றோர்க்கு 'தருக்கன்' என்னும் மெய்ப்பாடு இருப்பது இயற்கைதானே! தங்களது புலமையை வெளிப்படுத்த, புலவர்கள் நிறைந்த அவையில் தங்களது கருத்தை முன்வைக்கவும், தாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாத சில கருத்துகளை மறுத்துரைக்கவும் நினைப்பர்.

அவர்களது கருத்து வேறுபாடு சில நேரங்களில் விவாதமாகி, அதுவே மிகப்பெரிய சர்ச்சைக்குள்ளாகி இறுதியில் நீதிமன்றம் வரை செல்வதுண்டு. ஆனால், இதுபோன்ற இலக்கியச் சர்ச்சைகளுக்கு இறுதியில் நல்ல தீர்வுதான் கிடைத்திருக்கிறது. இவ்விதமாக ஒரு சர்ச்சைக்குள் சிக்கி, நீதிமன்றம் வரை சென்று, பலராலும் பரவலாக அறியப்பட்டவர்தாம் ஈழத்துத் தமிழறிஞரான நா. கதிரைவேற்பிள்ளை. 'சதாவதானி', 'அஷ்டாவதானி' என்றெல்லாம் பல பட்டங்களைப் பெற்ற இவர், செந்தமிழுக்கும், சைவத் தமிழுக்கும் செய்த தொண்டு அளப்பரியது.

ஈழவள நாட்டில், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மேலைப் புலோலி என்ற இடத்தில் 1874 ஆம் ஆண்டு நாகப்பிள்ளை-சிவகாமி அம்மையார் தம்பதிக்கு மகனாகப் பிறந்தார். இவர் பிறந்த தேதி, மாதம் அறியக் கிடைக்கவில்லை. இவரது தந்தையார் நாகப்பிள்ளை. முருகப்பெருமானிடத்தும் பெருமானுடைய வேற்படையிடத்தும் நீங்காத பேரன்பு கொண்டவர். தமது இல்லத்திலேயே வேற்படையை வைத்து வழிபாடு செய்துவந்தவர். வேல் வைத்து முருகப்பெருமானை வழிபடும் மரபில் பிறந்த கதிரைவேற்பிள்ளை இயற்றிய 'சுப்பிரமணிய பராக்கிரமம்' என்ற நூலின் அடிப்படையில்தான் பழனி கோயிலின் சித்திரக்கூடம் அமைக்கப்பட்டதாகவும் கூறுவர்.

உள்ளூரில் இருந்த தொடக்கப்பள்ளி ஒன்றில் ஆறாம் வகுப்பு வரையில் படித்தார். வறிய குடும்பத்தில் பிறந்தவராதலால் மேற்கொண்டு படிக்க முடியாமல் உள்ளூரில் நொத்தாரிசு சிதம்பரம் என்பவரிடம் எழுத்தாளராக சிலகாலம் வேலை பார்த்தார். பின்னர் அவரோடு கருத்து வேறுபாடு ஏற்பட்டதால், அந்த வேலையை விட்டு, தொடக்கப்பள்ளி ஒன்றில் சிறிதுகாலம் ஆசிரியராகப் பணியாற்றினார். கிளைடன் துரைக்குத் தனி ஆசிரியராக இருந்து தமிழ் பயிற்றுவித்தார். மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவராகவும் ஆரணி அரசரின் அவைப் புலவராகவும் திகழ்ந்தார். இவரது முயற்சியால்தான் சென்னை-இராயப்பேட்டையில், பாலசுப்பிரமணிய பக்த ஜனசபை ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. இவர் தமிழ், வடமொழி இரண்டிலும் சிறந்த புலமை பெற்றவர்.

1892 ஆம் ஆண்டு வடிவாம்பிகை என்பவரை வாழ்க்கைத் துணையாகக் கொண்டார்.

சென்னைக்கு வந்து அறிஞர் பெருமக்களுடன் அளவளாவிப் பெரும் புகழ்பெற வேண்டும் என்ற ஆசையால் 1895ஆம் ஆண்டு சென்னைக்கு வந்து சேர்ந்தார் கதிரைவேற் பிள்ளை. சிறிதுகாலம் குயப்பேட்டை என்ற இடத்தில் தங்கினார். பிறகு, மதராஸ் ரிப்பன் அச்சுக் கூடத்தில் தங்கி அச்சுப்பிழை திருத்தும் பணிகளைச் செய்துவந்தார். அங்கு சிவசங்கரன் செட்டியார் என்பவருடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால், அந்தப் பதிப்பகப் பணியிலும் நிலைத்து நிற்க முடியாமல் வேலையை விட்டு விலகினார்.

தமிழிலும் வட மொழியிலும் சிறந்து விளங்கிய சில புலவர்களை அணுகி, அவர்களிடம் இலக்கண, இலக்கியங்கள் மற்றும் சைவ நூல்கள் பலவற்றையும் கற்றுணர்ந்தார். இயற்கையிலேயே நுண்மாண் நுழைபுலமுடையவராக இருந்ததால் சொல்லாற்றலிலும் சிறந்து விளங்கினார். இதனால், இருமொழிப் புலவரான இவரது புகழ் பல இடங்களிலும் பரவியது.

ஈழத்தில் பிறந்து சென்னையில் வாழ்ந்த இவர், அதீத பேச்சாற்றல் மிக்கவராகத் திகழ்ந்தார். இவரது பேச்சாற்றலால் ஈர்க்கப்பட்ட தமிழ்த் தென்றல் திரு.வி.க. முதலிய தமிழறிஞர்கள் இவரது மாணவரானார்கள். ''யான் மாணாக்கனாக இருந்தபோது, யாழ்ப்பாணம் நா. கதிரைவேற் பிள்ளையவர்களது அன்புக்குரியவனானேன். ஆங்கிலத்தில் பித்துக் கொண்டு திரிந்த எனக்கு, தமிழில் வேட்கையை எழுப்பியவர் அவரேயாவார்'' என்று திரு.வி.க. இவரைப் பற்றிப் பெருமையாகக் குறிப்பிட்டுள்ளார்.

1897 ஆம் ஆண்டு வேப்பேரி உயர்நிலைப் பள்ளி ஒன்றில் தமிழாசிரியராகப் பணியில் சேர்ந்து சிறிது காலம் வேலை செய்தார். 1898 ஆம் ஆண்டு மயிலாப்பூர் சாந்தோம் உயர்நிலைப் பள்ளியிலும்,

1899ஆம் ஆண்டு வேப்பேரியில் தங்கியிருந்தபோது சிதம்பர முதலியார் என்பவருடைய பதிப்பகத்தில் அச்சுப் பிழை பார்த்தல், அகராதி தொகுத்தல் முதலிய பணிகளையும் செய்துவந்தார்.

வேதாந்த நூல் கொள்கையைக் கண்டித்துப் பல சொற்பொழிவுகளைச் செய்தார். இவரையோ இவ்வாறு இவர் சொற்பொழிவு ஆற்றுவதையோ யாரும் மறுத்துரைக்கவில்லை. இவருடைய சொல்லாற்றலைப் புகழ்ந்த செந்தில்நாதையர் என்பவர், 'மாயாவாத தும்சகோளரி' என்று இவருக்கு ஒரு பெயர் கொடுத்தார். இவர் இத்துறையில் இறங்கிச் சொற்பொழிவு செய்யக் காரணமாயிருந்தது வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம் சூளை சோமசுந்தர நாயகருடைய நூல்களில் சிலவற்றைக் கற்றுணர்ந்ததுதான் என்பர்.

இவரது வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவம் ஒன்று இவரை மட்டுமல்ல, இராமலிங்க அடிகளாரையும் இந்தச் சமய உலகத்தையே திரும்பிப் பார்க்க வைத்தது. தாம் வாழ்ந்த காலத்தில் பலரோடு கருத்து வேறுபாடு கொண்டிருந்த கதிரைவேற் பிள்ளை, ''திருவருட் பிரகாச வள்ளலாரின் பாடல்கள் திருவருட்பா ஆகாது; நால்வர் பாடல்களே திருவருட்பாவாகும்'' என்ற சொற்போரை எழுப்பினார். கதிரைவேற் பிள்ளை அப்போரைப் புதுப்பிக்கும் விதமாக, 'மருட்பா மறுப்பு' என்னும் நூல் ஒன்றை எழுதி வெளியிட்டார். இந்நூலை எதிர்த்து அறிஞர் பெருமக்கள் சிலரால் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்குக்குக் கதிரைவேற் பிள்ளையின் மாணவரான திரு.வி.க. சாட்சி கூறினார். அப்போது திரு.வி.க. பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு நாளன்று சாட்சி சொல்லச் சென்றதால், தமது தேர்வை எழுதமுடியாமல் போனது என்று பின்னாளில் குறிப்பிட்டுள்ளார். இதனால், திருவருட் பிரகாச வள்ளலாரின் தொண்டர்களுக்கும் இவருக்கும் சொற்போர் மூண்டு, அதுவே எழுத்துப் போராக ஆனது. இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவர நினைத்த மறைமலை அடிகள், கோ. வடிவேலு செட்டியார், நாகநாத முதலியார், மாயூரம் நமசிவாயம் பிள்ளை, மயிலை சண்முகம் பிள்ளை முதலிய பேரறிஞர்கள் ஒன்றுகூடி இராமலிங்க அடிகளார் இயற்றிய பாடல்கள் 'திருவருட்பா'தான் என்று கூறுதல் தகும் என்று முடிவு செய்தனர். இதற்குப் பிறகு கதிரைவேற் பிள்ளையும் மருட்பா அல்ல் 'திருவருட்பா'தான் என்பதை ஒப்புக் கொண்டார். நீதிமன்றத்தின் தீர்ப்பும் அதுவாகத்தான் இருந்தது. இதுகுறித்த விவரத்தை வள்ளலார் வாழ்க்கைக் குறிப்பில் விவரமாகக் காணலாம்.

மருட்பா மறுப்பு, ஏகாதசி புராணம், சைவ சித்தாந்த சுருக்கம், யாழ்ப்பாணத் தமிழ்ப் பேரகராதி, சிவாலய மகோற்சவ விளக்கம், சுப்பிரமணிய பராக்கிரமம், புத்தமத கண்டனம் முதலிய நூல்களையம், கூர்ம புராணம், சிவராத்திரி புராணம், நைடதம், பழனித் தல புராணம், திருவருணைக் கலம்பகம் போன்ற உரை நூல்களையும் கதிரைவேற் பிள்ளை எழுதியுள்ளார். கதிர்காமக் கலம்பகம் என்ற நூலைப் பதிப்பித்துள்ளார்.

மகாவித்துவான், சதாவதானி, அஷ்டாவதானி, அத்துவித சித்தாந்த மகோத்தாரணா், பெருஞ் சொற்கொண்டல், மாயாவாத தும்சகோளரி, சைவ சித்தாந்த மகா சரபம் முதலிய பல சிறப்புப் பட்டங்களைப் பெற்றுள்ளார்.

பல நேரங்களில் பலரோடும் கருத்து வேறுபாடு கொண்டு தமது கருத்தை நிலை நாட்ட முயற்சித்தாலும், செந்தமிழோடும், சமயத் தமிழோடும் கதிரைவேற் பிள்ளை என்றைக்குமே கருத்து வேறுபாடு கொண்டிருக்கவில்லை என்பதை அவர் இயற்றிய நூல்களே பறைசாற்றுகின்றன. தமிழ் படித்து வாழ்ந்தவர்கள் சிலர், தமிழுக்காகவே வாழ்ந்தவர்கள் பலர். ஆனால், இவர் சைவத் தமிழாகவே வாழ்ந்தார் என்று கூறுவதுதான் பொருத்தமாக இருக்கும்.

முப்பத்து மூன்று ஆண்டுகளே வாழ்ந்து, சமயத் தமிழையும், செந்தமிழையும் வாழவைத்த இவர், 1907 ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார். என்றாலும், அருட்பிரகாச வள்ளலாரின் பாடல்களை 'அருட்பா' என்று அங்கீகாரம் தரச்செய்த சிறப்புக்கும், வள்ளல் பெருமானின் வாழ்க்கையோடு தொடர்புபடுத்திப் பேசப்படும் பெருமைக்கும் உரியவராகத் திகழ்ந்து, பிறவியின் பயனை எய்திவிட்டார். ✱

*நன்றி: தினமணி*



உலகத் திருக்குறள் பேரவை மாநாட்டில் தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்குப் பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத் துணைத் தலைவரும் சமய சமூகசேவையாளருமான திரு. எஸ். தம்பு அவர்கள் வாழ்த்து மடல் வழங்கிக் கௌரவிக்கின்றார்.

## கனடாத் தமிழர் தகவல் நிலைய ஏற்பாட்டில்

# சுடரொளி ஆசிரியர் ஐ.தி. சம்பந்தனுக்கு விருதளிப்பு

சுடரொளி ஆசிரியர் ஐ.தி. சம்பந்தனுக்கு கனடாத் தமிழர் தகவல் நிலையம் விருதும் தங்கப் பதக்கமும் வழங்கிக் கௌரவித்துள்ளது.



சுமார் ஐந்து சகாப்தமாகத் தொடர்ந்து இனநலம் பேணியவாறு சமய சமூக இலக்கியப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட சம்பந்தன் அவர்கள் பல்துறைப் பணியாளர். ஒரு சஞ்சிகை ஆசிரியர். இவ்வாறு பல துறைகளில் ஈடுபட்டு வருபவர். இவரது சேவையை நன்கு உணர்ந்த கனடாத் தமிழர் தகவல் நிலையம் அதன் 19ஆவது ஆண்டு விழாவின்போது தமிழர் தகவல் விருதும் தங்கப் பதக்கமும் வழங்கிக் கௌரவித் துள்ளனர். இவரோடு மற்றும் பலரும் கௌரவிக்கப் பட்டனர்.

தமிழர் தகவல் நிலையம் கடந்த 19 வருடங் களாகச் சமய, சமூக, கலாச்சார மற்றும் பல துறை களில் பணியாற்றி வருபவர்களை இனம்கண்டு விருதுகள் வழங்கிக் கௌரவித்துப் பாராட்டிப் புலம் பெயர் தமிழர்களிடையே இனப்பற்றை வளர்த்து வருகிறது. நிருவாகிகளுக்குத் தமிழ் உலகம் வாழ்த்து களைத் தெரிவிக்கின்றது.

விருது வழங்கும் நிகழ்வும் ஓர் அற்புதமானது. ஒரு தேசிய சபை போன்று அறிஞர் பெருமக்களைக் கூட்டி, ரொறன்றோ நகர சபை சபா பீடத்தில் அமர வைத்து, அவர்கள் முன்னிலையில் விருது வழங்கும் நிகழ்வு விருதிற்கான பெறுமதி யையும் மதிப்பையும் உயர்நிலைப் படுத்துவதான பாரம்பரியம் கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது.



ஈழத் தமிழர்களுக்கென ஒரு தனியரசு இல்லாவிட்டாலும் தமிழ் அமைப்புகள் ஒரு அரசுபோல் தமிழர்களைக் கௌரவிப்பது பாராட்டத்தக்கது.

இவ்விழா 14-2-2010 அன்று ரொறன்டோ நகர சபை மண்டபத்தில், தமிழர் தகவல் பிரதம ஆசிரியர் திரு. எஸ். திருச்செல்வம் அவர்கள் தலை மையில் நடைபெற்றது. இவ்விழாவில் சுடரொளி ஆசிரியர் திரு. ஐ.தி. சம்பந்தன் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இவ்விழாவில் வயலின் வித்துவானும் அமைதியான சமூகப் பணியாளருமான திரு. சிறி ஜெயநாதன், எழுத்து இலக்கணமான திரு. எஸ். ஜெகதீசன், இசைஞானி பூபதி, ஸ்வரஞானி கலாமணி வயலின் வித்துவான் திரு. ஆர்.எஸ். கேசவமூர்த்தி, முப்பந்தைந்து வருட அனுபவ ''நர்த்தக வித்தகி'' பத்மினி ஆனந்த், கணினித்துறை வர்த்தக முன்னோடி திரு. கண்ணன், மிடுக்கான இளைஞர் திரு. ஏமணன், துடிப்பான இளம் தொண்டர் திரு. அஜந்த், மக்கள் முன்னணி சேவையாளர் பாம் மாக் கொனல் ஆகியோரும் விருதும் தங்கப்பதக்கமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

நாட்டுப் பற்றாளர், சுயாட்சிக் கழகத் தலைவர் திரு. நவரத்தினம் அவர்களின் புதல்வர் தமிழ் உணர்வாளர் திரு. ஜெகன்மோகன் அவர்கள் விருதினையும், தமிழ்ப் படைப்பாளர் கழகத்தின் தலைவர் திரு. தங்கவேல் (நக்கீரன்) அவர்கள் தங்கப் பதக்கத்தையும், கவிஞர் பஞ்சாட்சரம் அவர்கள் சான்றிதழையும் திரு. சம்பந்தன் அவர்களுக்கு வழங்கிக் கௌரவித்தனர்.

*





# T.T.S. Solicitors

13C, Hoe Street, Walthamstow, London E17 4SD

**T. THANARAJASINGAM**
Principal Solicitor

**T. Thana Solicitors**

Thana & Co Solicitors ஆக
இயங்கி வந்த சட்ட நிறுவனம்
தற்போது பல சட்ட நிபுணர்களைக் கொண்டு
புதிய சட்ட ஆலோசனை நிறுவனமாக இயங்கி வருகிறது
என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.



சகலவிதமான சட்ட ஆலோசனைகளுக்கும்
தொடர்பு கொள்ளுங்கள்

**07976 660 635**
**020 8521 4686**



# R & S
## AUTO SALES

**Top Quality used car Dealer**



Radha




வங்கியால் உடைமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை விற்பது
எங்கள் விசேட திறன்!

28 ஆண்டுகள் அனுபவம்

**4362 Sheppard Ave, East of Brimley**

**Tel : 416 412 3838**

# ஸ்ரீ விக்ரமராஜசிங்கன்

(ஈழத்தின் கடைசித் தமிழ் மன்னன்)

ஈழத்தின் கடைசி மன்னன் ஸ்ரீ விக்ரம ராஜசிங்கன் ஆவான். இவனைக் கண்டிக் காவலன் என்பர். பெயரைக் கேட்டதும் இவன் சிங்கள மன்னன் என்ற எண்ணம் பலலோருள்ளும் எழும். இவனது வரலாற்றுப் பக்கங்களை மறுவாசிப்புக்கு உட்படுத்தும்போது சிங்கள மன்னன் என்ற கருத்தியல் சிதறுண்டு உண்மைநிலை வெளிக் கொணரப்படும். அப்படியானால் இவன் யார்? இவன் இயற்பெயர்தான் என்ன என்ற வினா எல்லோ ருள்ளும் எழும். இவன் தென்னிந்தியாவில் (தமிழ கம்) கண்டி நாயக்கப் பரம்பரையில் 1780 ஆம் ஆண்டு பிறந்தவன். கண்ணசாமி என்பதே இவனது இயற்பெயர். அப்படியே அழைக்கப்பட்டான். இவ னுக்கு முன்பு ஈழத்தை ஆண்ட ஸ்ரீ ராஜாதி ராஜ சிங்கன் குழந்தையில்லாமல் இருந்தான். அவனின் மைத்துனனே கண்ணசாமி. ஸ்ரீ ராஜாதி ராஜ சிங்கனின் இறப்பிற்குப் பின் 1798இல் கண்ணசாமி என்ற தனது பெயரை ஸ்ரீ விக்ரமராஜசிங்கன் என மாற்றிக்கொண்டு அரியணையில் அமர்ந்தான். இவனே நாயக்கப் பரம்பரையின் கடைசி மன்னன் ஆவான். இதே பதவிக்கு இவருக்கும் ஒரு போட்டி யாளர் இருந்தார். அவர் இராணி உபேந்திரம்மாவின் சகோதரராவார். இருப்பினும் முதல் அடிகர் (Prime Minister) ஆன பிலிமதேலேவ் (Pilimatalawe) கண்ண சாமியைப் பதவிக்குத் தேர்ந்தெடுத்தார். நாட்டைத் தான் கைப்பற்றிக் கொண்ட எண்ணத்தோடு அரிய ணையில் ஏறிய இந்த இளம் மன்னன் பல்வேறு சதிகளை எதிர்கொண்டான். இவன் பதவிக்கு வந்த காலம் ஈழ வரலாற்றின் மிகவும் கொந்தளிப்பான காலமாகும். காரணம் டச்சுக்காரர்களிடமிருந்து பல கடற்பகுதிகளைப் பிரித்தானியர் வென்றனர். ஆனால் கண்டி அரசியலில் அவர்கள் தலையிடவில்லை. ஆனால், அடிகர் (Pilimatalawe) இவரின் மீதுகொண்ட காழ்ப்புணர்ச்சி காரணமாகப் பிரித்தானியாவோடு ரகசியத் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு அவர் களுக்கு நாட்டைக் கைப்பற்ற ஒரு வாய்ப்பை ஏற் படுத்திக் கொடுக்கும் வகையில் மன்னனை அவர் களுக்கு எதிராகத் தூண்டிவிட்டார். ஈழத்தின் கடல் சார்ந்த பகுதிகளில் பிரித்தானியர் வலுவாக இருந்த னர். அதே சமயத்தில் மன்னனின் கொடுங்கோல் ஆட்சியை எதிர்த்துப் போரிடுமாறு தூண்டினார் பிலிமதலேவ். மன்னர் பிரித்தானிய வணிகர்கள் பலரை ஒற்றர்கள் எனச் சந்தேகத்தின் பேரில் கைது செய்து துன்புறுத்தினான். அவர்களில் பலரைக் கொலைசெய்தான். போருக்குச் சந்தர்ப்பத்தை இச் செயல்கள் ஏற்படுத்தின. பிரித்தானியாவின் படை கண்டிக்குள் நுழைந்தது. எந்தவித எதிர்ப்புமின்றி 1815 ஆம் ஆண்டு மாசித் திங்கள் 10 ஆம் நாள் கண்டியை அடைந்தது. பங்குனித் திங்கள் இரண்டாம் நாள் கண்டி இராச்சியம் (Kandiyan Conversion) என்ற ஒப்பந்தத்தின் கீழ் பிரித்தானியாவிடம் ஒப்படைக்கப் பட்டது.

கண்டி காவலன் விக்ரமராஜ சிங்கன் பெயரில் ''கிள்ளை விடு தூது'' என்னும் நூலினை யாழ்ப் பாணத்தில் வாழ்ந்த சிற்றம்பலப் புலவர் பாடிக் கொண்டு மன்னனிடம் சென்றார். வழியிலே ஆங்கி லேயர் மன்னனை பிடித்துக் கொண்டனர் என்பதை அறிந்து ஏமாந்து வீடு திரும்பினார். (ஈழமும் தமிழரும்-அருள் செல்வநாயகம் பக். 52) மன்னன் கைது செய்யப்பட்டு அரசியல் கைதியாகத் தென் னிந்தியாவின் வேலூர் கோட்டைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்குப் பிரித்தானியா வழங்கிய குறைந்த படியைக் கொண்டு இரண்டு அரசிகளுடன் வாழ்ந்தார். பதினேழு வருடங்களுக்குப் பிறகு 1832 ஆம் ஆண்டு தைத் திங்கள் 30 ஆம் நாளில் தனது 52 ஆம் வயதில் நீர்க்கோப்பு (Dropsy) நோயின் காரணமாக மறைந்தார். கண்டி அரச வம்சம் முடிவுக்கு வந்தது. இருப்பினும் இவர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட கண்டி ஏரியும் எண் கோண கட்ட டமும் இலங்கை அழகுகளுக்கு ஆதாரமாக உள்ளது. இவர் பயன்படுத்திய அரசுக் கொடி, நாட்டின் தேசியக் கொடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இலங்கை சுதந் திரம் அடையும் வரை (156 ஆண்டுகள்) மன்னனின் உறவினர்களுக்குப் படி வழங்கப்பட்டு வந்ததாகக் கருதப்படுகிறது. ஸ்ரீ விக்ரமராஜசிங்கனின் ஆட்சிக் காலத்தைப் பற்றி வரலாற்று ஆசிரியர் L.E. Blaze அவர்கள் கூறுமிடத்து ''அவன் முந்தைய அரசர் களைப் போலத் தேசபக்தி கொண்டவனல்ல. அவனது முன்னோர்கள் கலகங்களையும் முற்றுகை களையும் எதிர்த்து நிற்க உதவிய மனோதிடமும் ஒழுக்கப் பண்புகளும் அவனிடமில்லை. அவனை கொடியவன் என்று கூறுவது அர்த்தமற்றது. கொடிய மன்னர்களுக்கும் கொடிய பிரபுக்களுக்கும் பஞ்ச மற்ற நாட்களேயவை. அவன் செய்ததாகக் கூறப் படும் கொடிய செயல்களை அவனே செய்தானா? அல்லது பிற அதிகார வர்க்கத்தினரால் செய்யப் பட்டனவா என்பது கேள்விக்குறியது. பல எழுத் தாளர்கள் கூறுவதைப்போல அவனைக் கொடிய அரக்கன் என்று கருதாமல் சதிகாரர்களின் கைப் பாவை என்று கருதுவதே பொருந்தும். தலைநகரை அழகுபடுத்த அவன் எடுத்த பல நடவடிக்கைகளை மறந்துவிடக்கூடாது. கண்டியின் ஏரியும் எண்கோணக் கட்டடமும் அவனது !'ணிகளாக எப்போதும் கருதப் படுகிறது.

*

# தமிழினத்தின் தன்னிகரில்லா மாவீரன்

க. செல்வநாயகம், எல்.எல்.பி., சட்டத்தரணி

அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு 46 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையின் தமிழ்ப் பேரரசனாய்க் கோலோச்சியவன் மாமன்னன் எல்லாளன். அவனை எதிர்த்துப் படைதிரட்டிச் சிங்கள தேசியத்தை இலங்கையில் நிலைநாட்டப் போராடிய துட்டகைமுனு என்ற சிங்கள மன்னன் பலமுறை முயன்றும் வெற்றியைத் தொட்டிட அவனால் முடியவில்லை.

கடைசியில் வஞ்சனை வலைவிரித்து எல்லாள மன்னனின் முக்கியப் படைத்தளபதியைத் தன்வசப்படுத்தி மாமன்னன் எல்லாளனின் படையின் ஒரு பகுதியைப் பிரித்துத் தன் சேனையுடன் இணைத்து இறுதியில் எல்லாள மன்னனின் படைகளைத் தோற்கடித்துப் பின்னர் இருவருக்கும் தனியாய் நடந்த பலப் பரீட்சையில் இளையவனான துட்டகைமுனு வயது முதிர்ந்த எல்லாள மன்னனை வெற்றி கொண்டான். இதன் மூலம் சிங்கள தேசியத்தை இலங்கையில் அரியணையேற்றினான். இன்றுவரை சிங்கள மக்கள் தங்கள் சுதந்திரத்தை நிலைநாட்டிய புகழ்பெற்ற மன்னன் எனத் துட்டகைமுனுவைப் போற்றி வருகின்றனர்.

இனமானத்தை விலைபேசி சுயநலத்துக்காக எதிரியின் காலடியில் விழுந்து தமிழர் படையை அழித்திட வழிவகுத்த தமிழ்த் துரோகிகளால் அன்று மாமன்னன் எல்லாளன் தோற்கடிக்கப்பட்டான். தமிழ்த் தேசியம் அடிமைக்கோலம் பூண்டது.

வெற்றி பெற்றபோதும் எல்லாள மன்னனுக்கு எதிராகத் தான் பெற்ற வெற்றி நேர்மையான நீதி சார்ந்த முறையில் பெற்ற வெற்றியல்ல என்பதை உணர்ந்தோ என்னவோ மாமன்னன் எல்லாளனின் வீரத்தைப் புகழ்ந்து அம்மனுக்கு நினைவாலயம் எழுப்பினான் துட்டகைமுனு என்று வரலாறு கூறுகின்றது.

பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர்க் காட்சிகள் மாறுகின்றன. தமிழ்த் தேசியத்தின் அடிமை விலங்கொடித்து அதனை அரியணையேற்றவென இருபதாம் நூற்றாண்டின் இராஜராஜன், இராஜேந்திர சோழ மாமன்னர்களின் ஒருங்கிணைந்த மறுபிறவியாய் வந்தவதரித்தார் மாவீரன் பிரபாகரன்.

தன் இணையற்ற திறமையால் இராணுவ மதிநுட்பத்தால் தனக்கென ஒரு வெற்றிப் படையமைத்துக் கடந்த 26 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை அரசையும் மந்திரிப் பிரதானிகளையும் இலங்கை அரசுக்கு முண்டுகொடுக்கும் வெளிநாட்டுச் சக்திகளையும் தன்னைச் சுற்றியே சுழல வைத்து வெற்றி கண்ட மாவீரன். உண்மையைச் சொல்லப்போனால் 26 ஆண்டுகளும் தலைமறைவாயிருந்தே இலங்கையை ஆண்ட மாமன்னன் என்றுதான் சொல்லவேண்டும்.

வீழ்த்தவே முடியாத வீரனும் படையுமென்று உலகம் வியந்துநிற்க, செய்வதறியாது திகைத்தது இலங்கை அரசும் அதன் இராணுவமும். உலக வல்லரசுகளிடமும் பிறநாடுகளிடமும் பெற்றுக் குவித்த போர்க்கருவிகளும் கனரக ஆயுதங்களும் செயலற்றுப்போயின புலிகளின் வீரத்தின் முன்னால்.

யுத்தத்தில் புலிகளையும் பிரபாகரனையும் வெல்வது சாத்தியமில்லை என்றதும் இலங்கை அரசின் தூதர்கள் உலக நாடுகள் பலவுக்கும் சென்று புலிகள் பயங்கரவாதிகள் என்றும் அவர்களால் தென்கிழக்காசிய நாடுகளுக்கே ஆபத்து என்றும் பிரச்சாரம் செய்து அந்தந்த நாடுகளையெல்லாம் புலிகளுக்கு எதிராகச் செயற்பட வைத்தனர்.

இதன் விளைவு பல்வேறுபட்ட பயங்கரவாத இயக்கங்களால் பாதிப்படைந்திருந்த உலக நாடுகள் புலிகளின் உண்மைத் தன்மையையும் போராட்டத்தின் நோக்கத்தையும் உணராது அவர்களையும் பயங்கரவாத இயக்கங்களில் ஒன்றாக இணைத்துத் தங்கள் நாடுகளில் தடைசெய்யப்பட்ட இயக்கமாகப் புலிகளை அறிவித்தனர்.

இப்படி உலகநாடுகள் செயற்படுவதற்கு மூல காரணமே இந்திய அரசின் அணுகுமுறைதான். புலிகளைப் பலவீனமாக்கி அழிக்கவேண்டும் என்பதே இந்திய அரசின் முதல் நோக்கமாக இருந்தது.

அமெரிக்கா, சீனா, ஜப்பான் மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகள் இலங்கை அரசுக்கு இராணுவத் தளவாடங்களையும் பல்வேறு இராணுவ உதவிகளையும் வழங்குவதைப் பார்த்த இந்தியா அந்த நாடுகளைவிடப் பலமடங்கு உதவிகளை இலங்கை அரசுக்குத் தானே முன்வந்து வழங்கியது. இராணுவத் தளபாட உதவிகள் மட்டுமல்லாமல் இராணுவ வீரர்களையும் கொடுத்து உதவியது இந்தியா.

இத்தனையும் தாண்டி மகா அலெக்சாண்டர், மாவீரன் நெப்போலியன் போன்றோரின் சாதனை வரிசையில் தன்னை இணைத்துக் கொண்ட மாவீரன் பிரபாகரன், இலங்கை அரசும் இந்தியா உட்படப் பல உலக நாடுகளும் தனக்கெதிராகத் தொடுத்த அத்தனை தடைகளையும் தன் படையுடன் தனித்தே நின்று வெற்றி கொண்டார்.

இப்படி வெற்றி முரசு கொட்டிய கொற்றவனை உற்றவனாய் வாழ்ந்து உடனிருந்து பயிற்சி பெற்று யுத்தத்தின் வியூகங்கள் அத்தனையும் கற்ற பின் ஒற்றனாய் மாறி எதிரிக்குக் காட்டிக் கொடுத்தான் கருணா என்ற துரோகி. இலங்கை அரசு விரித்த வஞ்சக வலையில் பதவிக்கும் சுகபோகங்களுக்குமாக விழுந்த கருணா என்ற கயமை நெஞ்சன், இலங்கை அரசு மாவீரன் பிரபாகரனின் வெற்றியைத் தட்டிப் பறிக்கத் துணை போனான். இதனால் தமிழ்த் தேசியம் மீண்டும் அனாதையானது.

தமிழ்த் துரோகிகளால் தமிழ் மாமன்னன் எல்லாளனுக்கு எது நடந்ததோ, வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு எட்டப்பனால் எது நடந்ததோ, பாயும் புலி பண்டார வன்னியனுக்குக் காக்கைவன்னியால் எது நடந்ததோ, யூலியசீசருக்குப் புருட்டஸ்சால் எது நடந்ததோ யேசுபிரானுக்கு அவர் சீடர்களால் எது நடந்ததுவோ அதுவே நடந்தது மாவீரன் பிரபாகரனுக்குக் கருணா என்ற துரோகியால்.

மாவீரன் பிரபாகரன் தமிழினத்தின் மங்காத வீரத்தின் சின்னமாகத் தன்மானத் தமிழனாக என்றென்றும் உலகத் தமிழர்களால் போற்றிப் புகழப் படும் போதெல்லாம் கருணா போன்ற இழிகுணம் படைத்த தமிழ்த் துரோகிகள் காறியுமிழப்படுவார்கள்.

மறைந்து வாழ்வதும் பின் விரைந்து வந்து எதிரியைப் பந்தாடுவதும் மாவீரன் பிரபாகரனின் பிறவிக்குணம். நீ விழுந்துவிட்டாய் எனக் கொக்கரிக்கும் தமிழ்த் துரோகிகளையும் சிங்கள வெறிபிடித்த அரசியல்வாதிகளையும் எரித்துவிட எழுந்துவா! சூறாவளியெனச் சுழன்றடித்து சூழ்ச்சிக்காரர்களையும் சிங்கள வெறியாளர்களையும் பந்தாடி தமிழீழ அரசை அங்குரார்ப்பணம் செய்ய நீ விரைந்து வா! உன்னைத் தயார்ப்படுத்தி உன் படையை ஒருங்கிணைத்துப் புறப்பட்டு வா, எதிரிகள் புறமுதுகிட்டு ஓடட்டும்! ✱

# பொங்குக பொங்கல் பொங்கலோ பொங்கல்

பொன் பாலசுந்தரம்

வானமும் பூமியும்
வளம்பல தருக!
ஞானமும் கல்வியும்
நலத்துடன் பெருக!
தானமும் தவமும்
தவநிலைப் பக்தியும்
இனமும் சனமும்
இன்பமாய் வாழவும்
இனியவை எல்லாம்
நனி சிறந்திடவும்
பொங்கட்டும் பொங்கல்
பொங்குக பொங்கல்!

மனைகள் சிறக்கவும்
மங்கலம் பொங்கவும்
உயர்ந்த எண்ணங்கள்
உள்ளத்தில் வளரவும்
இல்லற வாழ்வில்
நல்லறம் பெருகவும்
இணைந்த குடும்பங்கள்
பிணைந்து வாழவும்
வான நீரில்
வயலவன் விதைத்த
நவ தானியங்கள்
பொலிவாய் விளைந்து
எல்லா மக்களும்
நன்றாய் வாழவும்
பொங்கட்டும் பொங்கல்
பொங்கலோ பொங்கல்!

உழவும் தொழிலும்
உயிரினம் காக்கவும்
அளவிலாச் செல்வம்
அருவிபோல் பெருகவும்
ஆவினப் பழங்குடி
மேவின பால்மடி
ஆறாய்ப் பெருகி
மழலைகள் மலர்ந்திட
வீரிய இளைஞர்
வித்தக முதியோர்
சத்துடன் வாழப்
பொங்கட்டும் பொங்கல்
பொங்கலோ பொங்கல்!

காப்பியம் படைப்போர்
யாப்புகள் கோப்போர்
கவிகள் யாத்துப்
புவிதனைத் திருத்தி
சரித்தரம் படைத்தும்
மருத்துவச் சாதனை
மக்களைச் சேரவும்
குருத்துவம் பட்டி
தொட்டியில் வளரவும்
பொங்கட்டும் பொங்கல்
பொங்கலோ பொங்கல்!

இஞ்சியும் மஞ்சளும்
இணைவதைப் போலவும்
பாலும் பாகும்
அணைவதைப் போலவும்
பானை பால் அரிசியின்
உறவைப் போலவும்
மாவிலை தோரணம்
மலர்வதைப் போலவும்
மழலைகள் பட்டாடையில்
மகிழ்வதைப் போலவும்
கரும்பாக வந்து
விருந்தாக நிற்பாய்
பொங்கட்டும் பொங்கல்
பொங்கலோ பொங்கல்!

**மலேசியா, ஈப்போவில் ஐம்பெருங் காப்பியங்கள் மாநாடு**

எதிர்வரும் மே 21 - 23 நாள்களில் ஈப்போ நகரில் ஐம்பெருங் காப்பியங்கள் மாநாடு நடைபெறவுள்ளது. ஈப்போவைச் சேர்ந்த முன்னாள் தலைமையாசிரியரும் நவரத்தினா எண்டர்பிரைஸ் நிருவன உரிமையாளருமான திரு. மாணிக்கம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்.

தமிழகத்திலிருந்து 65 பேராளர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். மருத்துவர் எம்.ஏ. உசேன், இரா. மதிவாணன், உலக நாயகி பழனி, இலலிதா, இராமனுஜம் ஆகியோர் தமிழக ஏற்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கவிநாயகர் கந்தவனத்துடன் இலக்கியச் சந்திப்பு

தொகுப்பு : பத்மா சோமகாந்தன்



கவிநாயகர் கந்தவனம் கனடாவில் காலூன்றிப் பல ஆண்டுகள் உருண்டோடிய பின் தற்போது தன் தாயகத்தில் கால் வைத்த பரவசத்தில் பழைய நினைவுகளை, நண்பர்களை, பசுமையான சம்பவங்களையெல்லாம் இரைமீட்டினார்.

கடந்த பல வருடங்களாக நாம் ஜனித்த பூமியில் ஏற்பட்ட அதிர்வுகள் - வன்செயல்கள் என்பன பல வடிவங்களில் எம்மையெல்லாம் எதிர்கொள்ள எமது சமூகமோ சிதறுகாய்களாக வெடித்துச் சிதறி அங்கொன்றும் இங்கொன்றுமாகத் துண்டு துண்டுகளாகத் தெறித்துவிழுந்து விட்டன. அப்படிச் சிதறி வெடித்துப் போய் வீழ்ந்த பல துண்டுகள் துணிக்கைகள் உலகின் நாலா பக்கங்களிலும் பரவிவிட்டன. இப்படிப்போய்ச் சேர்ந்தவர்களில் கணிசமான தொகையினர் கனடாவைத் தம் புகலிடமாக்கிக் கொண்டனர்.

தாய் மண்ணை விட்டுச் சொந்த வீடு, வளவு, துரவுதோட்டம், உறவு, இனம், சமூகமென யாவற்றையுமிழந்து வெறுங்கையோடு வேற்றூர் அடைந்தாலும் தமது முயற்சி, திறமை, தன்னம்பிக்கை என்பவற்றைக் கைவிடாத எம்மனோர் புகலிடத்திலேயே மெல்ல மெல்ல வேரூன்றித் தழைத்து இன்று தாயகத்தினருக்கும் நிழல் கொடுக்கும் விருட்சங்களாக வியாபித்து வளர்ச்சி பெற்றிருப்பது கடந்த காலத் துயரத்தைப் போக்குவதற்கு ஓரளவு மருந்தாகிறது.

இந்த வரிசையிலே வெளிநாடுகளில் வசிப்பவரைப் பல தளங்களில் வைத்து நாம் அளவிட முடியும். சிலர் இன்னுமே தமது வாழ்வை முன்னெடுத்துச் செல்லக் கூடிய வகையில் ஸ்திரமான நிலையை எய்தாது அரைக் கிணறு பாய்ந்த நிலையில் தவிக்கின்றனர். சிலர் புகலிடத்தையே தமது சொந்த நாடாக, அக் கலாசாரத்துள் தம்மையும் ஆளாக்கி மூழ்கியுள்ளனர். ஒரு சிலர் அங்கும் அங்காகவும் இங்கும் இங்காகவும் பொருந்திவாழும் வல்லமையைத் தமதாக்கியுள்ளனர். ஆனால் ஒரு சிலரோ தாம் எத்தகைய சூழ்நிலையில் வாழ்ந்தாலும் தனது மொழி, கலை, கலாசாரம் என்பவற்றையே முன்னிலைப்படுத்தி அத்தகைய வாழ்வைத் தாம் மேற்கொள்வதோடு ஏனையோரையும் அவ்வழிக்கு இழுத்துச் செல்லும் வலிமையும் ஆற்றலும் மிக்கவராக வாழ்கின்றனர். இத்தகைய நிலையில் தனது புகலிட வாழ்வை வடிவமைத்திருப்பவர்தாம் கவிநாயகர் கந்தவனம் எனில் மிகையில்லை.

பல் கலாசாரத்தையும் மதித்து சுதந்திரமாக அவற்றை அவர்கள் வளர்க்கவும், கொண்டாடவுமான பண்பைப் பெரிதும் வரவேற்கும் நாடு கனடா. பிற இனத்தவர், மொழியினர் தமது கலைகளை வளர்ப்பதற்கான சில கொடுப்பனவுகளைக்கூட அரசாங்கம் கொடுத்து அவற்றை ஊக்கப்படுத்துகின்றது. இவற்றையெல்லாம் கவிநாயகர் கந்தவனம் உரிய முறையில் பலரும் பயன்பெற உதவி, கனடாவின் தமிழ் இலக்கிய, ஆன்மிக விடயங்களை நன்கு நெறிப்படுத்தி வளம்பெறப் பெரும் பணிபுரிந்து வருகிறார். இவருடனான சந்திப்பு ஒன்றை 'மகவம்' கடந்த 29 ஆம் திகதி ஞாயிறு பி.ப. 5 மணிக்கு கொ/ தமிழ்ச் சங்கம் விநோதன் மண்டபத்தில் ஒழுங்கு செய்திருந்தது.

கவிநாயகர் கந்தவனம், தவமணி கந்தவனம் தம்பதி சந்திப்பு நிகழ்வுக்கு 'மகவம்' தலைவரும் திருமணச் சேவைப் பணியாளருமான வேல் அமுதன் தலைமை தாங்கினார்.

கவிநாயகர் தனது உரையில்,

கனடாவில் இடம்பெறும் இலக்கிய முயற்சிகள் அளவிடமுடியாதவை. மாதம் சுமார் 2 நூல்களாவது வெளியிடப்படுகிறது. எழுத்துத் துறையில் மட்டுமன்றி நாடகத் துறையிலும் பலர் சிறப்பாக நாடகங்களை எழுதி, இயக்கி, நடித்தும் வருகின்றனர். இசைத் துறையும் நடனத்துறையும் இன்னும் மேலோங்கி வளர்ச்சி பெற்று வருகின்றதெனில் மிகையில்லை.

இரண்டொரு பத்திரிகைகள் விற்பனைக்கிருந்தாலும், அநேகமான பத்திரிகைகள் ஈழநாடு, உதயம், முழக்கம் போன்றன இலவசமாகவே பெறக் கூடியதாக உள்ளன. இவற்றில் சிறந்த கதை, கவிதைகளோடு நல்ல விளக்கமான கட்டுரைகளும் வெளிவருகின்றன. தமிழர் தகவல் என்ற எஸ். திருவின் சஞ்சிகையில் எழுதியே பலர் எழுத்தாளராகப் பரிணமித்துள்ளனர்.

இவற்றிற்குப் பல வானொலிகளும் அங்கு இயங்குகின்றன பாலபாரதி 'கனடியன் தமிழ் ஒலி பரப்பு' என்ற பெயரில் ஒரு வானொலியை நடத்தி வருகிறார். வானொலிகளின் பங்கும் கணிசமான

அளவில் பல செய்திகளைத் தருவனமாத்திரமன்றி அவற்றிற்கு மேலால் பல சுவையான சந்திப்புகள், இனிய இசை போன்ற நல்ல நிகழ்ச்சிகளை ஒலி பரப்புகின்றன.

எமது தலைமுறையைச் சார்ந்தோர் எமது கலாசாரமும் மொழிப் பற்றும் என்பவற்றிலிருந்து பிறழாமல் ஓரளவு அடுத்த சந்ததியும், இப்பற்று களோடு வாழத் தலைப்பட்டாலும் எமது முயற்சியால் சைக்கிளை வலித்து நாம் மலை மீது ஏறினாலும் இறங்கும்போது நாம் உழக்கிய வீச்சில் அச்சைக்கிள் மெதுவாக இறங்கினாலும் அதாவது எமக்கு அடுத்த தலைமுறை எமது முயற்சியால் ஓரளவு பயன் அடைந்தாலும் தமிழ் படித்தாலும் அடுத்தபடி என்ன...?' என்ற கேள்வி கொக்கியாகவே எல்லோர் மனத்திலும் கொளுவிக் கிடக்கவே செய்கிறது.

இருபது பிள்ளைகள் சேர்ந்தால் ஒரு தமிழா சிரியரை நியமித்துத் தமிழில் கற்பிக்க அரசாங்கம் வசதி செய்து தருகிறது. இதனைப் பயன்படுத்து வோர் யார்? எத்தனை பேர்? இதுவே அங்கு வாழும் பெற்றோர்களைத் தமிழ்ப் பற்றாளர்களைத் தமிழ் மொழி அறிஞர்களை வருத்தும் கேள்வியாக விடை தெரியாத வினாவாக விழிக்க வைக்கிறது எனக் கனடாவில் கலை இலக்கிய முயற்சிகள் பற்றிப் பேசிய கவிஞர் கந்தவனம் குறிப்பிட்டார்.

வேல் அமுதன் தனது தலைமையுரையில்,

ஒன்றரை ரூபாய் என்ற குறுநாவலைத் தனது முதற்படைப்பாக 1954இல் இலக்கிய உலகிற்கு அளித்த கவிஞர் கந்தவனம் இவ்வாண்டு விநாய கப்பா என்ற நூலை வெளிக்கொணர்ந்து இதுவரை 44 நூல்களின் ஆசிரியராக விளங்கும் இவர் லெசூத்து நாட்டில் மூன்று ஆண்டுகள் வாழ்ந்த அனுபவமுள்ளவர். தென்னாபிரிக்காவில் ஆறு ஆண்டுகள் வாழ்ந்த பின்னர்க் கனடாவின் 21 ஆண்டுகள் தொடர்ந்திருந்து இப்பொழுதுதான் தாயகம் வந்துள்ளார். இவரது வரவை மகவர் கலைஞர் வட்டம் மகிழ்ந்து வரவேற்பதோடு இவ் விலக்கியச் சந்திப்பையும் ஏற்பாடு செய்துள்ளது.

> 'இருபது பிள்ளைகள் சேர்ந்தால் ஒரு தமிழாசிரியரை நியமித்துத் தமிழில் கற்பிக்க கனடா அரசாங்கம் வசதி செய்து தருகிறது. இதனைப் பயன்படுத்துவோர் யார்? எத்தனை பேர்? இதுவே அங்கு வாழும் பெற்றோர்களைத் தமிழ்ப் பற்றாளர் களைத் தமிழ் மொழி அறிஞர்களை வருத்தும் கேள்வியாக விடை தெரியாத வினாவாக விழிக்க வைக்கிறது.'
>
> – கவிஞர் கந்தவனம்

இவரது தந்தையார் விநாயகம் 1993 இல் இவரது மணி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடிய வேளையில் ''கவிநாயகர் கந்தவனம்'' என்ற தலைப் பில் ஒரு நூலும் வெளியானது. அம்மலர் எழுத்தாளர் ஜெகதீசன் கவி நாயகர் (தந்தையின் பெயருட்பட) இப்பெயரைக் குறிப்பிட்டுள்ளார். அன்று தொட்டு கவிநாயகர் என்ற சிறப்புப் பெயரும் இவரோடு இணைந்துகொண்டது என்றார்.

தொடர்ந்து சிவனேசச் செல்வன், எழுத்தாளர் மா. குலமணி, கோகிலா மகேந்திரன், பத்மா சோமகாந்தன், கவிஞர் மேமன் கவி, புலவர் செல்லத் துரை என பல இலக்கியவாணர்கள் உரையாற்றினர். நன்றியுரையுடன் இச்சந்திப்பு இனிதே நிறை வேறியது. ✱

## வாழ்க்கைப் பதிவுகள்...!

சுகதினி பானுகோபன்

ஒழுங்குபடுத்தப்பட முடியாத சிதைந்துபோன-
எனது வாழ்க்கைப் புத்தகத்தின்
ஒவ்வொரு பக்கங்களையும் புரட்டிப் பார்த்தேன்!
ஆகா...!
ஆச்சரியம் என்னவெனில்...
என் தேசமக்களின் வாழ்க்கையும்
எனது புத்தகத்தின் பதிவுகளாகவே-
மொத்தத்தில்,
கருவறையில் நானிருக்கையில்...
என் தேசத்தில் பொருளாதாரத் தடை
பசியால் நான் அழுத கண்ணீர் – என்
தாயின் கண்களால் சொரிந்தது
உண்மையான இரத்தக் கண்ணீர்.
நான் பிறந்ததன் பின்
என் தேசப்பஞ்சம், என் தாயின் மார்பகங்களில்
பாலூறவிடவில்லை.
நான் நடக்கத் தொடங்கியபோது ஒரே சீராகப்போர்,
திசைமாறி நடக்க வைத்தது.

நான் படிக்கத் தொடங்கியதும்,
என் பாடசாலை மரத்தடியாய் இருந்தது உண்மை.
நான் –
அமைதியாய்....
சுதந்திரமாய்....
நிம்மதியாய்.......இருந்ததற்கு –
அன்று கழித்த இளமைக் காலமானது
எந்தப் பக்கங்களிலும் சிறுதகவல்கூட இல்லை.
இன்றைய நாள்களில் சுவரோரமாய் ஒட்டிய
துண்டுப் பிரசுரங்களிலும் கதவோரமாய்ச் சாத்திய
கரும்பலகைகளிலும் எழுதியவை,
காத்திருப்புகள் நிஜமாகிவிட்டதால்,
இன்று வாழ்க்கையே கேள்விக்குறியானது.
இருந்தும்...
நாம்...!
இன்னும் நம்பிக்கையை இழக்கவில்லை

## இலண்டன் குறோய்டன் நகரில்

# உரோத்தமி, பிரித்தமியின் பரத நாட்டிய அரங்கேற்றம்

''ஸாண்டில்ய வாரிநாராயண்''

அண்மையில் குறோய்டன் வெயர்வீல்ட் அரங்கத்தில் சிறப்பான பரதநாட்டிய அரங்கேற்றம் நிகழ்ந்தது. இவ்வைபவம் இலங்கை யாழ்ப்பாண ஆவரங்கால் பதியைச் சேர்ந்த ஸ்ரீ வசந்தீஸ்வரன் தம்பதிகளின் புதல்விகளின் நிகழ்ச்சியாகும்.

அரங்கேற்ற நாயகிகள் குமாரிகள் உரோத்தமி வசந்தீஸ்வரன், பிரித்தமி ஸ்ரீ வசந்தீஸ்வரன் ஆகிய நாட்டிய இரட்டையர் ஸ்ரீமதி நளாயினி இராஜ துரையின் சிறப்பு மாணவர்களாவர்.

நிகழ்ச்சி சம்பிரதாய நெறிமுறையுடன் குறிப் பிட்ட நேரத்தில் விநாயகப் பெருமான் ஆடல் வல்லான் ஸ்ரீ நடராஜப் பெருமான் தெய்வீக வழி பாட்டுடன் ஆரம்பாகியது. மரபு சம்பிரதாயப்படி மாதா, பிதா, குலகுரு, வித்யாகுரு, தெய்வம் என்னும் வரிசையில் ஆசிபெற்று வித்யாகுரு சதங்கை கொச்சை வழங்கி நிகழ்ச்சிகளை ஆரம்பித்தனர். நிகழ்வில் அரங்கிற்குத் தகுதியான மிருதங்கம், நட்டு வாங்கம், பாட்டு, வயலின் ஆகிய பின்னணிகள் தமது ஒத்துழைப்புகளை உரியவாறு வழங்கினர்.

அரங்கேற்ற வைபவத்தில் அரங்கேற்ற நாயகி களான உரோத்தமி, பிரித்தமி ஆகியோர் தமக்குப் பொருத்தமான உருப்படிகளை இருவரும் சேர்ந்தும் தனித்தும் உரிய இலயபாவ முத்திரைகளைப் பொருத்தமாக வழங்கிப் பரதநாட்டிய சம்பிரதாய நெறிமுறையைப் பின்பற்றிச் சபையோர் பிரமிக்கும் வகையில் சமர்ப்பித்தனர். சபையோர்களின் ஏகோ பித்த வரவேற்பும் பாராட்டும் ஆங்காங்கே கிடைக்கப் பெற்றன.



குமாரிகள் உரோத்தமி, பிரித்தமி ஆகியோரின் பெற்றோர் ஸ்ரீமதி வசந்தீஸ்வரன் தம்பதிகள் சிறந்த தவம் செய்தவர்கள் என்பது இந்த அரங்கேற்ற நிகழ்வுமூலம் தெளிவாகியது. மேலும் இவர்களின் குலதெய்வமாம் ஸ்ரீ நடராஜ இராமலிங்கேஸ்வரப் பெருமானின் பாரம்பரியமான ஆசியும் நிகழ்வில் பிரதிபலித்தமையும் குறிப்பிடத்தக்கது.

நாட்டிய குமாரிகள் இருவருக்கும் குருவாக அமைந்தவர் ஈழத்தின் சிறப்பு நர்த்தன ஆசிரியர் களில் ஒருவரான ஸ்ரீமதி நளாயினி இராஜதுரை. ஆசிரியர் இலங்கையிலும் இலண்டனிலும் பல நாட்டிய ஆசிரியர்களை உருவாக்கியதுடன், பல அரங்கேற்றங்களையும் நிகழ்த்தியதுடன், பல பரீட் சைகளில் பரீட்சகராக, நடுவராகக் கடமை புரிந்த அனுபவமுடைய சிறப்பு ஆசிரியை. மூத்த நட்டு வாங்க வித்வாம்சினியுமாவார்.

அரங்கேற்றத்தில் காட்சிகள் மரபுவழியில் ''வாக்கு உண்டாம் நல்ல மனமுண்டாம்'' என்னும் விநாயகப் பெருமானுக்குரிய ஔவையாரின் வெண் பாவுடன் புஷ்பாஞ்சலி சிறப்பாக ஆரம்பிக்கப்பெற்று விநாயகர் ஆசியுடனான வரவேற்புக்கரகோசம் இரசிகர்களிடமிருந்து குமாரிகள் உரோத்தமி, பிரித் தமிக்குக் கிடைத்தது. நிகழ்ச்சி வெற்றி தரும் உந்து தலாக அமைந்தது. தொடர்ந்து கண்டகதியில் அலாரிப்பு வெகுசிறப்பாக அமைந்தது. அடுத்து மிஸ்ராப்புத் தாளத்தில் அமைந்த ஜதீஸ்வரம் இராக மாலிகை அமைப்புடையதாக இடம்பெற்றது. இருவரும் மிகநெருடலான அமைப்புடைய ஜதி களுக்கு அடவுகளைப் பொருத்தமாக வழங்கியும் இராகபாவத்திற்கேற்ப அங்க அசைவுகளை வெளிப் படுத்தி ஜதீஸ்வரத்தின் வெளிப்பாட்டைச் சபை யோருக்குப் புரியும் வண்ணம் ஆடினார்கள். இந்நிகழ் வுடன் நாட்டிய குமாரிகளும் பேரொளி வழங்கினர். சபையினரின் பாராட்டு ஒலித்தது. தொடர்ந்து ''தில்லையம்பலந்தனிலே நடம்'' என்ற சப்த உருப் படிக்கு நாட்டிய இளஞ்சுடர்கள் முத்ரா பாவங்களைச் சமர்ப்பித்தும் தமது பாவலய சுத்தமான வெளிப் பாட்டை வழங்கினர். ஸப்தத்தைத் தொடர்ந்து இசை வேளை இடம் பெற்றது. இந்நிகழ்வில் தமிழ் நாட்டுக் கலைஞர் துரை பாலசுப்பிரமணியம் அவர்கள்

வயலில் சிறப்பான ஸ்வரராகக் கோர்வையை வழங்கி கலாரசிகர்களுக்கு இசைத் தாகத்தைத் தீர்த்து, சபையோரின் நன்றியறிதலைக் கரகோசத்தின் மூலம் பெற்றுக் கொண்டார் என்பது ''குன்றின் மேல் விளக்கு'' என்ற நிலையையளித்தது.

இசைவேளையைத் தொடர்ந்து ''வலஜி'' இராகத்தில் அமைந்த வர்ணம் இடம்பெற்றது. இவ் வர்ணம் முருகப் பெருமானின் வள்ளிகாந்தர்வ திருமண வைபவத்தினை வர்ணிப்பதாக அமைந்தது. இந்நிகழ்ச்சியிலும் குமாரிகள் இருவரும் சபையோர் புரியும் வகையில் வைபவக் கருத்தினைத் தமது இலாவகமான அபிநயமூலம் வெளிப்படுத்தி அனை வரையும் புளகாங்கிதம் அடையச் செய்தார்கள். இது நாட்டிய இளம் குமாரிகளின் நுண்மையான கலைத் தகுதிகளை வெளிக்கொணர்ந்தது.

அடுத்து, குமரி பிரித்தமி தனித்து ஆடிய ''யாரோ இவர் யாரோ'' என்னும் சீதா ஸ்வயம்வரக் காட்சியை வர்ணிக்கின்ற நிகழ்ச்சி சிறப்பிடம் பெற் றது. தொடர்ந்து குமாரி உரோத்தமி ஆடிய சண்முகப் பிரியாராக விருத்தம் ''விழிக்குத் துணை'' என்ற வைபவ வர்ணனையும் ''விளையாட இது நேரமோ'' என்ற கீர்த்தனையும் சிறப்பாக அமைந்தன. இவை இரசிகர்களை நன்கு கவர்ந்த நிகழ்வுகளாகும். அடுத்து பிரித்தமி ஆண்டாளின் திருப்பாவைப் பாடல்களுக் கும் உரோத்தமி அம்பாளின் பாதாதிகேஸ அங்க வர்ணனை ஆடையணிகலன்களில் அழகு அலங் காரங்களைப் பிரதிபலிக்கின்ற உற்சவ சம்பிரதாய ''தெம்மாங்கு'' பாடல் காட்சிக்கும் ஏற்ப ஆடல் வழங்கிப் பார்வையாளர்களுக்குப் பக்தி நிலையளிக் கின்ற தன்மையை அளித்தது.

நாட்டிய நிகழ்ச்சியில், அதிமுக்கியமான ''தில்லானா'' நிகழ்வு இடம் பெற்றது. சிம்மேந் திரமதம ராகத்தில் தில்லானா அமைந்து தொடர்ந்து மங்களப் பாடலும் இடம்பெற்றது. தில்லா னாவில் இராக ஜதிப்பிரவாகங் களுக்கு ஈடுகொடுத்து இலயம் பாவம் தவறாமலும் சிங்கம் எப்படிக் கர்வம் உடையதோ எவ்வளவு ஆளுமை பொருந்தி யதோ அப்படியான கம்பீரத் தன்மையை - உணர்வைத் தரு வதாகக் குமாரிகள் இருவரும் ஜதி அடவுகளைக் கையாண்டு அரங் கேற்ற வைபவத்தினை நிறைவு செய்தார்கள்.

அரங்கிற்கு இரு கண் களான நட்டுவாங்கமும் வழங்கிய நம் மாணவிகளை நெறிமுறைப் படி கற்பித்து அரங்கத்தின் மீது நிறுத்தித் தகுதி யளித்த சிறந்த நாட்டிய ஆசான் ஸ்ரீமதி நளாயினி இராஜதுரை என்பது தெளிவானது. மேலும் மிருதங்கம் வாசித்த ஸ்ரீ பவானி சங்கர் சிறப்பான மிருதங்க விற்பன்னர். இசை நாட்டியம் போன்ற பல அரங்குகளைச் சிறப்பித்த பெருமைக்குரியவர். நாதலய சுகமுடைய மிருதங்க வித்வான் ஆவார். நிகழ்ச்சிகளுக்குப் பாடல்களைப் பாடி உரிய இடங்களில் மெருகூட்டிய வாய்ப்பாட்டுக் கலைஞர் யாதவன் யோகநாதனும் இளம் சிறப்புக் கலைஞர் வயலின் கலைஞர் துரை பாலசுப்பிரமணியமும் பொருத்தமான இசைகளை வேண்டிய இடங்களில் வழங்கி நிகழ்ச்சிக்கு மெருகூட்டினார். மேலும் நிகழ்ச்சிக்குக் காரணமாகிய குமாரிகள் உரோத்தமி, பிரித்தமி ஆகியோரின் தாய் தந்தையர் ஸ்ரீமதி வசந்தீஸ்வரன் தம்பதிகள் அவர்களின் வழிப்பாட்டன் பாட்டி தம்பதிகள் யாவரும் குலதெய்வம் வழி பாட்டின்மூலம் இப்பேற்றினைப் பெற்றவர்கள். இவர்கள் ஆசிமூலம் அரங்கேறிய நாட்டிய இளம் இரட்டையர் குமாரிகள் குரு தெய்வ ஆசியுடன் நாட்டிய நட்சத்திரங்களாகக் கலையுலகில் பிரகாசிக் கிறார்கள் என்றே கூறிவிடலாம். அவர்களின் வாழ்வில் அனைத்து நன்மைகளும் கிட்ட வேண்டும் என ஆசி கூறுகிறோம். வெற்றி நிச்சயம் என்பது தெய்வ ஆசிகள் ''சுபம்'', ''மங்களம் பொங்குக'. அரங்கின் அமைப்பு ஒலி, ஒளி, வரவேற்பு, நேரக் கட்டுப்பாடு, உபசரிப்பு எல்லாம் நன்கு அமைந்தன. அதிதியாகவந்த கல்வி இசை சார்ந்த பெரியோர்களும் தத்தமது கருத்தைச் சுருக்கமாகவும், குமாரிகள் உரோத்தமி, பிரித்தமி ஆகியோரின் கல்லூரிக் கல்வி ஆசான்களும் இவர்களின் கல்வி சம்பந்தமான விசேட தகுதிகளையும் தெரிவித்து ஆசி வழங்கினார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. *



# தமிழர் - சிங்களவர் உறவு

நாணயக்காரா, இலங்கை

*(1974இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில், சிங்கள அறிஞர் திரு. நாணயக்காரா அவர்கள் சமர்ப்பித்த ஆராய்ச்சிக் கட்டுரை இது. தந்து உதவியவர் பேராசிரியர் கோபன் மகாதேவா)*

சிங்கள - தமிழ் ஒற்றுமை

உலகத்திலே இருக்கும் வேறு எச்சாதியினிலும் அவர் தம் மொழிகளிலும் பார்க்க சிங்களவருக்கு நெருங்கிய தொடர்பிருக்கிற சாதியத்தினரும் மொழியும் தமிழர்களும் தமிழுமே என்ற உண்மையை அடிக்கடி எடுத்துக்காட்டுவது மிக முக்கியம். சென்ற சில ஆண்டுகளாக இரு சாதியத்தினரிடையே ஏற்பட்டுவருகிற கருத்து வேறுபாடுகளுக்கு மேற்கூறிய நெருங்கிய தொடர்பே காரணமென்பதை அறிவது இரு பகுதியினருக்கும் நன்மை பயப்பதாகும். இவ்விரண்டு விடயங்களைப் பற்றி ஆராய்ந்து பார்ப்பதும் நலமே தரும்.

1. மொழி இனத்தின் முதன்மைக் காரணங்கள் :

ஆரிய நாகரிகத்தின் வழிவந்த அகத்திய முனிவர் தமிழ்மொழியில் இருந்த அருமை பெருமைகளை நோக்கி அம்மொழிக்கு இலக்கணம் அமைத்தார் என்றால் தமிழ்மொழியின் பெருமை சொல்லற்கரியது. தமிழ்த் தெய்வம் எனப்போற்றும் முருகக் கடவுள் தமிழைக் கேட்டுத் தாம் இன்புறுவதற்காகத் தமிழ்ப் புலவராகிய ஔவையார் முன் தோன்றி அரியது, பெரியது, கொடியது எவை என்று கேள்வி மூலமாகத் தமிழின் இனிமையையும் சொற்பொருட்செறிவையும் தானும் அனுபவித்துப் பிறரும் அறிய வைத்தார். தமிழில் தெய்வத்தை வைதாரையும் வாழ வைக்கும் சிறப்பு தமிழிற்கு உண்டு. தமிழின் தொன்மையையும் ஆராய்ந்து செல்கையில் முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் ஆகிய முச்சங்கங்களும் வளர்ந்த நிலப்பாகம் கடலுள் ஆழ்ந்துவிட்டதான துணிபு உண்டாயிற்று. ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலையில் காவியத்தலைவியின் பழம் பிறப்பை, புத்த பீடிகைத் தரிசனத்தால் உணர வைக்கும் பாகத்தில் கடல்கோள் ஏற்பட்டுத் தெற்கேயிருந்த நிலப்பரப்பு நீருள் அமிழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது. இந்நிலப்பரப்பில் வாழ்ந்த மக்கள் ''இலே மீறியர்'' என்ற பெயர் கொண்டு வரலாற்று அறிஞர்கள் அவர்களைப் பற்றிக் குறித்திருக்கிறார்கள். இவர்களுக்கு ஐம்புலன்களை விட ஆறாவது புலன் ஒன்று இருந்ததாகவும் இதனைக் கொண்டு வெகுதூரத்திலுள்ள நிகழ்ச்சிகளையும் உணரக்கூடியதான அறிவு இருந்ததாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். காலக்கழிவால் இந்த மக்கள் அழிவுற்றனராயினும் இவர்கள் மொழி நாகரிகம் கடல் கோளால் கொள்ளப்பட்ட நிலப்பரப்பை விட எஞ்சியிருந்த நிலப்பரப்பில் பரவத் தொடங்கியதாகவும் நாம் ஊகித்துக்கொள்ள இடமுண்டு.

வான்மீகி இராமாயணத்தில் வரும் இலங்கையும் அதனை ஆண்ட இராவணேஸ்வரனும் மேலே கூறப்பட்ட நாகரிகம் இருக்கிறதுபோல, இந்திய நிலப்பரப்பிற்கும் இலங்கைத் தீவு அமைந்தது. கிரேக்க நாட்டை விட கிரீட்டா தீவு நாகரிக வளத்தில் மேம்பட்டிருந்ததுபோல, இந்திய நிலப்பரப்பில் வாழ்ந்தோரைவிட இலங்கையில் வாழ்ந்த இராவணேஸ்வரனுடைய சந்ததியினர் மிக ஆற்றல் படைத்தவராக விளங்கினர். இதற்கு இராமாயணம் சான்று. இதேபோல கிரேக்கரைவிட கிரீட்டா தீவில் வாழ்ந்த அதினீபர் என்பதற்குப் புலவர் வான்மீகியைப்போல 'ஓடெசி' என்ற மாபெரும் புலவர் எழுதிய 'இலியட்' என்ற மாபெரும் காப்பியம் சான்று பகர்கிறது. ஆகவே இந்த இலங்கையில் வாழ்ந்தோர் இலேமுறியருக்குப் பின்வந்த ஆதித் திராவிடராக இருக்கலாம். வான்மீகி இராமாயணத்தில் குறிக்கப்பட்ட இலங்கையும் இலங்காபுரி என்ற இராவணனது நகரமும் அடுத்த கடற்கோளால் அழிவுற்றிருக்கலாம்.

இக்காலத்தில் ஆங்கில மொழி வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்த கிரேக்க, இலத்தீன் மொழிகள் பாபிலோனிய சுமேரிய எபிரேய மொழிகளிலிருந்து வளர்ந்தவையாகும். இவற்றிற்கும் மூலமான ஒரு தாய்மொழி இருந்ததாகவும் அதிலிருந்து 'பிராகிருத' மொழியாக 'பிராஹ்மி' என்ற வரிவடிவம் தோன்றியதாகவும் மொழி வரலாற்று ஆய்வுநர்களது அபிப்பிராயம். எவ்வாறிருந்தபோதிலும் இந்திய மொழிகளான சமஸ்கிருதம், பாளி, தமிழ் எல்லாவற்றிற்கும் இத்தாய் மொழியான ''பிராஹ்மி'' வரி வடிவமே காரணமாயிற்று. தமிழிலிருந்து கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய தென்னிந்திய மொழிகள் கிளைத்தன. இலங்கைக்குப் பௌத்த மதம் வருவதற்கு முன்பு சைவமும் தமிழும் வழக்கில் இருந்ததை ''மூத்த சிவன்'' போன்ற அரசர் பெயரிலிருந்து நன்கு தெரிகிறது. இலங்கையில் பௌத்த மதம் பரவுவதற்கு மறைமொழி ஒன்று தேவையாக இருந்தது. இதனை அசோகச் சக்கரவர்த்தி காலத்தில் பௌத்த மதத்தைத் தழுவிய பிராமணர்களே பாளி, சமஸ்கிருதம், தமிழ் இவற்றை ஆதாரமாகக் கொண்டு சிங்கள மொழியை இலங்கையில் வளர்த்தனர். சிங்களத்தில் அனேக தமிழ்ச் சொற்கள் உருவம் திரிந்தும் திரிபில்லாமலும் வழங்கி வருகின்றன. சில சொற்கள் அப்படியே தமிழ் வடிவத்தில் இருந்தும் கருத்து வேறுபாடு இருத்தலைக் காண்கிறோம்.

2. தமிழ் வளத்தில் நான் காணும் இன்பம்

மகாவம்சத்தின் கூற்றின்படி கி.மு. ஆறாம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த விஜயனும் அவனது தோழர்களும் பாண்டிய நாட்டிலிருந்து கன்னியர்களை வரவழைத்துத் திருமணஞ் செய்த தாகவும் அவர்களின் சந்ததியினர் இலங்கையில் சிறப் பாக வாழ்ந்ததாகவும் அறியமுடிகின்றது. கி.மு. மூன் றாம் நூற்றாண்டில் பௌத்த மதம் இலங்கைக்கு வந்தபோது, தென்னிந்தியாவிலும் பரவிய இம்மதத் தின் சார்பால் இரு நாட்டிற்குமிடையே ஒற்றுமை வளர்வதாயிற்று. சமயம், கலாச்சாரம், வாணிபம் ஆகியன சம்பந்தமான தொடர்புகள் ஏற்பட்டன. கி.மு. இருபத்தைந்தாம் ஆண்டில் அசேலனுடன் போர் புரிந்த இலங்கையில் இராசரட்டை பிரதே சத்தை ஆண்ட எல்லாளன் நாற்பத்தைந்து ஆண்டு களாக நீதியுடன் ஆட்சிபுரிந்தான். கடைசியில் துட்ட கைமுனு எல்லாளனை யுத்தத்தில் வென்றபொழுதும் அந்த நீதி மன்னனை மிகவும் கௌரவித்து எல்லா ளன் இறந்த இடத்தில் சமாதிகட்டுவித்து அம் மன்னன் சமாதிக்கருகே எவ்வித கோலாகல வைபவத்துடன் ஊர்வலம் வந்தாலும், அரசராயினும் எவராயினும் அச்சமாதிக்கு மரியாதை செய்து செல்லும் வழக்கத்தையும் செய்து வைத்தான். இச் சம்பவத்திலிருந்து நீதியுள்ள அரசனாக எல்லாளன் இருந்தமையை மட்டுமல்ல, தமிழ் மன்னன் என் பதையும் மதித்திருந்தான் துட்டகைமுனு மகாராசன்.

3. தமிழ் ஆயிரமாயிரம் ஆண்டுகளானாலும் அழியாத இறவாதமொழி

நான் கற்ற தமிழ் அறிவைக் கொண்டு தமிழ் ஆயிரமாயிரம் ஆண்டுகளானாலும் அழியாத இறவாத மொழி என்பதை உணர்கிறேன். தமிழர்கள் கைகூப்பி வணங்கும் கலியுக வரதர் கந்தசாமி என் தெய்வம் தமிழிற்கே கசிந்துருகும் தெய்வமாயிற்றே. திருச்செந் தூரிலே அலை அலைத்தாலும், அவர் சிலை நிலை குலையாது தமிழைக் காத்து நிற்கையில் எப்படித் தான் அழிவுவரும்? தென்குமரியிலே தெரிந்துவரும் திரைமருங்கில் அழியாக் கன்னியாய் அழகு தமிழ் அணங்காய்க் கோவில் கொண்டிருக்கையில் தமிழுக்கு அழிவிழைப்பார் அழிவதின்றி தமிழ் அழியுமா? அகத்தியனை வளர்த்த தமிழ், தமிழ் வளர்த்த அகத்தியனாய்ப் பொதியில் என்றும் உலாவும் வரை தமிழ் அழியுமா? இவற்றையெல்லாம் அடுக்குவதால் தமிழ் அழியாதென்பதல்ல. தமிழ் அழிவற்ற மொழி என்பதற்கு உறுதியான காரணங்கள் உள. ஒன்று தமிழிற்கு இயல்பாக அமைந்த நெடுங் கணக்கிலுள்ள சிறப்பியல்பு எழுத்துகளில் ஒலி வடிவிலுள்ள ஓசையின் சிறப்பு, தமிழ்ச் சொற்கள் உணர்த்தும் பொருள்திறன் இவற்றிற்கு இலக்கண மாக அமைகிறது திருக்குறள். திருக்குறளைப் படித் தால் ஏன் தமிழ் அழியாத மொழி என்பது நன்கு புலனாகும்.

4. ஈழத்தின் தமிழ் தூய்மை பெறக் காரணம் யாது?

தமிழ் இந்தியத் தென்னகத்திலே பிறந்ததா யினும், இலங்கை வாழ் மக்கள் மத்தியிலேதான் அழகிய பேச்சு உருவில் திகழ்கிறது. தமிழ் தமிழாகப் பேசப்படுகிறது. தமிழ் பிறந்த மண்ணிலே அதனை வழுவின்றித் தமிழர் பேசவில்லை என்பது அவர்கள் குற்றமல்ல. அங்கே தமிழைப் பேசும் சூழ்நிலை அத்தகைய மாற்றத்தைக் கொடுக்கிறது. காரணம் பல பல மொழிகளின் மத்தியிலே தமிழர்கள் வாழ் கிறார்கள். சேரர் வளர்த்த தமிழ் இன்று சேரநாட்டில் இல்லை. இதேபோலப் பாண்டி நாட்டிலும் (மதுரை மாவட்டம்), சோழநாட்டிலும் (சென்னை மாவட்டம்) பேச்சு வழக்கில் சிதைவுகள் அதிகம். காரணம் பிற மொழிக் கலப்புகள் அங்கே அதிகமாக இருந்ததால் சொற்கள் சிதைந்தும் திரிந்தும் குறுகியும் மக்கள் வழக்கில் இயங்குகின்றன. இலங்கையின் வட பகுதியாகிய யாழ்ப்பாண மாவட்டத்திலே வாழும் தமிழர், நாவலர் பெருமான் தமிழைப் பேச்சிலும் எழுத்திலும் வளர்த்த காரணத்தால் தமிழைத் தமிழா கவே பேசுகின்றனர். புத்தகத் தமிழுக்கும் பேசும் தமிழுக்கும் வித்தியாசமில்லை. தென்னிந்தியாவில் சில பகுதிகளில் தமிழர், பேசும் தமிழை, யாழ்ப் பாணத் தமிழர் விளங்கிக் கொள்ளாமல் இடர்ப்படு தலை அனுபவ வாயிலாக நேரே அறியலாம். யாழ்ப் பாணத்துத் தமிழ் பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கி லும் தூய்மை யுடன் விளங்குகிறது. நாவலர் காலத் தின் வணபிதா ஞானப்பிரகாச சுவாமிகள், பண்டிதர் மகாலிங்கம் அவர்கள் போன்ற இன்னும் பல தமிழறி ஞர்கள், தமிழைச் சிறப்பாக வளர்த்த காரணத்தால் சமீபத்தில் சிறந்த இலக்கண வித்துவானாக விளங் கிய வித்துவ சிரோமணி கணேசையர் அவர்கள், சிறப்பாக இலக்கண அறிவைப் பல மாணவர் களுக்குப் புகட்டிய தமிழ் இலக்கண வரம்பு தேய்ந்து போகாது கட்டிக் காத்தார்.

5. மத்தியகாலப் பகுதியில் இலங்கையில் தமிழ்மொழி நிலைமை

இலங்கையில் சேர சோழ பாண்டிய மன்னர் கள் கலப்பால் மத்திய காலத்திற்குச் சிறிது முன்பும் பின்புமாகத் தமிழ் வளர்ச்சி பெற்றது. சிங்களமும் தமிழோடிணைந்த அனேக தமிழ்ச் சொற்களைப் பெற்று வளர்ச்சியடைவதாயிற்று. சிங்கள இலக்கியங் களில் கோட்டை இராச்சியக் காலம் தமிழின் வளர்ச் சிக்கும் ஒரு பொற்காலமாகத் திகழ்ந்தது. ஜெயவர்த் தனபுர யுகம் என்றே புலவர்கள் வர்ணித்துள்ளனர். நல்லூர்த் துணையார் என்ற தமிழ் அரசகுமாரன் ஆறாவது பராக்கிரமபாகுவின் மகள் ''உலோக நாதா''

அல்லது உலகுடையாள் என்ற இளவரசியைத் திருமணஞ் செய்தான். சில ஆண்டுகள் தமிழ் இலக்கிய வளர்ச்சியின் துரிதம்போல அதே இலக்கியக் கருத்துகளை உள்ளடக்கிய சிங்கள காவியங்கள் பல எழுந்தன. புலவர்களை இவ்வரசன் நன்கு ஆதரித்தான். இவர்களுக்குப் பிறந்த மகன் ''ஜயபாகு'' அரசனானான். இவ்வேளையில் சேரநாட்டில் பணிக்கர் குலத்தில் தோன்றிய ''சபுமல் குமா ஜயபாகுவைக் கொன்று அரசனானான். தன் பெயரை ''ஆறாம் புவனேகபாகு'' என்று மாற்றிக்கொண்டு அரசாட்சி புரிந்து வந்தான். இவனுக்கு அம்புலுகல குமாரையா என்றொரு சகோதரன் இருந்தான். இவனும் ஜயபாகுவின் மகன் பண்டிதப் பராக்கிரமபாகுவைக் கொலை செய்து வீரபராக்கிரமபாகு என்ற பெயரோடு அரச பதவிக்கு வந்தான். இந்தப் பணிக்கர் வம்சக் கடைசிக்கோட்டை அரசன் தர்மபாலன் ஆவான். சபுமல் குமாரயா ஆறாம் புவனேகபாகு என்ற பெயருடன் கோட்டை அரசனான காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டையும் ஆட்சிசெய்து வந்தான். வீதாகம மகாதேரரோ யாழ்ப்பாணத்திற்குச் சென்று தமிழில் புத்த தருமத்தை உபதேசித்தார். இக்காலத்தில் காணி பூமிகள் தமிழர்களுக்கு மானியமாக வழங்கப்பட்டன என்று சில ஆசனங்கள் கூறுகின்றன. ஆறாம் பராக்கிரமபாகு சோழ நாட்டையும் கைப்பற்றியதால், இக்காலத்தில் தமிழர்கள் பலர் சுலபமாக இலங்கைக்கு வந்தார்கள். இங்குச் சமயத்தைப் பரவச் செய்தார்கள். தமிழ் இலங்கையில் வளர்ச்சி பெற்றது போன்ற சம்பவங்களை இக்காலத்தில் பாடிய தூதுகாவியங்களில் வரும் வர்ணனைகள் கூறுகின்றன. ஈஸ்வரன் கோவில், மகேஸ்வரர் ஆலயம், பிள்ளையார் கோவில் ஆகிய ஐந்து தலங்களைப் பற்றி இந்தச் சந்தேச காவியங்களில் நன்றாக வர்ணிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து வந்த அமாத்திய குலப் பிராமணர்கள் அரசனுடைய அமைச்சர்களாகப் பதவி பெற்றார்கள். இவ்வாறு தமிழர்களுடன் தொடர்பு பெற்ற காலம் இலங்கை சரித்திரத்தில் வேறு இருந்திருக்கவில்லை. இக்காலத்திலிருந்து கல்வி நிலையங்களில் (பிரவேனாக்களில்) தமிழும் ஒரு முக்கியப் பாடமாகக் கற்பிக்கப்பட்டது. தமிழில் எழுதப்பட்ட வைத்திய நூல்கள் இ போதனைக்குக் கையாளப்பட்டன. தமிழ் அறிஞர்கள், சான்றோர்கள், புலவர்கள், வித்தகர்கள் இலங்கையில் பலர் இருந்தார்கள். வட இந்திய, தென்னிந்தியப் பண்டிதாகள் அரச சபையில் இலங்கைப் பண்டிதர்களோடு பட்டிமன்றத்தில் கருத்தரங்குகள் நிகழ்த்தினார்கள். அரசனால் கௌரவிக்கப்பட்டார்கள். இலங்கையிலிருந்து பல பண்டிதர்கள் தென்னிந்தியாவிலுள்ள தமிழ் மன்னர்களாலும் கௌரவிக்கப்பட்டார்கள். பல தமிழ் நூல்கள் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டன. ''வைத்திய சிந்தாமணி'' என்ற வைத்திய நூல் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. சிங்களத்தில் பல தமிழ்ச் சொற்கள் அப்படியே உருக்குலையாமல் கையாளப்பட்டன. கைப்பு, மல்லி, பத்தியம், மஞ்சாடி, சிந்தூரம், நெல்லி, சாதிலிங்கம், சரக்கு, பல் மாணிக்கம், திப்பிலி, இலவங்கம், கறுவா, பெருங்காயம், களிப்பாக்கு, நீர்முள்ளி போன்ற நூற்றுக் கணக்கான தமிழ்ச் சொற்களைச் சிங்கள நூல்களில் பரக்கக் காணலாம்.

இக்காலத்தில் ஆறாவது பராக் கிரமபாகுவின் அமைச்சருள் ஒருவரான தமிழறிஞர் நன்னூறு துணையார் ''நாமாவலிய'' என்ற முதன் முதல் தொகுத்த சிங்கள அகராதியை அரசவையில் அரங்கேற்றினார். இந்நூல் பதினான்கு சாக்கங்களையும் நூற்றைம்பத்தைந்து செய்யுள்களையும் கொண்டது. இவ்வாறு பல அறிஞர்களே சிங்கள, இலக்கிய, இலக்கண, வைத்திய நூல்களைத் தந்து தமிழும் சிங்களமும் ஒற்றுமையாக வளர்வதற்கு உதவினர். இதை உணர்ந்தோரிடையே எவ்வாறு தமிழ்-சிங்களம் என்ற குரோதம் எழும்? சிங்கள அகராதியைத் தந்த இதே தமிழ் அறிஞர் பௌத்தராகி பாளி மொழியையும் நன்கு கற்றுணர்ந்து ''செலலி ஹினி சந்தேச'' என்ற தூது காவியத்தையும் பாடினார். இக்காவியம் ஆறு பாசை வல்லுநரான தொட்ட கமுவே ஸ்ரீ ராகுல என்பவராக வாழ்ந்தவராவார். இவர் தமிழிலும் வல்லுநராயிருந்து ''புதுகுண அலங்காரம்'' என்ற நூலை இயற்றினார். ''தகம் சொண்ட மால'' என்ற இவரால் இயற்றிய வேறு நூலொன்று தமிழ்-சிங்கள சொற்கள் இடையிடையே இசைந்த மணிப்பிரவாள நடைக்காவியம். இரண்டு, செண்டு, மாண்டு, காவல், கொண்டே, தெல்ல (தாலி) ஒன்பது, வாசல் என்பன உதாரணம். இக்காலத்தில் சனநாதபுரம், புலஸ்திநகர், பொலன்னறுவை (பொற் பட்டினம்) என்ற பெயர்களால் அழைக்கப்படும் பொலனறுவை மிகுந்த செல்வாக்குடன் விளங்கிய காலம். சிவ தேவாலயங்களும் பௌத்த ஆலயங்களும் இராணிக்கும் மன்னனுக்கும் பொதுமக்களுக்கும் வழிபாட்டிற்காகக் கட்டியெழுப்பிய காலம். இந்து சமயமும் பௌத்த சமயமும் பிரிவினையின்றி ஒருங்கே வளர்ந்த காலம். வேதங்களும் திரிபிடகமும் ஒலியெழுப்பிய காலம். வேதப் பிராமணரும் பௌத்தத் துறவிகளும் மதம் வளர்த்த நேரம். கட்டடங்களும் சிற்பங்களும் ஓவியங்களும் புத்துயிர் பெற்று ஓங்கிய காலம்.

''கிரோசந்தேசய'' என்ற சிங்கள நூலில் இந்து சமயப் புராணக் கதைகள் பல காணப்படுகின்றன. சேர, சோழ, பாண்டிய, கூர்ஜரா, தெலுங்கு, கன்னடம் போன்ற நாடுகளிலிருந்து வந்த வியாபாரிகள் போன்றவர்கள் அம்பலங்களில் (மடங்களில்) தங்கி இராமாயணம், மகாபாரதம் போன்ற கதைகளைச் சொல்லி மகிழ்ந்ததாக நாற்பத்திரண்டு செய்யுள் கொண்ட அந்த ''சிராசந் தேசய'' என்ற தூது காவியம் வர்ணிக்கின்றது. தமிழ் நாட்டில் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இளங்கோவடிகளால் பாடப்பட்ட சிலப்

பதிகாரம் என்ற காப்பியத்தில் கோவலன், கண்ணகி, கௌந்தியடிகள் ஆகிய மூவரும் பாண்டி நாட்டிற்குச் செல்லும் வழியில் ஓர் அம்பலத்தில் தங்கியிருந்த போது, கௌசிகன் என்னும் பார்ப்பான் பாண்டிய மன்னன் புகழை அடிக்கடி ஓதி மகிழ்ந்த சம்பவத் தோடு சிராசந் தேசய தூது காவிய சம்பவம் தொடர் புடையதாகக் காணப்படுகிறது. ஆறாவது பராக்கிரம பாகு மன்னன் புகழைக் கூறிய இப்புலவரும், 'தொட்டகமுவ' என்ற இடத்திலுள்ள 'விஜயபா' என்ற பிரிவெனத்தில் (குருகுலவாசம்) சமஸ்கிருதம், பாளி, சிங்களம் ஆகிய பாசைகளுடன் இயல், இசை, நாடகமாகிய முத்தமிழும் விரவிய செந்தமிழையும் கற்பித்தார் என்று கூறப்படுகின்றது.

தென்னிலங்கைக்கும் யாழ்ப் பாணத்திற்கும் ஒரு தூது காவியம் பாடப்பட்டதென்றால் எவ்வளவு தொடர்பு இரு பிரதேசத்திற்கும் இருந்திருக்க வேண்டும் என்பதை அறியலாம். ''கோகில சந்தேசய'' (குயில் தூது) என்னும் காவியமே அத்தூது காவியம். இதனைப் பாடியவர் ''திலக பிரவென (குருகுல வாசம்)வின் தலைவராவார். இந்த கோகில சந்தேசத் தில் ஊர்ப் பெயர்கள் பலவற்றையும், அங்கேயுள்ள இந்துக் கோவில்களைப் பற்றியும் பாடியிருக்கிறார். ஏனைய தூது காவியங்களைவிட இந்நூலில் தமிழர் களுடைய பல உற்சவங்களைப் பற்றிய விளக்கங்கள் காணப்படுகின்றன. ''வெல்லேமடம'' என்ற இடத்தி லுள்ள பிள்ளையார் கோவிலில் கொண்டாடப்படும் தீபாவளியைப் பற்றி நாற்பத்திரண்டாவது செய்யு ளில் விவரித்து ஓதப்படுகிறது. வலிகாமத்தில் பல சாதி வியாபாரிகள் பண்டமாற்று செய்தார்கள் என்றும் தமிழ் அறிஞர்கள் பலர் வாழ்ந்தார்கள் என்றும் குறிப் பிடப்படுகிறது. இங்கே குறிப்பிடும் வெலிகாமம் தென்னிலங்கையிலுள்ளது. ''பையாகல'' என்ற இடத்திலும் தமிழ் அறிஞர்கள் வாழ்ந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. ''செலவிகினி'' சந்தேசய என்னும் தூது காவியம் என்னும் கோட்டையிலிருந்த சிவன் கோவிலைப் பற்றிய தமிழ்த் தோத்திரங்களை எடுத்துக் கூறுகிறது. இந்நூலைப் பாடிய தொட்ட கமுவ ஸ்ரீ ராகுல சுவாமி அறுபத்து நான்காவது பாடலில் நகைகளைப் பற்றித் தமிழ்ப் பெயர் களையே பாடியிருக்கிறார். இசைக் கருவிகளுக்குத் தமிழிலிருந்த பெயர்களை அப்படியே ''சிராசந்தேசய'' என்ற நூலில் காணலாம். எல்லாத் தூது காவியங் களும் பாணாந்துறைக்குச் சமீபமாகவுள்ள நல்லூரைக் குறிப்பிட்டே செல்கிறது. யாழ்ப்பாணம், நல்லூர் போலப் பாணந்துறை, நல்லூர் தமிழர்களுக்கு அக் கால உறைவிடங்களாக இருந்தன என்பது வெளிப் படை.

6. ஆங்கில இராச்சியத்தில் சிங்களத்தின் சீர்குலைவுபோல் தமிழிற்கு இல்லாததேன்?

போர்த்துக்கேயர், ஒல்லாந்தரது ஆளுகை குறுகிய காலத்துடன் நின்றுவிட்டது. ஆயினும் இவர் களது ஆட்சிக்காலத்தில் உத்தியோகத்தில் இருந்த ஆசை காரணமாக சிங்கள தமிழ் மக்களிடையே மொழிப்பற்றுக் குறைந்து கொண்டே வந்தது. ஆனால் இரு சாதியாரிடையேயும் மொழிப் பற்றிலும் பார்க்கச் சமயப்பற்றும் தலைதூக்கி நின்றது. பல குடும்பங்கள் முதலியார் பட்டங்கள், மணியகாரன் பட்டங்களைப் பெறுவதிலும் பார்ப்பதிலும் ஆசை கொண்டமை உண்மை. ஆனால் இந்த இரு அந்நியர் களும் கிறிஸ்தவ மதத்தை வலோற்காரமாகப் பிரிப் பதற்கு ஆசைப்பட்டமையால் இவ்விரு மக்களிலும் பெரும்பான்மையோர் மதத்தை மொழியினும் மேலாக மதித்தனர்.

அக்காலத்தில் விவசாயிகளும், தொழிலாளி களும் கல்வியறிவு குறைந்தவர்களாய் இருந்தவர் களும் மதத்தையும் மொழியையும் விரும்பவில்லை. தமிழரிடையே தமிழ்க் கல்வியைப் பாரம்பரியமாகத் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் மூலம் பெற்றவர்களும் இதேபோலச் சிங்களம் படித்தவர்களும் இலகுவாகப் போர்த்துக்கேய, ஒல்லாந்தப் பாடைகளைப் படித்து விடலாம். அதிகார வர்க்கத்தினரான அவர்களிட மிருந்து சலுகைகளைப் பெறலாம் என்ற நோக்கத் துடன் மதத்தையும் மொழியையும் தழுவினர். இவர் களைவிட சுதேச ஆட்சியில் அரச மானியங்களைப் பெற்றவர்களும் அரச காரியங்களைச் செய்தவர்களும் கிராம ஆட்சியிலிருந்த கிராமினிகளும் சிற்றரசர் களும் அந்நியருக்கு ஆதரவு கொடுத்தனர். அந்நிய ரும் தம்மை ஆதரிப்பவருக்குச் சகல செல்வாக்கு களையும் கொடுத்துக் கௌரவித்தனர். தங்கள் ஆணைக்குள் அடங்காதோரை-அநியாயமாகத் தண் டனைகள் கொடுத்து வாட்டி, வதக்கி அவர்கள் உற்றார் உறவினரையும் ஒறுத்தனர். இதனால் பயம் காரணமாகவும் பலர் மதம் மாறினர்.

இந்த நிலையில் ஆங்கிலேயா ஆட்சி ஆரம் பித்த போது அவர்கள் சமய சுதந்திரத்தில் தலையிடா மல், தாங்கள் முந்திய ஆட்சியாளரிலும் நல்லவர்கள் என்று நம்ப வைத்தனர். ஆனால் கிறிஸ்தவ மதத் தையும் ஆங்கில மொழியையும் ஏற்றவர்களுக்கு உத்தியோக உயர்வுகள், பட்டம் பதவிகள் கொடுத்துக் கௌரவித்தனர். இதனால் மிக விரைவாக மக்கள் மதம் மாறினர். ஆங்கில மொழியைப் படித்தனர். ஆங் கிலேய கலாச்சாரங்களை விரும்பினர். இந்த நிலை தமிழரிலும் பார்க்கச் சிங்களரிடையே கூடுதலாக ஏற் பட்டது. பல பௌத்த குடும்பங்களாய் இருந்தாலும் பலர் மதமாற்றத்தை விரும்பாதவர்களாக இருந் தார்கள். இக்காலத்திலே (ஆங்கிலேயர் ஆட்சியின் நடுப்பகுதியிலே) யாழ்ப்பாணத் தமிழர்க்குள்ளே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களும் சிங்களவர்களுக் குள்ளே வண அநாகரிக தர்மபால அவர்களும் கிறிஸ் தவ மதத்தை எதிர்த்து சைவத்திற்கும் பௌத்தத்திற் கும் தொண்டு புரிந்தார்கள். ஆனால் இருவரும் ஆங்கில மொழியைக் கற்றுக்கொண்டனர். இம்மொழி

யறிவால் வண அநாகரிக தர்மபாலா அவர்கள் வெளிநாடுகளிலும் பௌத்தமத போதனைகளைப் பரப்பினர். ஆறுமுகநாவலரவர்கள் தாம் ஆங்கில அறிவைப் பெறக் காரணமாயிருந்த வண பேர்சிவல் பாதிரியாருக்குத் தமிழைக் கற்பித்து அவர் மூலம் அச்சியந்திரம் பெற்றுத் தாம் இயற்றிய சைவநூல் களையும் இலக்கண இலக்கிய நூல்களையும் அச்சிடுவித்துத் தமிழையும் சைவத்தையும் நன்கு வளர்த்தார். இந்த வழியில் தமிழர்கள் தமிழை வளர்த் தார்கள். சிங்களத்திற்கு அச்சியந்திரம் பிற்காலத் திலேயே அறிமுகமானது. இதனால் பல சிங்கள ஏட்டுச் சுவடிகள் அழிந்தொழிந்து போயின. சிங்களத் திற்கான ஆக்க வேலைகள் குறைவென்றே கூறலாம்.

7. தமிழில் பிறமொழிகள் கலப்பதில் இருக்கும் கஷ்டங்கள்

தமிழ் தனித்துவமான ஒரு மொழி. பிற மொழிக் கலப்பு இலகுவில் தமிழுடன் சம்பந்தப் படாது. தமிழில் ஒலிவடிவில் வர்க்க எழுத்துகள் சொற்களும் மறைந்து நிற்கின்றன. வரிவடிவில் அவ் வெழுத்துகளில்லை. ஆனதால் வரிவடிவிலுள்ள பிற பாசைச் சொற்களைத் தமிழ் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டு இயங்குத் தன்மையில்லை. உதாரணமாக "Boy" என்ற ஆங்கிலச் சொல்லில் வரும் 'ஆ' இற்குத் தமிழில் எழுத்தில்லை. சிங்களம், சமஸ்கிருதம், பாளி மொழிகளில் 'ஆ' இற்குச் சமமானமான வர்க்க எழுத்துண்டு, தமிழில் பிறமொழிச் சொற்கள் கலப் பதால் மொழி வளர்ச்சிக்கு இடையூறாவதுடன் தமி ழிற்கே தனித்துவமாக உரிய சொற்கள் மறைந்து விடும். கூடியளவு பிற மொழிச் சொற்கள் கலவாது எழுதுவதற்கும் பேசுவதற்கும் பழகிக்கொள்ளுதல் வேண்டும்.

8. நான் பெற்ற செல்வம்

தமிழை நான் கற்றுக்கொண்டதை, நான் பெருஞ்செல்வமாக மதிக்கின்றேன். பலர் கருதுவது போலத் தமிழரும் சிங்களம் கற்கவேண்டும் என்ற கொள்கையால் சிங்கள மொழி விருத்தியடையும் என்பது என் அனுபவத்திற்கு மாறானது. இக்கட்டுரை யில் மத்திய காலப்பகுதியில் இலங்கையில் தமிழ் மொழி நிலைமை பற்றிக் கூறியபோது கோட்டை இராச்சியத்தில் ஒரு பொற்காலமாக விளங்கிய சமயம் இலங்கையில் தமிழறிஞரும் தமிழ்மொழியும் சிங்கள இலக்கியங்களையும் இதிகாசங்களையும் வளர்த்த வரலாறும் சிங்கள மொழி சிறப்புடன் பரவியமையும் விபரமாகக் கூறியுள்ளேன். மொழிகளுள் சிறந்த மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட ஒரு இனத்தை வேறொரு மொழியைக் கற்கவேண்டும் என்று வலிந்து நிற்பதனால் இன வேற்றுமையும் பகையும் ஏற்பட்டு நாடு பிளவுபடுமே தவிர நன்மை கிடையாது. ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு இன ஒற்றுமை வேண்டும். எத்தனை இனம் உண்டோ, அத்தனை இனமும் பேசும் மொழிக்கு ஒற்றுமை வேண்டும். எத்தனை இனம் உண்டோ, அத்தனை இனமும் பேசும் மொழிக்கு ஜனநாயக உரிமை வேண்டும். அப்போது இன ஒற்றுமையுடன் மொழி யும் தாமாகவே வளரும்.

வாழ்க, சிங்கள - தமிழ் நல்லுறவு *

## ANNUAL VAIGASI FESTIVAL AT SRI THENDAYUTHAPANI TEMPLE, K.L.

***The auspicious Annual Vaigasi Festival was observed at Sri Thendayuthapani Temple located 50 miles north of Kuala Lumpur along the old trunk road to Ipoh city.***



***Early morning a series of prayers conducted and attended by hundreds of devotees around and distant towns.Morning some 300/350 devotees carried Pal Kudam/ milk pot Agni Chati & kavadies.***

***Refreshment and vegetarian meals were served throughout the day by the temple and various Hindu organisations.***

***Late in the noon the chariot paraded on its annual preplanned route around the town residential area and back to the temple accompanied by temple priest/ temple president ,committee members and devotees along the route. A large number of Chinese devotees were seen along the route with offering with trays of -fruits/incense .***

# பால் நீர் உறவு

நுணாவிலூர் கா. விசயரத்தினம்

ஆவின் பாலும் இயற்கை நீரும் அன்றிலிருந்து இன்றும், என்றும், இணைபிரியா நண்பர்களாய், நெருங்கிய உறவினர்களாய், ஆசை மிகு அன்புச் சகோதரராய் வாழ்ந்து வருபவர்கள். இவர்கள் தொன்மை வாய்ந்த சீரிய வாழ்வைக் கண்டவர்கள். மனிதனுக்கு ஊட்டச் சத்தைக் கொடுத்து அவன் வாழ்வை மேம்படுத்துவதே அவர்கள் மேலாய நோக்கு. கோயிற் பூசைகளிலும் முன்னிடம் இவர்களுக்கே. இவர்களின்றிப் பூசை நடப்பதில்லை. தமக்கென வாழாப் பிறர்க்கென வாழ்பவர்கள்.

அவள், இவற்றை நன்கறியாப் பேதைப் பெண். ஆனால், அவளோ ஓர் ஆரணங்கு. காதல் அவள் கடைக்கண் கதவைத் தட்டியது. காதல் கொண்டாள். கட்டிளங் காளை ஒருவனைக் கண்டாள். கட்டுண்டாள். படர் கொடியானாள். அவன் கரம் பற்றினாள். திருமணம் முடிந்தது.

தலைவனைக் களிப்படையச் செய்வதுதான் அவள் புரியும் விந்தை. பல் சுவை உணவுகள் தயாரிப்பாள். பரிமாறுவாள். அன்று தன் கைப்பட பசுப் பாலை முறுகக் காய்ச்சித் தலைவனுக்குக் கொடுக்க விரும்பினாள். நெருப்பை வளர்த்துப் பாலை ஊற்றி அடுப்பில் வைத்துக் காய்ச்சினாள். குய்ப்புகை கண்ணில் புகுந்ததையும் அவள் பொருட்படுத்தவில்லை. பாலைக் காய்ச்சிக் கொண்டேயிருந்தாள். சூடு ஏற ஏற பாலிலுள்ள நீர் ஆவியாக மாறிப் பாலிலிருந்து பிரிந்து மேலே போய்க் கொண்டிருந்தது. தனது நண்பனாய் ஒன்றாயிருந்த நீர் தன்னை விட்டுப் பிரிந்து போய்க் கொண்டிருக்கிறானே என்று மிகவும் கவலையடைந்தது பால். ஆனால், அப்பெண்ணோ பால் முறுகக் காய்ச்சப் படவில்லையேயென்று மீண்டும் மீண்டும் சுவாலையாக நெருப்பை எரித்தாள். நீர் மேலும் மேலும் ஆவியாகப் பிரிந்து சென்று கொண்டிருந்தது. "என் நண்பனான நீர் இல்லாமல் இனி எனக்கென்ன வாழ்வு?" என்று பால் நினைத்து ஒரு முடிவுக்கு வந்தது.

"நண்பன் என்னை விட்டுப் பிரிகின்றான். அவனின்றி என்னால் வாழ முடியாது. ஏன் நான் வாழ்வேன்? யாருக்காக நான் வாழவேண்டும்? என்னை இக்கதிக்காக்கிய இப்பெண்ணுக்கும் இனி நான் உதவப்போவதில்லை. என் உயிர் மாய்ப்பேன். இஃது உறுதி" என்று கூறிக் கொண்டு நெருப்பில் பாயப் பொங்கி எழுந்தது பால்.

இதைக் கண்ணுற்ற அப்பெண், பால் அவமாகப் போய் விடுமே என்றெண்ணி கொஞ்ச நீரை எடுத்துப் பொங்கியெழுந்த பாலில் ஊற்றினாள். பொங்கியெழுந்த பால் சிரித்த வண்ணம் அமைதி கொண்டு அடங்கி விட்டது. தன் நண்பனான நீர் மீண்டும் வந்து விட்டானே என்று சந்தோசப்பட்டது பால். பாலும் நீரும் மீண்டும் உறவாகி விட்டனர். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?

தலைவனுக்கு முறுகக் காய்ச்சிய பாலைக் கொடுத்து நல்லதொரு சான்றிதழைப் பெற்றுக் கொண்டாள் தலைவி: நடந்தேறிய நிகழ்வுகள் யாவும் தலைவியின் கணினியில் ஓட, பால் நீர் உறவின் முழு அர்த்தத்தையும் அவள் இன்று நன்கு புரிந்துகொண்டாள்.

அவள் தன் தலைவனை நாடிச் சென்று 'பால் நீர் உறவை' அவனுக்கு விரிவாக எடுத்துக் கூற, அவனும் அந்தப் பால் நீரில் பொதிந்துள்ள கருத்தாழத்தைப் புரிந்துகொண்டு, தன் தலைவியைக் கட்டி அணைத்து அவளின் புத்தி விவேகத்தைப் பாராட்ட, அவளும் நாணிக் கோணி அவன்மேற் படர, தலைவன் தலைவியர் இருவரும் பால் நீர் உறவாகினர். ✱

### TAMIL GIRL COMES ALL ISLAND FIRST IN GCM A/L 2009 (BIO) RESULTS



Mythily Sivapathasundaram, Student of Shaiva Mangaiyar Kazhagam, Colombo ranked all Island first in Bio stream with the "Z" score of 2.9388 in the GCE (A/L/) 2009 results that was released recently.

Mythily, a native of Jaffna had her school education at Shaiva Mangaiyar Kazhagam, Wellawatte.

Anton Johnirajah of Hartly College, Point pedro is ranked second with a Z-Score of 3.249 in the Maths stream..


Nipuna Randunu of Ananda College Colombo has scored the highest Z Score with 3.3.43, in the Maths stream.

# சைவ முன்னேற்றச் சங்கத்தின் தலைவர் திரு. வாமானந்தன்

ஐ.தி. சம்பந்தன்

தொண்டரும் தலைமைக்கு வரலாம் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் சைவ முன்னேற்றச் சங்கத்தின் தலைவராக திரு. வாமானந்தன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.





கடந்த 33 ஆண்டுகளாகப் பிரித்தானியாவில் சைவத் தமிழ்ப் பணியாற்றி வரும் சைவ முன் னேற்றச் சங்கத்திற்கு ஒரு பாரம்பரிய வரலாறு உண்டு. ஆண்டுதோறும் ஜனநாயக முறைப்படி ஆண்டுப் பொதுக் கூட்டமும் நிருவாகிகள் தெரிவும் சட்டவிதிகளுக்கு அமைய முறையாக நடத்திவரும் ஒரு அமைப்பு இது. விரிவான பல சைவத் தமிழ்ப் பணிகளை மேற்கொண்டுவரும் சங்கத்தில் பலர் நீண்டகாலமாகத் தொண்டர்களாகப் பணியாற்றி வரு கின்றனர். இச்சங்கத்தின் வளர்ச்சிக்கும் பெரிதும் உதவி வருகின்றனர்.

இந்த வருடத்தில் சங்கத்தின் 33ஆவது ஆண்டின் தலைவராகத் திரு. வாமானந்தன் அவர்கள் சங்கத்தின் ஆண்டுக் கூட்டத்தில் ஒருமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். இதுவரை காலமும் பதவி களை விரும்பாமல் ஒரு தொண்டனாக அவர் இருந்து வந்ததை நான் அறிவேன். அதாவது 1995லிருந்து சங்கத்துடன் இவர் நெருக்கமாக இருந்து சங்கத்தின் வளர்ச்சிக்குப் பல துறைகளிலும் பணியாற்றி வந்தவர் என்பதையும் நான் அறிவேன். சங்கத்தின் பணி களைச் செய்துவந்த ஒருவருக்கு அதன் 33ஆவது ஆண்டுத் தலைவராகத் தலைமைப் பதவி ஏற்க வைத்திருப்பது பெருமைக்குரிய நிகழ்வாகும். இதை யிட்டு நாம் எல்லோரும் மகிழ்ச்சியடைகிறோம்.

சங்கத்தின் எதிர்கால வளர்ச்சிக்குப் பல்துறை ஆற்றல் படைத்தவர் தலைமையில் இருப்பது சாலப் பொருத்தமானதே. மக்களோடு மக்களாக, முதியோர் நிலைய நிகழ்ச்சிகளைக் கச்சிதமாகவும், நகைச்சுவை யாகவும் அவர்களை மகிழ்விக்கும் ஆற்றலும், அறிமுகவிழாக் கருத்தரங்குகள் நடைபெறும்போது காலத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப கருத்துகள் பகிடிகளைச் சரளமாகப் பாவித்து மக்கள் கூட்டத்தை மகிழ்விக்கும் ஆற்றல் கொண்டவர் திரு. வாமன் அவர்கள்.

கொடுக்கும் பணியைப் பொறுப்புடன் செய்யும் கடமை உணர்வு கொண்டவர். இசைமேதை திரு. பொன். சுந்தரலிங்கத்தின் உறவாலும், திருமதி வாமானந்தன் அவர்கள் இசைக்கலையை வளர்த்து வருவதனால் போலும் தலைவர் திரு. வாமன் அவர்கள் இசையிலும் கலையிலும் ஆர்வம் கொண் டவராவார். அதே வேளை சமயப்பற்று மிக்கவராக விளங்குகிறார்.

சங்கத்தின் வளர்ச்சிக்கான குணாம்சங்களைக் கொண்ட திரு. வாமானந்தன் சரியான நேரத்தில் தலைமையை ஏற்றுள்ளார். குடும்பச் சுமை மிக்க வராகவிருந்தும் சங்கத்தின் சுமையைத் தலைமேற் சுமக்க முன்வந்த தொண்டர்க்குத் தொண்டனாகப் பணியாற்றும் திரு. வாமானந் தன் காலத்தில் சங்கம் மேலும் பல சாதனைகளைப் புரியும் என்ற நம்பிக்கையுண்டு.



சங்கத்தின் பணிகளில் ஆர்வமும் அர்ப்பணிப்பும் கொண்ட திரு. வாமன் அவர்கள் தலைமையில் சங்கம் மேலும் வளர்ச்சியடைய சைவத் தமிழ் மக்களுடன் இணைந்து சுட ரொளி வெளியீட்டுக் கழகமும் வாழ்த்துகிறது. *

# தமிழ்-ரஷிய கலாச்சார உறவை வளர்ப்பதில் புதிய முயற்சிகள்



தமிழ்-ரஷிய கலாச்சார உறவை வளர்க்கும் புதிய முயற்சிகள் இப்போது நடைபெற்று வருகின்றன.

இந்தியாவுக்கும், ரஷியாவுக்கும் இடையே பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பாரம்பரிய நட்புறவு நிலவி வருகிறது. குறிப்பாக ஒன்றுபட்டசோவியத்து யூனியன் இருந்த காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையே அரசியல், அறிவியல், கலாச்சாரம் என அனைத்துத் துறைகளிலும் மிகுந்த ஒத்துழைப்பும், நட்புறவும் நிலவியது.

சோவியத்து யூனியன் இருந்த காலத்தில் தமிழ்-ரஷிய கலாச்சார உறவில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. ரஷிய அரசியல், அறிவியல், இலக்கிய நூல்கள் ஏராளமானவை தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன. ரஷிய மொழி கற்பதற்காக இங்கிருந்து ஏராளமானோர் அந்நாட்டு அரசு சார்பில் மாஸ்கோவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் தமிழுக்கெனத் தனித்துறை ஏற்படுத்தப்பட்டது.

1987 ஆம் ஆண்டு சோவியத்து தலைநகர் மாஸ்கோவில் நடைபெற்ற இந்தியத் திருவிழாவில் அப்போதைய பிரதமர் இராசீவ்காந்தி தலைமையில் ஆயிரக்கணக்கான இந்தியப் படைப்பாளிகளும், குறிப்பாகத் தமிழகத்திலிருந்து அதிக படைப்பாளிகளும் பங்கேற்றனர்.

சோவியத்து யூனியன் பிரிந்த பின், இத்தகைய உறவில் பின்னடைவு ஏற்பட்டது. இந்தச் சூழலில், தமிழ்-ரஷிய கலாச்சார உறவை வளர்ப்பதற்கான புதிய முயற்சிகள் இப்போது தொடங்கியுள்ளன.

ரஷிய கலை விழா : இந்திய ரஷிய கலாச்சார நட்புறவுக் கழகத்தின் ஏற்பாட்டில் வரும் மே மாதம் தமிழகத்தில் ரஷிய கலைவிழா நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்க 25 ரஷிய கலைஞர்கள் தமிழகம் வர உள்ளனர். பாலே நடனம், ரஷிய நாட்டுப்புற நடனம், ஜிம்னாஸ்டிக், மேஜிக், பாரம்பரிய ரஷிய இசைக் கருவிகள் மூலம் இசை நிகழ்ச்சி எனப் பல நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. சென்னையில் தொடங்கி, பின்னர் மாமல்லபுரம், தஞ்சாவூர், திண்டுக்கல், மதுரை, சேலம், கோவை, ஊட்டி ஆகிய நகரங்களில் ரஷிய கலைஞர்கள் கலை நிகழ்ச்சிகளை நடத்த உள்ளனர்.

ரஷியாவில் திருவையாறு : இதனைத் தொடர்ந்து அடுத்த ஆண்டு ஜூலை மாதத்தில் தமிழகத்தைச் சேர்ந்த 25 கலைஞர்கள் ரஷியா செல்ல உள்ளனர். சீர்காழி சிவசிதம்பரம் தலைமையிலான இக்குழுவினர் ''ரஷியாவில் திருவையாறு'' என்ற தலைப்பில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்த உள்ளனர்.

திரைத்துறையில் உறவு : சோவியத்து யூனியன் இருந்தபோது வீரபாண்டிய கட்டபொம்மன், தில்லானா மோகனாம்பாள், முதல் மரியாதை, வேதம் புதிது எனப் பல தமிழ்த் திரைப்படங்கள் ரஷிய மொழியில் 'மாற்றம்' செய்யப்பட்டன. குறிப்பாக ''தண்ணீர், தண்ணீர்'' திரைப்படம் ரஷியாவில் 360 பிரதிகள் பிரிண்டிங் செய்யப்பட்டது. பின்னர் இதிலும் தேக்கம் ஏற்படடது.

இப்போது தமிழ்த் திரைப்படங்கள் ரஷிய மொழியில் டப்பிங் செய்வது மீண்டும் தொடங்கியுள்ளது. இதற்காக ''இந்திய-ரஷிய திரைப்பட பரிமாற்றக் குழு'' என்ற அமைப்பு சென்னையில் தொடங்கப்பட்டுள்ளது.

''இப்போது சந்திரமுகி படம் மொழி மாற்றம் செய்து முடிக்கப்பட்டுள்ளது. அசல், புன்னகை மன்னன் ஆகிய படங்கள் மாற்றம் செய்யப்பட்டு, ரஷியாவில் விரைவில் திரையிடப்பட உள்ளன.

மேலும், இந்த அமைப்பின் மூலம் ரஷிய திரைப்படப் பிரிவு விரைவில் சென்னையில் தொடங்கப்படவுள்ளது. அதன் பின்னர் ஏராளமான ரஷியமொழித் திரைப்படங்கள் சென்னையில் தயாரிக்கப்படும் என்று இந்திய ரஷிய நட்புறவுக் கழகப் பொதுச் செயலாளர் பி. தங்கப்பன் தெரிவிக்கிறார்.

வீடியோ கான்ஃபரன்ஸிங் முறையில் தமிழக மாணவர்களுக்கு ரஷிய மொழியைக் கற்பிக்கவும், மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் தமிழ் பயிலும் மாணவர்களுடன், தமிழகத்தில் உள்ள தமிழ் அறிஞர்கள் வீடியோ கான்ஃபரன்ஸ் மூலம் உரையாடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இவை யாவும் தமிழ்-ரஷிய கலாச்சார உறவில் புதிய பரிமாற்றத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. *


# DIRECT PROPERTY SERVICES

## Residential Sales, Lettings & Management

கிழக்கு இலண்டனில்
உங்களுக்கு சேவை செய்யக் காத்திருக்கின்றது

## Call us now for

⁂ Lettings ⁂ Sales ⁂ Finance ⁂ Mortgages ⁂ Business Loans



**LANDLORDS**

- Free Valuation
- No obligation
- Guaranteed Rent Scheme
- Available for Short Term & Long Term
- Efficient and Quick Landlord Payment
- Best Rent Achieved
- Friendly Professional Advice from Our Experienced Representatives

**TENANTS**

Looking to Rent
Make the Right
Move

We Always have
a Large selection
of Properties
available to Rent



**Please call us with your requirements**

**020 8472 4447**

159 High Street North, East Ham, London E6 1JB
Tel : 020 8472 4447/ Fax : 020 8471 8126

# பெண் வர்த்தகப் பெருந்தகையினால் தமிழ்த் தாயகத்தில் ஒரு மன நோயாளர் நிலையமும் அனாதைச் சிறுவர் பராமரிப்பும்

படித்துப் பட்டதாரியாகிக் கல்வி அமைச்சில் கல்விப் பணிப்பாளராகவிருந்து பணியாற்றியவர் சுவர்ணா நவரத்தினம் அவர்கள். அப்பெண்மணி அங்குள்ள அரசியல் சூழ்நிலையால் அப்பதவியை விட்டு 1992இல் பிரித்தானிய நாட்டுக்கு வந்திருந் தார். அங்கு வந்ததும் தனது ஆற்றலையும் அறிவை யும் வர்த்தகத் துறைக்குத் திருப்பினார். திறமையும் விடாமுயற்சியும் உள்ளவர்கள் எத்துறையிலும் முன்னேற்றம் காணலாம் என்பதைச் சாதித்த ஒரு சாதனையாளர் இவர்.

பிரித்தானிய நாட்டில் வீட்டுத் துறை சம் பந்தப்பட்ட தொழில் மிகப் பிரசித்தி பெற்றிருப்பது எல்லோர்க்கும் தெரியும். வீடு வாடகைக்குக் கொடுத் தல், வாங்குதல், விற்றல் உள்ளடக்கிய சயி எஸ்ரேற் ஏசன்சி (Sai Estates & lettings) என்ற பெயரில் ஒரு வர்த்தக நிறுவனத்தை நடத்தி வருபவர். கடந்த பல வருடங்களாக இந்நிறுவனத்தைத் திறம்பட நடத்தி அதனால் ஈட்டிய பணத்தை நல்ல நற்பணிகளில் செலவு செய்துவருபவர். இவர் சமய-ஆத்மிகத்தில் ஈடுபாடு உடையவர்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் போன்று அனாதைப் பெண்களுக்கு உதவ வேண்டும் என்ற சிந்தனையால் போலும் தமிழர் தாயகத்தில் பெண் மனநோயாளர்களுக்கு ஒரு நிலை யத்தை ஆரம்பிக்கவேண்டுமென்ற சிந்தனை அவர் உள்ளத்தில் தோன்றிற்று. இதைச் செயற்படுத்து வதற்காக யாழ்ப்பாணத்திலுள்ள பல பிரமுகர்களின் உதவியுடன் ஒரு அரச சார்பற்ற நிறுவனத்தைப் பேராசிரியர் முன்னாள் யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொன் பாலசுந்தரம் பிள்ளை அவர் கள் தலைமையில் உருவாக்கி அதை ஒரு தரும நிறுவனமாகப் பதிவுசெய்துள்ளார். அதற்கு அவரது தாய் தந்தையரின் நினைவாக ''நவமங்கையர் இல்லம்'' என்ற பெயரைச் சூட்டி செயற்படத் தொடங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் கோப்பாய்-இராஜ வீதியில் தேசியக் கல்வியியல் கல்லூரிக்கு முன்பாக ''நவ மங்கையர் இல்லம்'' கட்டிட வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பலகோடி ரூபா செலவில் அமைந்து வரும் இக்கட்டட வேலைகள் இவ்வாண்டு இறுதியில் பூர்த்தியாகிவிடும் என எதிர் பார்க்கப்படுகிறது.

18 வயதிற்கு மேற்பட்ட மன நலம் பாதிக்கப் பட்ட பெண்களை இவ்வில்லத்தில் வைத்துப் பார மரிப்பதற்கான விரிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. அத்தோடு அனாதைச் சிறுவர்களை யும் பராமரிக்கும் திட்டமும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த 25 வருட போர்ச் சூழலால் பல பெண் கள் பாதிக்கப்பட்டு விரக்தி அடைந்தவர்களாக உள்ளது யாவரும் அறிந்ததே. அவர்களை முறையாக வைத்துப் பராமரிப்பதற்கு இந்த இல்லம் பயன்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நல்ல தருமப் பணியை மேற்கொண்டுவரும் சய் எஸ்ரேஹ் ஏசன்ஜி உரிமையாளர் சுவர்ணா நவரத்தினம் அவர்கள் பிரித்தானிய நாட்டில் வாழும் தமிழர்கள் நலம் கருதித் தருமகாரியங்கள் செய்துள்ளார்.

சவுது என்ட கடற்கரையில் சைவர்கள் அந்தி யேட்டி செய்வதற்கு வசதியாக ''ஆத்ம சாந்தி'' என்ற பெயரில் ஒரு கட்டடத்தைப் பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஊடாகச் செய்துள்ளார். உரும்பிராயில் பாடசாலை ஒன்றிற்குத் தண்ணீர் தாங்கி ஒன்று அமைத்துக் கொடுத்துள்ளார். கல்வி பயிலும் மாணவர்கள் நன்னீரைக் குடிப்பதற்கு இது நன்கு பயன்படுகிறது.

தேடும் செல்வத்தைத் தருமப்பணிக்கு உதவி வரும் சுவர்ணா நவரத்தினம் அவர்களின் முயற்சி யால் தமிழர் தாயகத்தில் உருவாகிவரும் மன நோயாளர் இல்லத்திற்குப் பிரித்தானியா வாழ் தமிழர் களும் உதவிக்கரம் நீட்டி அதன் செயற்பாட்டிற்கு உதவ முன்வருவார்களாக! ❋





மலேசியா, பேரா மாநில கௌந்தான் வரசித்தி விநாயகர் கோயிலில் நடைபெற்ற தைப்பூச விழாக் காட்சிகள்

# ஒரு தமிழ் மலையின் சரிவு

பேரறிஞர் அமுதுப்புலவர் அவர்கள் பிரிவு...!

## அஞ்சலிப்பா

கவிஞர் வேலணையூர் பொன்னண்ணா,
டென்மார்க்

முத்தமிழே! எம்தமிழர் உள்வாங்கும் மூச்சே!
நற்றமிழின் உயர்வுக்காய் தினமுழைத்த நாற்றே!
சித்தமெலாம் தமிழ் சுமந்த செங்கடலே - உன்
சீர்கொண்ட தமிழ்ப்பணிக்கு கடன்பட்டோர் தமிழர்!
மெத்தப் புகழ்உரைக்கின்ற மேலான தமிழிலக்கியத்தைச்
சொத்தாகச் சுமந்தபடித் தமிழ்ச்சுடரே எங்குசென்றீர்?

அறங்கூறும் தமிழ்மறையின் அடியொற்றி வாழ்ந்தாய்!
அறிவுலக மேதைகளின் அடிபோற்றி நடந்தாய்!
வரும்காலச் சந்ததிக்கும் வழிசொல்லி நின்றீர்!
உலகம் வரவேற்று நிற்கையிலே நீரேங்கே சென்றீர்?
பரம்பரையின் மூத்தயினம் பாராண்ட தமிழரினம்
படும்துயரை யேசுவிடம் முறையிடத்தான் சென்றீரோ?

தமிழ்மூச்சு நின்றதுவே எம்வாழ்வில் அமுதுஐயா!
தமிழுணர்வை ஊட்டிடவே இனியிங்கே யாரையா?
தமிழறிஞர் மனமெல்லாம் உம்பிரிவால் உணர்வற்றுப்போச்சு!
தமிழ்வளர்த்த உம்கரமும் தணலெரித்துப் போச்சு!
தமிழன்னை விழிகளிலும் நீர்தேங்கிப் போச்சு!
தரணியெலாம் உம்பிரிவால் துயரோங்கிப் போச்சு!

தலையடங்க திருக்குறளின் ஒலியடங்கிப் போச்சு!
தமிழர் திருவிளக்கின் ஒளிகூட தானடங்கிப் போச்சு!
தமிழ்ப்பார்வை ஒளிக்கண்கள் இருள்மூடிப் போச்சு!
தமிழ்ச்சாலை வழிகாட்ட இனியாரோ அமுதையா!
தமிழ் போற்றும் நல்வாழ்வில் நீவிர்வாழ்ந்தீர் - என்றும்
நிலம்போற்றத் தமிழர்நெஞ்சில் நீவிர் வாழ்வீர்!

# உனைக் கரங்குவித்து வணங்குவோமே!


பல்மருத்துவ கலாநிதி இளமுருகனார் பாரதி,
சிட்னி, அவுத்திரேலியா

தேமதுரஞ் சொட்டச்சொட்டக் கவிதை யாலே
செல்வா!எனைநீ வாழ்த்திநின்றாய்! செந்த மிழ்ப்பூந்
தாமரைகள் பூத்திடவே தடாகம் அமைத்துத்
தனித்தமிழை வளர்த்துநின்றாய்! தகைமை பெற்றாய்!
நாமகிழ்ந்து தினம்போற்றச் ''செவாலியர்'' விருதை
நற்குணத்தோய் பெற்றனையே! பற்ற றுத்துக்
காமருநல் வடிவம்நீத்துக் காத்தரின் சேவடியிற்
கலந்தவுனைக் கரங்குவித்து வணங்கு வோமே!!

சீலம்மிகு பெருவாழ்வில் இழைத்துப் பெற்ற
செல்வங்கள் ஐயிரண்டுஞ் சிறக்கச் செய்தாய்!
காலமதாற் பட்டழியும் தமிழே மலரக்
கடமையென மரபுதனை ஓம்பிக் காத்தாய்!
கோலச்செங் கதிரோன்போற் கவிக்கிரணம்
குவலயத்திற்குப் பாய்ச்சித் ''தமிழ்க்கங்கை'' யானாய்!
பாலனவன் இராச்சியத்திற் பணிஇயற்றப்
பக்குவம்பெற் றனையோ? சாந்தி! சாந்தி!!

நடைக்கெனவே உனக்கென்றோர் பாணி தேர்ந்து
நறுந்தேனுஞ் சர்க்கரையுங் கலந்தாற் போலப்
படைத்தளித்த செந்தமிழ்ப்பா மரபு கவிகள்
பகாந்திடுமே உன்புகழைப் பாரில் அன்றோ?
''கிடைத்திடுமோ அமுதேயுன் தீஞ்சொல் அமுது?
கீற்றுமதி போலெங்கு உற்றாய்''என் றேங்க
அடைக்கலமாய் இயேசுபிரான் பாதார விந்தம்
அணைத்துய்த்த அடைக்கல முத்தே சாந்தி!

# பொன் விழா ஆண்டில் யோகா



'யோகா' என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் நகை மாளிகை வர்த்தகப் பெருமகன் திரு. யோகநாதன் அவர்களது 50ஆவது பிறந்த நாள் நண்பர்களால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தன் சுயமுயற்சியினால் பல துறைகளில் வளர்ச்சி கண்டவர். காவல் துறை வீரனாகவிருந்து நகைக்கடை முதலாளியாக வளர்ந்தவர். உழைத்து ஈட்டிய பணத்தைப் பயனுள்ள வழிகளில் பயன் படுத்தும் நல்உள்ளமும் பண்பும் கொண்டவர். தேடிய செல்வத்தை நாட்டுக்கும், மக்களுக்கும், சமயத்திற்கும், கல்விக்கும் வழங்கி மக்களிடையே நற்பெயரைத் தேடிக்கொண்ட யோகாவுக்கு நல்ல துணைவியார் கிடைத்தது மற்றுமோர் திசை. அதற்கு மேலாகத் தமிழ்க் கலையோடு கல்வியில் மேல் நிலை அடைந்துவரும் இரு புதல்விகளாலும் யோகாவின் அகவை 50 செழிப்படைந்துள்ளது. அந்தச் செழிப்பான வாழ்க்கை மேலும் மேலும் செழிப்படைந்து நீடூழி வாழச் சுடரொளி வெளியீட்டுக் கழகம் வாழ்த்துகிறது.



# விடை பெறுவீர் அமுதுப் புலவரே!

என். செல்வராஜா, நூலகவியலாளர், இலண்டன்

அமுதுப் புலவர் என எம்மவரால் அன்புடன் அழைக்கப்படும் இளவாலை அடைக்கலமுத்து அமுதசாகரன் அவர்கள் 23-2-2010 அன்று காலை 11.00 மணியளவில் தன் உலக வாழ்வை விட்டு நீங்கிய செய்தி என் இதயத்தைக் கனக்கச் செய்தது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இளவாலைக் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் அமுதுப் புலவர். இளவாலை தம்பி முத்து - சேதுப்பிள்ளை தம்பதியினரின் மகனாக 1918 ஆம் ஆண்டு செப்டெம்பர் 15ஆம் திகதி பிறந்த இவர், தன் ஆரம்பக் கல்வியைப் புனித சார்ள்ஸ் வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரியிலும், உயர் கல்வியைக் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும், பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் பெற்றுக் கொண்டவர். யாழ்ப்பாணம் காவிய பாடசாலையிலும், நாவலர் பாடசாலையிலும் தமிழ்த்துறைப் பண்டிதர் வகுப்பில் பயின்றிருந்த இளவாலை அமுது, பேராதனைப் பல்கலைக் கழகத்தின் வித்துவான் பட்டத்தையும், இலங்கைக் கல்வித் திணைக்களத்தின் பண்டிதர் பட்டத்தையும் பெற்றவர்.

ஓய்வுபெற்ற முதலாம் தர ஆசிரியரான இவர், இளவாலை அமுது என்று ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் பரவலாக அறிமுகமானவர். 1984 ஆம் ஆண்டு முதல் தாயகத்திலிருந்து குடும்பத்துடன் புலம்பெயர்ந்து வந்து இலண்டன் மிடில்செக்ஸ் பிரதேசத்திலுள்ள ஹரோ நகரின் நோர்த்ஹோல்ட் பகுதியில் வாழ்ந்து வந்தார்.

சுமார் ஏழு தசாப்தங்களாக இலக்கியத் துறையில் வேரோடி விழுதெறிந்து ஆலமரமாக வீற்றிருக்கும் அமுதுப்புலவரின் முதலாவது ஆக்கம் 1938ஆம் ஆண்டு சத்தியவேத பாதுகாவலனின் மாதா அஞ்சலி என்ற தலைப்பில் பிரசுரமாகியிருந்தது. இதே காலப் பகுதியில் ஆசிரியர் கலாசாலையின் தூதன் என்ற சஞ்சிகையின் ஆண்டுமலருக்கு மலராசிரியராகப் பணியாற்றியும் இளவயதிலேயே தன் திறமையை அமுதுப்புலவர் வெளிப்படுத்தியிருந்தார். இளம் பத்திரிகையாளராக 1940 ஆம் ஆண்டில் இளைஞர் அமுதசாகரன், போதினி என்ற பத்திரிகையையும் நடத்தியிருந்தார். அன்று முதல் இன்று வரை இலங்கையின் அனைத்துத் தேசிய பிராந்திய தமிழ்ப் பத்திரிகைகளிலும், பெரும்பாலான சஞ்சிகைகளிலும், உலகெங்கும் வெளியாகியுள்ள பல்வேறு சிறப்பு மலர்களிலும் அமுதுப் புலவரின் படைப்புகள் வெளிவந்திருக்கின்றன.

நூலுருவில் வெளிவந்த இவரின் வெளியீடுகளான நெஞ்சே நினை, இவ்வழிச் சென்ற இனிய மனிதன், காக்கும் கரங்கள், அன்பின் கங்கை அன்னை தெரேசா, மடுமாதா காவியம் அல்லது மருதமடு மாதா காவிய மல்லிகை, அன்னம்மாள் ஆலய வரலாறு, அமுதுவின் கவிதைகள், இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள் ஆகிய நூல்கள் ஈழத்துத் தமிழ் மக்களின் இல்லம் தோறும் வலம் வந்து மனத்தைத் தொடும் வசனங்களாலும் மரபுக் கவிதைகளாலும் அவர்களிடையே இலக்கிய மணம் பரப்பி வருகின்றன.

அன்னை தெரேசாவின் வாழ்க்கை வரலாற்று நூலும் மடுமாதா காவியம் என்ற ஈழத்து மருதமடுத் திருத்தலம் பற்றிய காவிய நூலும் கடந்த காலங்களில் பரவலாக விதந்து பேசப்பெற்றவை. அமுதுவின் கவிதைகள் நூல் அமுதுப்புலவரின் கவிதா புலமையை கச்சிதமாகப் பதிவு செய்து வைத்திருக்கும் ஒரு இலக்கியப் பெட்டகமாகும். இன்று வளரும் இளம் கவிஞர்களின் கைகளில் தவழ்ந்துவரும் இந்த நூலும் அண்மைக் காலத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

அமுதுப் புலவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டினைக் கௌரவிக்கும் வகையில் பல்வேறு அறிவு சார் நிறுவனங்களும் அவரைக் கௌரவித்திருக்கின்றன. இவரின் சமய இலக்கியத் தொண்டினைக் கௌரவித்து 2004 ஆம் ஆண்டில் உரோமாபுரியில் பரிசுத்த பாப்பரசரினால் செவாலியர் விருது வழங்கப்பட்டது. பின்னர் 2005 இல் இலங்கை அரசு கலா பூர்ணம் விருதையும் அமுதுப் புலவருக்கு வழங்கியிருந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டத்தையும் அதே ஆண்டில் வழங்கியிருந்தது. 2006 இல் கனடாவிலிருந்து தமிழர் தகவல் நிறுவனம், தமிழர் தகவல் விருதினையும் வழங்கியிருந்தது.


தனது தொன்னூற்றிரண்டு வயதினைக் கடந்து இதுவரை திடகாத்திரமான முதிய இளைஞனாக நம்மிடையே வலம்வந்த அமுதுப் புலவர் இன்று நம்மிடையே இல்லை என்ற செய்தியை மனது என்னவோ நம்பவே மறுக்கின்றது.

அமுதுப் புலவரின் முன்னைய படைப்புகளின் ஒருங்கிணைந்த தொகுப்பாக 1600 பக்கங்களில் வெளியாகிய ''இளவாலை தமிழ்கங்கை அமுது ஐயாவின் அற்புதப் படைப்புகள்'' என்ற நூலின் வெளியீடும், அமுதுப் புலவருக்கு மூதறிஞர் பட்ட

மளித்துப் பாராட்டு விழாவும் இம்மாதம் ஏழாம் திகதிதான் (7-2-2010) வெகு சிறப்பாக நடந் தேறியிருந்தது.

முத்தமிழ் அறிஞர் தாசீசியஸ் அவர்களின் தலைமையில் இலக்கிய விழாக்களின் வழமைக்கு மாறாக மண்டபம் நிறைந்த அரங்கில் இலண்டனில் வாழும் இலக்கியப் பிரமுகர்கள் வாழ்த்துக்கூற, அமுதுப் புலவர் 92 வயதிலும் தளராத உறுதியுடன் அங்கு மேடையில் புன் முறுவலுடன் வீற்றிருந்ததை இனி வாழ்வில் மறக்கமுடியாது.

அந்த மேடையிலே, இலங்கையிலிருந்து வந்திருந்த வீரகேசரி ஆசிரியர் ஸ்ரீ கஜன் உள்ளிட்ட ஒவ்வொருவருக்கும் ஐந்து நிமிடமும், பத்து நிமிடமும் கறாராகப் பேச வழங்கிக் கொண்டிருந்த தலைவர் அமுதுப் புலவருடைய பேச்சை மட்டும் நிறுத்தவேயில்லை. சலிப் பையே தராத-நகைச்சுவையும், நெகிழ்வும், கிண்டலும் கலந்த அந்த உரை இன்னமும் எனது காதுகளில் ரீங்காரமிடுகின்றன. 45 நிமிடங்களுக்கும் அதிகமாகப் பேசியிருப்பார். குறுக்கீடில்லாத அந்த உரையே அவரது இறுதி உரை என்பதை அவரே அன்று மேடையில் கூறிய வேளை சிரித்தவர்களும் சிரிப்பை மறந்தனர். அன்றைய மேடையில் நான் உரை யாற்ற வாய்ப்புக் கிட்டவில்லை. அதனை அவர் நன்றாக உணர்ந்துமிருந்தார். தனது உரை யிலேயே அதனைக் குறிப்பிட்டதுடன், பின்னர் மேடையில் அவரது நூலைப் பெற்றுக்கொள்ளச் சென்ற வேளையில் ஒரு தந்தையின் பரிவு டனும், பாசத்துடனும் என்னைக் கட்டி யணைத்து உச்சிமோந்து-நூலை வழங்கியமை என்னை மெய்சிலிர்க்க வைத்ததுடன் கண்களில் நீரையும் வர வழைத்தது.




அன்றைய நிகழ்வினை ஒழுங்கு செய்த அமுதுப் புலவரின் குடும்பத்தினரும் விழாக் குழுவினரும் தமிழ்கூறும் நல்லுலகிற்கு ஒரு பாரிய திருப்திகரமான சேவையைச் செய்திருக்கிறார்கள். தன் வாழ்நாளில் வளமுடனும், நிறைவுடனும் ஒரு கவிஞராக வாழ்ந்து, முதுமையை எட்டிய ஒரு முழுமையான மனிதரை அவர் வாழ்ந்த தமிழ் அறிவோர் சமூகம் வாழ்த்தி மனநிறைவுடன் வழியனுப்பி வைத்துள்ளது. இத்தகைய திருப்திகரமான தும் மன நிறைவானதுமான வழியனுப்புதல்கள் எங்கள் அனைவருக் கும் வாய்ப்பதில்லை.

அமுதுப் புலவரின் ஆத்மா சாந்தியடைய எனது பிரார்த்தனைகள்.

*

## 23-2-2010 மறைந்த அமுது ஐயா ஆக்கிச் சென்ற 2008 இன் தொகுப்பு நூல்

பேராசிரியர் கோபன் மகாதேவா, 6-3-10

கமுகினைப்போல் நேராக முதிர்ந்துஉயர்ந்த கருத்துடனே
அமுது ஐயா, மூதறிஞர், ஆக்கியநூல் நான் வியந்தேன்.

அன்புஊறும் நற்கங்கை, அன்னை தெரேசாவைப் பற்றிப்
பண்புஉயர்த்தும் இருநூற்று முப்பத்துமூன்று பக்கம்...
தன்காதல், தன்பக்தி, தன்தமிழ்ப் புலமைஎலாம்
உன்னதமாய் ஊட்டி, எம்உளம் உருக எழுதிச் சென்றார்.

'நெஞ்சே-நினை' என்னும், நூலின்இரண்டாம் பாகம்..
விஞ்சித் தமிழ்வளர்த்த வேதத்தார், பாதிரியார்
ஞானப் பிரகாசர் வாழ்க்கையைத் தன்பொன்னான
பேனாவால் நாலாறு பத்து அலகில் படைத்து அகன்றார்.

அதுபோன்றே, அடுத்தபடி, அமுதர்,தன் வேலிக்குக்
கதியால் போட்டவர்கள் ஆறொன்பது ஆண்களையும்
மதிநுட்ப மங்கையராம் ஆறொன்று பெண்களையும்
நதிபோன்ற தமிழ்நடையில் நன்றியுடன் போற்றி வைத்தார்.

அடுத்ததாய் அவர்நூலில் அமுதுமழை பொழிவதுவோ
மடுமாதா மருதத்தின் மகிமை தரும் காப்பியமாம்.
வதவதென்று வன்னிநில வெள்ளம்போல் பாய்ந்தோடும்
அதன்நீளம் ஒருநூற்று அறுபத்தாறு பக்கங்கள்...

அந்திம ஐந்தாம் பாகம், அலகுகள் அறுநால் பத்தில்
பொந்துவிளை தேன்போல, போதைக்கு மதுபோலச்
சந்தமும் சத்தும்கொள் சம்பிரதா யச்செய்யுள்
ஐந்துபத்து இருமுறையும், ஆறிரண்டும், தலைப்புடனே,
ஆயிரம்பா டியஅமுதர் பாயிரம்சேர் பெட்டகமாய்
ஆயிரத்து இருநூறு அலகுஉடைய பெருநூலாய்
வெளிவந்த தரத்தை இவன்வெகுவாக வாழ்த்துகிறேன்
அழியாமல் யுகங்களுக்கு அமுதுவின் நூல்நி லைத்திடவே!

வணக்கம்.
அமுதுப் புலவரின் ஆத்மா ஆண்டவனின் அடியில்
ஆயிரமாண்டு ஆறட்டும்!!

# கோவை வசந்த வாசல் கவிமன்றத் திருவிழா

கோவை வசந்த வாசல் கவிமன்றத்தின் 14ஆவது ஆண்டு கவிதைத் திருவிழா அண்மையில் நடைபெற்றது. இதில் மன்றச் செயலாளர் தமிழருவி கோவை கோகுலன் கவிஞர்களை வரவேற்றார்.

காலையிலிருந்து மாலை வரையில் நடைபெற்ற இக்கவிதைத் திருவிழாவில் தமிழ் நாட்டைச் சேர்ந்த பிரபலக் கவிஞர்களும் கோவை மாவட்டக் கவிஞர்களும் கலந்து சிறப்பித்தனர். 478 கவிஞர்களின் கவிதைகள் அடங்கிய ''வசந்த வாசல் கவிதைக் களஞ்சியம்'' என்ற நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

சுடரொளி வெளியீட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட உலகக் கவிதைப் போட்டியில் கோகுலன் பரிசு பெற்ற கவிஞர் என்பது குறிப்பிட்டத் தக்கதாகும்.

திருவிழாவில் சிறப்புப் பேச்சாளராகக் கலந்து கொண்ட சுடரொளி வெளியீட்டுக் கழகத் தலைவர் கலாநிதி பொன் பாலசுந்தரம் அவர்கள் பெண் கவிஞர்கள் கவியரங்கில் சிறப்புச் சொற்பொழி வாற்றினார்.






# புதினம்
## PUTHINAM

மாதமிருமுறை இலவச இதழ்

ஆசிரியர் : ஈ.கே. ராஜகோபால்

'ஈழகேசரி' வெளியீட்டு நிறுவனத்துக்காக

15 ஆண்டுகளாகத் தொடர்ந்து இலண்டனில் மாதமிருமுறை வெளிவரும் ஒரே இலவச இதழ். தபாலில் பெற விரும்புவோர் முத்திரைச் செலவான £12.00 பவுண்டுகளை மட்டும் EELAKESARI என்ற பெயருக்குக் காசோலையாக அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

அலுவலக முகவரி

**PUTHINAM**

38, Moffat Road, London SW17 7EZ

Tel 020 8767 8004

Mob : 07735 346 890

E-mail : editor@londonputhinam.co.uk



17 ஆண்டாக ஸ்ரீமதி யோகா தில்லைநாதனின்

# கானக்குயில் - 2010

03-07-2010 சனிக்கிழமை

**GREEN FORD ASSEMBLY HALL** இல்

கானக்குயில் 2010 நிகழ்ச்சியில் பாட விரும்பும் சிறுவர்கள், இளையோர், பெரியவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு (வீட்டு முகவரி, தொலைபேசி எண், பிறந்த திகதி, மாதம், வருடம் ஆகிய விவரங் களுடன்)ப் பாட விரும்பும் இரு சினிமா பாடல் களையும் எழுதி அனுப்புங்கள். தெரிவு செய்யப் படும் பாடல்கள் தமிழ் சினிமாவில் இடம் பெற்று ஆண், பெண் தனியாகப் பாடும் பாடல்களாக இருக்கவேண்டும். வயதுக்கேற்ப மூன்று பிரிவு களாகப் பாடகர்கள் பிரிக்கப்படுவார்கள்.

| | |
|---|---|
| 8-12 வயது | பால கானக்குயில் |
| 13-16 வயது | இளைய கானக்குயில் |
| 17 வயதுக்கு மேல் | கானக்குயில் |

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய கடைசி தேதி : 15-4-2010

அனுப்ப வேண்டிய முகவரி

Kaanakuyil, P.O. Box. 9518, Surbiton KT1 9TH

Tel : 020 8251 6996, 0790 3327708, 0753 5028499

நாம் குறிப்பிட்ட விவரங்களை தெரிவிக்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

E-mail : arumthillai@hotmail.com yoga.thillai@googlemail.com

# ஆன்மிகத்தின் பொருள்

பேராசிரியை வெ. இன்சுவை

இறைமையின் பேரில் நம்பிக்கை வைத்துள்ளவர்கள், அந்த இறைமையை உணர்ந்தவர்கள், இறைவனைக் கண்டவர்கள், இறைவனைக் காணத் துடிப்பவர்கள் என்று மனிதர்களிடையே எத்துணை ரகம்! உலகைப் படைத்தும், காத்தும், கரந்தும் விளையாடும் பேராற்றல் வாய்ந்து, கால எல்லையைக் கடந்து நிற்கும் கடவுள், சார்ந்தார்க்குக் குளிர் நிழலாய்ப் பேரின்ப வடிவாகத் திகழும் இயல்பினர் என்பதை உணர்ந்தவர்கள் ஆன்மிக வாழ்வில் தங்களைத் தோய்த்துக் கொண்டவர்கள்.

ஆனால், கடவுள் என்பதே மாயை, வெறும் கட்டுக் கதை என்ற கடவுள் மறுப்புக் கொள்கையுடனும் சிலர் உள்ளனர். எந்த ஒரு வாதத்திற்கும், ஓர் எதிர்வாதம் இருக்கத்தானே செய்யும்? ஒன்று ஓங்கி ஒலித்தால், மற்றொன்று அடங்கிப் போகிறது. உலகம் திசை மாறிப் போகும்போதெல்லாம் மகான்களும், மகா புருஷர்களும் தோன்றி மக்களுக்கு ஆன்மிக நெறியை எடுத்துச் சொல்லி, அவர்கள் உய்ய வழி காண்பிப்பதுதானே சரித்திரம் சொல்லும் உண்மை!

மதங்கள் தோன்றியதும், அவ்வாறுதான். மதம், மானிட இனத்தின் உயரிய மனத்தைச் சார்ந்தது. உன்னத ஆற்றல் ஒன்றைத் தனது வல்லமைக்கு ஏற்பத் தேடிய தேடலின் விளைவுதான் மதம். மனிதனை நன்னெறிப்படுத்துவதுதான் மதங்களின் நோக்கம். ஆனால் தற்போது மதங்களுக்கு மதம் பிடித்து வருகிறது என்பதுதான் வேதனையாக உள்ளது.

''இந்தியாவே உலகத்தின் ஆசான்; இந்தியாவே ஆன்மாவின் கொடிய நோய்களைத் தீர்க்கும் மருத்துவர்; உலக வாழ்க்கையைப் புதிய வளர்ப்பிலிடும் பணி மீண்டும் இந்தியாவின் பொறுப்பாகவே ஆகியுள்ளது. மானிட ஆன்மாவின் அமைதியைக் காக்கும் பணி இந்தியாவின் கைவசமே உள்ளது!'' என்கிறார் ஸ்ரீ அரவிந்தர்.

மண்ணுலக வாழ்க்கையை, மனித வாழ்க்கையைத் தெய்விகமாக்குவதுதான் இறைவனின் திட்டம். சாதாரண மானிட வாழ்க்கை ஒரு கலவையாக உள்ளது.

கட்டுப்பாடற்ற எண்ணங்கள், பார்வைகள், உணர்ச்சிகள், நுகர்வுகள் என ஒரு கூட்டுக் கலவையாக உள்ளது. ஆன்மிகம் என்பது வாழ்க்கையை அதனுடைய அனைத்துப் பகுதிகளும் சேர்ந்து, சிறப்பினும் சிறப்பான தெய்வத் தகுதிகளுக்கு ஏற்ப உயர்த்துவதே ஆகும். நமது சாதாரண மானிட வாழ்க்கை தெய்வ வாழ்க்கையாக மாற வேண்டும். இந்த உன்னதமான குறிக்கோளை அடையும் சாதனம் பரிபூரணமாக ஒப்படைப்புதான். நம் இயல்பு முழுவதையும் இறைவனுக்கு அளித்துவிட வேண்டும். ஒரு கணமும் சிந்திக்காமல், தயங்காமல், அச்சமோ, ஐயமோ இன்றி நாம் அந்த அகண்ட முழுமுதற் பெருங்கடலில் குதித்துவிட வேண்டும். இறைவனின் இருப்பைப் பற்றிய உணர்வை நம் மனத்தில் எழுப்புவதுதான் ஆலயங்கள். இறைவனின் உருவம் புறத்தில் இருப்பினும், இறைவனைப் பற்றிய அறிவும், உணர்வும் நம் மனத்தினுள் எழுகிறது. இறைவனின் இருப்பை ஓர் இடத்திலோ அல்லது ஒரு மனத்தைத் தூய்மைப்படுத்தி, இறைவன் என்னும் பேருண்மை எங்கும் நிறைந்திருக்கிறது என்பதை உணர்வதற்குத் தயார் ஆகிறோம்.

ஒரு மனிதனின் ஆன்மிகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடல்லாமல், இந்து பாரம்பரியத்தைப் பொறுத்தமட்டில் ஆலயங்கள் வேறொரு தேவையையும் பூர்த்தி செய்வதற்காக எழுப்பப்பட்டன. சொற்பொழிவுகள் நிகழ்த்துவதற்கும், விசேஷ விழாக்களைக் கொண்டாடுவதற்கும், இசை, நாட்டியம் போன்ற கலைகளை வளர்ப்பதற்கும் ஏற்ற இடமாக ஆலயங்கள் கருதப்பட்டன. மக்கள் ஒன்று கூடி, தங்களது ஆன்மிக அனுபவங்களைப் பற்றிக் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ளும் இடமாக மட்டுமல்லாமல், மக்களின் ஒட்டு மொத்த கலாசார விழிப்புணர்வு, முன்னேற்றம் ஆகியவற்றைச் சார்ந்த விஷயங்களைப் பற்றி விவாதிக்கும் இடமாகவும் விளங்கின.

காலப்போக்கில் எல்லாமே மாறுதலுக்கு உள்ளானதைப் போல, நம் ஆன்மிகக் கோட்பாடும் மாறுதலுக்கு உட்பட்டுவிட்டது. கடவுளிடம் பேரம் பேசுகிறோம். பாலும், தெளி தேனும், பாகும், பருப்பும் கொடுத்துவிட்டுப் பதிலாகத் துங்கக் கரிமுகத்தானிடம் சங்கத் தமிழைத் தரக் கேட்டார் ஔவையார்.

அவர் தமிழைத்தான் கேட்டார். நாமோ எதற்கெல்லாமோ கடவுளிடம் வேண்டுகிறோம். பிரார்த்தனைகளின் தன்மைக்கேற்றவாறு நம் பேரமும் அதிகரிக்கிறது. ''இது நடந்தால் அருச்சனை செய்கிறேன்; இது முடிந்தால் இறைவா, உனக்கு அபிஷேகம் செய்கிறேன், இதை முடித்துக் கொடு, தங்கத் தேர் இழுக்கிறேன்'' இந்த ரீதியில் போகிறது பேரம். பக்தியின் அடர்த்தி குறைந்து போய்விட்டாலும், இறை நம்பிக்கை குறையவில்லை. அதுதான் நம்மை

வாழ வைக்கிறது. தற்போது உலகம் அதிவேக விஞ்ஞான வளர்ச்சியை எட்டி உள்ளது. மக்கள் வாழ்க்கையைச் சுவைக்கக் கற்றுக் கொண்டார்கள். மரணத்தைத் தவிர, மற்ற எல்லாவற்றையும் வெல்லக்கூடிய சர்வ வல்லமை படைத்த ''பிரம்மா''வாக மனிதன் மாறி வருகிறான். ஆனாலும் ஏன் மக்கள் மன நிம்மதியின்றி இருக்கின்றனர்? அதிக மன அழுத்தத்தினால் அவதிப்படுகின்றனர். மிதமிஞ்சிய செல்வமும், வல்லமையும் ஏன் மக்களுக்கு மன நிம்மதியைத் தருவதில்லை? தன்னால் இனி ஒன்றும் செய்ய இயலாது என்ற நிலையிலே, இறுதியில் கடவுளிடம்தானே சரணடைகிறோம்!

மன அமைதியைத் தேடித்தானே ஆயிரக்கணக்கான வெளிநாட்டவர், இந்தியாவிற்கு வருகின்றனர். காரணம் தெய்வமணம் கமழும் பூமி இது. சித்தர்களும் தவயோகிகளும், புண்ணிய ஆத்மாக்களும் வாழுகின்ற பூமி அல்லவா இது?

நாட்டில் அதர்மங்களும், அக்கிரமங்களும் பெருகி வருகின்றன. மனித நேயம் மறைந்து போய் விட்டது. பிள்ளைகளுக்குப் பெற்றோர்கள் சுமையாகிப்போவதால் முதியோர் இல்லங்கள் பெருகி வருகின்றன. மனச்சாட்சியைக் குழிதோண்டிப் புதைத்து விட்டது போன்ற குரூரச் செயல்கள், நேர்மையில்லாத அதிகாரிகள், அரசியல் நீதி பிழைத்த தலைவர்கள், கடமையை மறந்து, உரிமையை மட்டும் கோரும் மக்கள், நேர்மையைத் தொலைத்துவிட்ட வியாபாரிகள், குறுக்கு வழியில் குபேரனாக விரும்பும் எத்தர்கள், குள்ளநரித் தனத்தில் விளைந்த ஆசாமிகள்... இப்படி எல்லா மட்டத்திலும் சீரழிவுகளும், அநீதிகளும் பெருகி வருவதற்குக் காரணம் நம் தெய்வபக்தி குறைந்து வருவதுதான்.

தற்போது தெருவுக்குத் தெரு கோயில்களைக் கட்டிவருகிறார்கள்.

புதிய கோயில்களின் எண்ணிக்கையும் பெருகி வருகிறது. இதை வைத்து, மக்களின் ஆன்மிகச் சிந்தனையும் அதிகரித்து வருகிறது என்று தப்புக் கணக்குப் போட்டுவிடக் கூடாது. கோயில் திருவிழாக்கள் முன்பைவிட இன்னும் அதிக கோலாகலத்துடன் கொண்டாடப்படுகின்றன.

நோன்புகள், பண்டிகைகள் எதிலும் நாம் குறை வைப்பதில்லை. இன்று அதிக ஆடம்பரத்துடன் கொண்டாடுகிறோம். ஆனாலும் பல சமயம் இவையெல்லாம் உள்ளார்ந்த பக்தியுடன் கொண்டாடப்படாமல், ஒரு சம்பிரதாயத்திற்காக, கட்டாயத்திற்காகச் செய்யப்படுகிறதோ என்றுதான் தோன்றுகிறது. நம் இதிகாசங்களும், புராணங்களும், உபநிஷத்துகளும் எத்தனை இளைஞர்களுக்குத் தெரியும்? பாடமும், மதிப்பெண்களும் மட்டுமே குறியாக உள்ள வாழ்க்கை முறையில் குழந்தைகட்குப் புராணக் கதைகளை எங்கே போதிக்க முடிகிறது? தொலைக்காட்சியில் இராமாயண, மகா பாரதக் கதைகளைப் பார்த்து ஒரளவு தெரிந்து கொண்டவர்கள்தாம் அதிகம். அதைச் சொல்வாருமில்லை; சொன்னாலும் கேட்பாருமில்லை.

இருபத்து நான்கு மணி நேரமும் பணத்தின் பின் ஓட்டம்; சாதனை வெறி. நேரமில்லையென்றால் சுருக்கமாகப் பூசை. பேருந்தைப் பிடிக்க ஓடும் ஓட்டத்தை நிறுத்தாமலேயே வழியில் கண்ணில் படும் கோயிலைப் பார்த்து அப்படியே கன்னத்தில் போட்டுக் கொள்ளும் அவசரம். அவசர உலகத்தில் எல்லாமே அள்ளித்தெளித்த கோலம். மக்களை சினிமா மழுங்கடித்துக் கொண்டிருப்பதால், பூசையும், புனஸ்காரமும் தொடர்களின் நேரத்தை அனுசரித்து தான்.

பக்தி என்பது முதியோர்களின் பொழுது போக்கு என்ற அளவிலேதான் இளைஞர்கள் எண்ணுகிறார்கள். அவர்கள் பக்தியை அவ்வப்போது ஊறுகாய் போல்தான் தொட்டுச் செல்கிறார்கள். மாலை வேளைகளில் பேருந்து நிறுத்தங்களிலும், பொது இடங்களிலும் நின்றுகொண்டு வெட்டியாகப் பொழுதைக் கழிப்பதற்குப் பதில் கோயிலுக்குப் போகப் பழகிக் கொண்டால் மனம் ஒருமுகப்படும்; சஞ்சலம் குறையும்; மன இருள் விலகி அங்கே ஆன்ம ஒளி தோன்றும்; மனத்தில் நம்பிக்கை ஏற்படும்; அவர்கள் அறியாமலேயே ஓர் ஒழுங்கும், கட்டுப்பாடும் அவர்களிடம் ஒட்டிக்கொள்ளும்.

உலகம் அமைதியற்றுக் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. மனிதர்கள் போர்களால் கொல்லப்படுகிறார்கள். பேரழிவும், பெரும் சோகமும் நம்மை இடைவிடாது துரத்திக் கொண்டிருக்கின்றன. நிம்மதி இழந்த வாழ்க்கை; எதுவும் நிரந்தரமில்லை என்று உணர்த்திய வாழ்க்கை. நம் துன்பங்களுக்கு, முற்றுப்புள்ளி எப்போது? தொடரும் சோகங்கள் தொலைவது எப்போது?

அன்பான, அமைதியான வாழ்க்கை கிட்டுவது சாத்தியமா? அனைத்திற்கும் விடை ஒன்றுதான். சிக்கெனப் பிடித்தேன் எனச் சிவபெருமானை, மாணிக்கவாசகர் பிடித்ததைப் போல் இறைவனைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளவேண்டும்.

நம் வாழ்க்கையே ஒரு போராட்டமாகத்தானே உள்ளது நமக்கு! வறுமை, வேலையின்மை, கடன் தொல்லை, வியாபாரத்தில் நஷ்டம், தொழில் பிரச்சினைகள், வம்பு, வழக்குகள், வீண் பழிகள், குடும்பத்தில் குழப்பங்கள், தீராத வியாதிகள், விபத்துகள், அகால மரணம், குழந்தைப் பாக்கியமின்மை என விதவிதமான துன்பங்கள் மக்களை

வாட்டி வதைக்கின்றன. இவை தவிர உலகில் அனைத்து நாடுகளிலும் நிலவி வரும் புயல், வெள்ளம், கடும் வறட்சி, பூகம்பம், அடங்காத காட்டுத்தீ, கொடிய உயிர்க்கொல்லி நோய்கள், மதக் கலவரங்கள், சாதிச் சண்டைகள், தீவிரவாதம், வன் முறைகள், கொலை, கொள்ளை ஆகிய பெருந் துன்பங்களுக்கும் மூல காரணம் இறைவனிடமிருந்து நாம் அதிக தூரம் விலகிப்போய்விட்டதுதான். அம்மை அப்பனிடம் நம்மை அர்ப்பணிக்காததன் விளைவே இது.

பக்தியினால் உள்ளம் கனிய வேண்டும். ஞானத்தின் மூலம் இறைவனை அடையும் வேட்கை வேண்டும். ஆன்மிகம் என்பது சாராம்சத்தில், நமது அந்தரங்க ஜீவனைக் குறித்த ஒரு விழிப்பு ஏற்படு வதுதான். நமது மனமோ, உடலோ அல்லாத வேறொரு சக்தியப் பொருளான ஆன்மாவை அறிய வேண்டும். உணர வேண்டும், அதுவாகவே ஆக வேண்டும் எனனும் பேரார்வமே ஆன்மிக வாழ்க் கையின் உட்கருத்து. ஆனால் இதை எல்லாம் நாம் விளங்கிக் கொள்ளவில்லையே! நமக்கு மேலான ஒரு சக்தி இருக்கிறது. அந்தப் பரம்பொருளில் நாம் அனை வரும் அடக்கம். அந்த இறைவனை முழுமையாக நம்புவோம். நம்மை அப்படியே அவனிடம் ஒப்ப டைத்து விடுவோம். அந்தக் கருணைக் கடலின் அருட் பார்வை கிட்டினால் எல்லையில்லாப் பேரானந்தம் கிட்டும். மாறுவோம்! நாம் மாற்றுவோம் உலகை! ✱

பிரபல நாடகக் கலைஞர்

## ஸ்ரீதர் பிச்சையப்பா காலமானார்



இலங்கையின் பிரபல நாடகக் கலைஞர் ஸ்ரீதர் பிச்சையப்பா சுகயீனம் காரணமாகக் கொழும்பில் காலமானார். இறக்கும் போது இவருக்கு வயது நாற்பத்தி ஏழு.

இவரது பூதவுடல் அரசினர் வைத்தியசாலை யில் வைக்கப்பட்டு, மாதம்பிட்டிய மயானத்தில் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

1963 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் திகதி பிறந்தவர் ஸ்ரீதர் பிச்சையப்பா. சிறு வயது முதலே கலைத்துறையில் ஆர்வம் கொண்டவர்.

பிரபல நாடகக் கலைஞர், பின்னணிப் பாடகர், பாடலாசிரியர், இயக்குநர், எழுத்தாளர், 'மிமிக்ரி' மற்றும் ஓவியம் என ஒட்டுமொத்தக் கலைத்துறையில் ஈடுபட்டு, தன்னை முழுமை யாகக் கலைத் தாய்க்கு அர்ப்பணித்தவர் ஸ்ரீதர் பிச்சையப்பா.

## சீசெல்சில் தமிழ் வகுப்பு இரண்டாவது பரிசுத்தினம்



சீசெல்சு நாட்டின் தமிழ் வகுப்பு இரண்டாவது பரிசுத் தினம் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. இதில் தலைமை விருந்தினராகப் பங்கேற்ற மாண்புமிகு நீதியரசர் துரை கருணாகரன் தமது உரையில்

''உன் சீர் இளமைத் திறம் வியந்து என்ற கூற்றில் தமிழின் சிறப்பு நிறைந்துள்ளது. பல்வேறு மொழிகள் தோன்றி மறைந்துள்ளன. ஆனால், சீரிய தமிழ் மொழி மாத்திரம் உலகளாவிய ரீதியில் மேலும் வளர்ந்துகொண்டே போகின்றது பற்றி நாம் அனைவரும் பெருமைப்படுகின்றோம். ஒருவர் தனது உணர்ச்சிகளைத் தனதுத் தாய் மொழியில் மாத்திரம்தான் நன்றாக வெளிப்படுத்த முடியும். இரகுமான் கூட ஆஸ்கார் விருது விழாவில் இறுதியாகத் தமிழில் பேசியது "எனது புகழுக்குரிய இறைவனுக்கு நன்றி." தாய்மொழியின் சிறப்பு அதுதான். இன்று எமது மாணவரின் பரீட்சை பெறு பேறுகள், பேச்சுத் திறன் எம்மை வியப்பில் திணற வைக்கின்றது. இந்த நாட்டில், எமது மொழிக்கு ஒரு தனி இடம் உண்டு. நாம் தமிழர் அனைவரும் ஒருமித்து, ஒற்றுமையாகச் செயல்பட்டுத் தமிழ மையத்தை ஆதரித்து எமது கலை, கலாச்சார வளர்ச்சிக்கு ஒரு சிறந்த மண்டபம் அமைப்பது அவசியமாகும்'' என்று குறிப்பிட்டார்.

முதல் முறையாக நடத்தப்பட்ட பேச்சுத் திறன் போட்டி விறுவிறுப்பாகவும் சிறப்பாகவும் எல்லோரினதும் பாராட்டையும் பெற்றது. முதல் ஐந்து இடங்கள் பெற்ற மாணவர்கட்குச் சிறப்புப் பரிசுகளும், வகுப்புத் தேர்ச்சிப் பரிசுகளும், பதிந்த மாணவர்களுக்குப் பரிசும் வழங்கப்பட்டன. மையத் தலைவர் திரு. கோ. சிவசண்முகம் பிள்ளை தலைமை உரையும் செயலாளர் திரு. புகழேந்தி நன்றியுரையும் வழங்கினர்.

# பேராசிரியர் கோபன் மகாதேவாவின் 75ஆவது அகவை நூல் வெளியீட்டு விழா

இலண்டன் சிறீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தில் 12-12-2009 பிற்பகல் வெளியிடப்பட்ட நூலிலிருந்தே அன்று நடந்த விழாவின் பின்னணியையும், சம்பந்தப்பட்டோரின் வேறு பல செய்திகளையும், அவர்கள் அன்று நடந்த வெளியீட்டுப் பாராட்டு விழாவில் பேசியவற்றின் சாராம்சங்களைப் பெறவும் கிரகிக்கவும் முடியும். நூலின் முன்னுரையை வாசிக்கவும்.

இவ்விழாவுக்குத் தலைமை தாங்கியவர்கள், மூத்த ஊடகவியலாளர் கலாநிதி பொன் பாலசுந்தரமும், ஐ.இ. சைவ இந்துக் கோவில்கள் ஒன்றியத்தின் துணை ஸ்தாபகர் நடராஜா சச்சிதானந்தனும், வைத்தியக் கலாநிதி சீனியார் நவரத்தினமும் ஆவர்.

இலண்டன் 'சுடரொளி' ஆசிரியர் ஐ.தி. சம்பந்தன், இலண்டன் 'புதினம்' பத்திரிகை ஆசிரியர் ஈ.கே. ராஜகோபால், ஈலாப் இலக்கியச் சங்க இணைப்பாளர் நுணாவிலூர் கா. விஜயரத்தினம் ஆகிய மூவருடன் ஐவராக, முதற்சொன்ன இருவருமே பேராசிரியர் கோபன் மகாதேவாவின், 5-1-2009 நடந்த 75ஆவது ஆண்டு நிறைவை வரலாற்றுப் பதிவாக்கும் ஒரு ஞாபகார்த்த நூலை, உலகில் பல பகுதிகளில் வதியும் பேராசிரியரின் பழைய சகாக்கள், ஊழியர்கள், ஊடகவியலாளர், மாணவர், இனத்தாரில் நூற்றுக் கிட்டியவர்களிடம் இருந்து கட்டுரைகள், கவிதைகள் பெற்றுத் தொகுத்து, படங்களுடன் 144 பக்கங்களைக் கொண்ட 12-12-2009 அன்று வெளியிட்ட அந்நூலை, முன்னின்று தயாரித்ததும், அன்றைய பாராட்டு விழாவை ஒழுங்கு செய்தவர்களும் ஆவர்.

அந்த ஐவருடன், விழாவில் பேசிய மற்றோர்; ஈலிங் கோவில் நிருவாக சபை குழுத் தலைவர் சொ. கருணைலிங்கம், சைவக் கோவில் நிருவாகிகள் ச. சிறீரங்கன், அ. வைரவமூர்த்தி, கலாநிதி அ. தேவசகாயம், ஐ.நா. முன்னாள் ஆலோசகர் விஜி குமாரசுவாமி, சட்டத்தரணிகள் குமாரசுவாமி சிதம்பரப்பிள்ளை, நாக. அருணாசலம், பொறியியலாளரும் தலைமை ஆசிரியரும் ஆகிய மு.து. செல்வராஜா, நூலாசிரியர்கள் வைத்தியக் கலாநிதி சிவ தியாகராஜா, யுகசாரதி எஸ். கருணானந்தராஜா, முல்லை அமுதன், நுணாவில் நா. கணபதிப்பிள்ளையுடன், சிரேஷ்ட பொறியியலாளர் க. தியாகமூர்த்தி, இலக்கிய ஆர்வலர் தணிகாசலம், பூபாளராகங்கள் சுதாகரன் முதலியோரே.

பேச்சாளர் எல்லோரும் பேராசிரியர் கோபால பிள்ளை (கோபன்) மகாதேவாவின் தமிழ், ஆங்கில மொழித்திறன், நூற்றுக்கணக்கான கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள், குறும் படங்கள், நூல்கள் போன்ற ஆக்கபூர்வச் சாதனைகளைப் பற்றியும், யாழ் சுன்னாக நவீன சந்தைகளை ஒப்பந்தம் எடுத்துக் குறைந்த செலவில் திறமையாகக் கட்டித் தமிழினத்துக்கு ஆற்றிய பணியைப் பற்றியும், 1975ஆம் ஆண்டில் யாழ் நகரில் நடந்த நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டைப் பிரதம செயலாளராகப் பொறுப்புடன் நடத்திய திறமையைப் பற்றியும் பற்பல விதமாகப் புகழ்ந்து பேசினர்.

பேராசிரியரின் மற்றைய, பொறியியல் சாதனைகளாகிய கெலனியா, பாணந்துறைப் பாலங்களைக் கட்டியதும் நிருமாணித்ததும், மட்டக்களப்பு விமான நிலையத்தைப் பட்டாள அதிகாரியாகிக் கட்டியதும். 1958 இனக் கலவரத்தில் ஆயுதம் ஏந்திக் கொழும்புத் தமிழ்வாசிகளைக் காப்பாற்றியதும், மற்றும் 1981இன் கொமன்வெல்த் எந்திகர் மகாநாட்டை ஒழுங்கு செய்து நடத்தியதும் முதலிய அனைத்துலகச் சேவைகள், சாதனைகள், அரசியல்-சமாதானத் தொண்டுகள் முதலியவற்றைப் பற்றியும் பெருமையாகப் பேசிப் புகழ்ந்தும் வாழ்த்தினர். பேராசிரியரின் தொண்டுகளுக்கு அவரின் மனைவியார் டாக்டர் திருமதி சீதாதேவியினது பக்க பலத்தைப் பற்றியும் தவறாது எல்லோரும் குறிப்பிட்டனர். அவரின் இன்றைய இலக்கியத் தொண்டையும் தனித்துவ இயல்புகளையும் மெச்சி, மூன்று தனிப் பொன்னாடைகள் போர்த்தும் கௌரவித்தனர்.

முடிவில் பேராசிரியர் கோபன் மகாதேவா, தனது 75ஆவது ஆண்டின் ஞாபகநூலைத் தயாரித்துத் தொகுத்து வெளியிட்டு அன்றைய பாராட்டுக் கூட்டத்தையும் ஒழுங்குசெய்த நண்பர்களுக்கும், அன்றைய மார்கழிக் குளிரிலும் பனியிலும் சமூகம் தந்து பேசிய பிரமுகர்களுக்கும் ஒரு உணர்ச்சிகரமான ஏற்புரையில் நன்றி கூறி, மேடையிலிருந்து இறங்கிச் சென்று நூலாசிரியர்களுக்கும் மற்றும் வருகை தந்தோருக்கும் தன் கையாலே தனக்கு அளிக்கப்பட்ட நூல்களின் பிரதிகளை ஒழுங்குனர் சார்பில் பரிசளித்தார். கூட்டம் நடக்கும்போது சிற்றுண்டிகளும், முடிவில் மாலை உணவும் வழங்கப்பட்டன. ✱

# அகவை அறுபத்தைந்தில்
# திரு. குமாரசாமி சிதம்பரப் பிள்ளை

சட்டத்தரணியாக, சமூக சேவையாளராக, மனித உரிமைக்குக் குரல் கொடுப்பவரான திரு. சிதம்பரப்பிள்ளை அவர்களது அறுபத்தைந்தாவது பிறந்த நாள் இலண்டன் முருகன் ஆலயத்தில் விசேட அபிடேக பூசையுடன் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

சமய சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் பெருந்தொகையானோர் கலந்துகொண்டு வாழ்த்தும் பாராட்டும் தெரிவித்ததோடு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.

இலண்டனில் சகல மக்களாலும் நேசிக்கப் படும் திரு. சிதம்பரப்பிள்ளை குடும்பத்தினர் நீண்ட காலம் சுகமாக வாழ்ந்து தமிழ்ச் சமூகத்திற்கு நற்பணி யாற்றவேண்டும் என முருகப் பெருமானின் திருவருளை வேண்டிப் பிரார்த்தித்தனர்.

ஆண்டவன் அருட்கருணையோடு ஆலய தருமகர்த்தாக்கள், சமய நிறுவனத் தலைவர்கள், நண்பர்கள் ஆகியோரின் நல்வாழ்த்துகளைப் பெற்ற திரு. சிதம்பரப்பிள்ளை அவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்தார்.



திரு. திருமதி சிதம்பரப்பிள்ளை



கனகதுர்கை அம்மன் நிருவாகிகள் வாழ்த்துகிறார்கள்



சைவமுன்னேற்றச் சங்கத் தலைவர் கௌரவிக்கிறார்



லூசியம் சிவன்கோவில் நிருவாகிகள்
வாழ்த்து மடல் வழங்குகிறார்கள்



சுடரொளி ஆசிரியர் வாழ்த்துகிறார்



செல்வ விநாயகர் செல்வா வாழ்த்துகிறார்.

இலங்கைத் தமிழர்களின் ஆங்கில நூல்கள்:

# நூல்தேட்டம் ஆங்கில நூல் தொகுப்புக்கானதொரு அறிமுகம்

என். செல்வராஜா, நூலகவியலாளர், இலண்டன்

இலங்கையின் சுதந்திரத்திற்கு முன்னரும் பின்னரும் ஆங்கில மூலமான நூல்களை எழுதி வெளியிட்டதில் தமிழருக்கும் முஸ்லீம்களுக்கும் முக்கியப் பங்குண்டு. அண்மைக்காலத்தில்கூட பல வேறு நாடுகளில் ஈழத் தமிழர்களின் ஆங்கில நூல்கள் பல்துறைகளிலும் வெளிவந்தவண்ணமே உள்ளன. இவை எவ்வளவுதூரம் ஆவணப்படுத்தப் பட்டுள்ளனவென்பதையோ திட்டமிட்டு ஆவணப் படுத்தப்படாமல் ஒதுக்கப்பட்டுள்ளனவென்பதையோ நாம் இன்றுவரை கண்டுகொண்டதாகத் தெரிய வில்லை. அதை ஓரளவு உணர்ந்தவர்கள்கூட இது வேறு எவனோ ஒருவனுக்கு விதிக்கப்பட்ட பணி என்று மூன்றாவது மனிதராகக் கைகட்டிப் பார்வை யாளராக இருந்துவிடுகின்றார்கள்.

1970களில் பேராதனைப் பல்கலைக்கழக நூலகராகவிருந்த எச்.ஏ.ஐ. குணத்திலக்கவின் A Bibliography of Ceylon : a systematic guide to the literature on the land, people, histroy and culture published in the Western language from the sixteenth century to the present day என்ற தலைப்பில் ஆங்கில நூல்களுக்கான நூற்பட்டியல் 1970-1983 காலப் பகுதியில் 5 தொகுதிகள் வெளிவந்தன. இதைச் சுருக்கமாக H.A.I. Goonetileke's Bibliography of Ceylon என்று அழைக்கிறோம். இதில் இலங்கைவாழ் தமிழர் களின் ஆங்கில நூல்கள் பெரும்பாலானவை பதிவு செய்யப்படாததை, அக்காலகட்டத்தில் நாம் கண்டு கொள்ளவில்லை.

ஈழத் தமிழர்களின் ஆங்கில நூல்கள் பெருஞ் சந்தை வாய்ப்புகளை நாடாததும் தமக்குள்ளேயே வெளியிட்டுச் சிறுவட்டங்களுக்குள் அதை விநியோ கித்துத் திருப்தி காண்பதும் அன்றும் இன்றும் எமது மக்களைப் பொறுத்தவரையில் பொதுவானதாகவே உள்ளது. ஏ.ஜே.வில்சன், எச்.டபிள்யு தம்பையா, சிவானந்தன் போன்றோரின் நூல்கள் ஓரளவு சர்வ தேசச் சந்தையை எட்டியுள்ளனவாயினும் ஒப்பீட்டு அடிப்படையில் எம்மவர்களின் விநியோகத் திட்டம் வலுவிழந்ததே என்பதை எவரும் மறுக்கமுடியாது.

அண்மையில் 1987 இல் பிரித்தானியாவின் ஒக்ஸ்போட் நகரிலுள்ள Cilo Press என்ற நூல் வெளியீட்டாளர்கள் World Bibliographical Series என்ற ஒரு தொடரை வெளியிட்டார்கள். 77 நாடுகளில் அந் நாட்டவர்களால் ஆங்கிலத்தில் வெளியிடப்பெற்ற சகலதுறையிலான நூல் விவரங்களையும் குறிப்புரை யுடன் (நூல்தேட்டம் தொகுப்புகள் போன்று) தொகுத்து ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு தொகுதி என்ற வகையில் வெளியிட்டார்கள். 20ஆவது தொகுதி இலங்கைக்குரியது. அதனை விஜய சமரவீர என்பவர் தொகுத்திருந்தார். (W.H. Smith இல் இந்நூல் விற்பனைக்குண்டு) 631 ஆங்கில நூல்கள், இலங்கையரால் வெளியிடப்பட்டதாக அவர் அடையாளம் கண்டிருந்தார். இவற்றில் சின்னப்பா அரசரத்தினம், க. குலரத்தினம், சோ. செல்வநாயகம், கைலாசபதி உள்ளிட்ட சில தமிழர்கள் எழுதிய 46 ஆங்கில நூல்களையே இலங்கைக்குரியதாக அவரால் கண்டுகொள்ள முடிந்தது. புத்திஜீவிகளாகவும், முன் தோன்றிய மூத்தகுடிகளாகவும் தம்மை விதந்துரைக் கும் எம்மவரின் பங்களிப்பு வெறும் 46 தானா என் பதைக்கூட நாம் அப்போது சிந்திக்கவில்லை.

இலங்கைத் தீவின் இராணுவ வரலாற்றை முதலில் எழுதியவர் ஒரு தமிழர் என்பதோ (The Military History of Ceylon/Anton Muttukumaru), கொழும்பு நகரத் தெருக்களின் வரைபடத்தை (A-Z Street Guide of Greater Colombo, Kandy, Nuwara eliya, Anuradhapura & Polonnaruwa) நூலுருவில் வழங்கியவர் கூ. சோம சேகரம் என்ற தமிழரென்றோ நாம் அறிந்திருக்க வாய்ப்பில்லை. இலங்கையின் சிங்களக் குடித் தொகைப் பரம்பலையிட்டுத் தனது ஆராய்ச்சியை இலண்டன் School of Economics என்ற உயர் பல்கலைக்கழகக் கல்லூரியில் மேற்கொண்டவர் ஆர். இராஜேந்திரா என்பவர். 1952இல் இவர் மேற் கொண்ட இந்த ஆய்வு இலங்கைப் புள்ளிவிவரத் திணைக்களத்தினால் விதந்துரைக்கப்பட்டு 1955இல் பெருமையுடன் நூலுருவில் கொண்டுவரப்பட்டது. சிங்களவர்களின் குடித்தொகைப் பரம்பல் தொடர் பாக மேற்கொள்ளப்பட்ட முதலாவது ஆய்வு இது வென்று குறிப்பிடப்படுகின்றது. இப்படியாக விவ சாயத்துறை, பொருளியல்துறை, அரசியல்துறை, உயிரியல்துறை என்று பல்வேறு துறைகளிலும் சுதந் திரத்திற்கு முன்னரும் பின்னரும் தமிழ் அறிஞர்கள் தமது மேலான பங்களிப்பை வழங்கி வந்துள்ளார்கள். இதுவரை இது உலகில் எங்குமே முழுமையாக ஆவணப்படுத்தப்படவில்லை.

இன்று ஈழத் தமிழர்களின் வாழ்வு திறந்த வெளிச் சிறைகளுக்குள்ளும் தடுப்பு முகாம்களுக் குள்ளும் புலம்பெயர் தேசங்களின் இனக் கலப்பு களுக்குள்ளும் சிக்கிச் சீரழிந்திருக்கும் நிலையில் அவர்களின் தனித்துவம் பற்றிப் பேசப்படுகின்றது. இலங்கையில் அவர்களது கௌரவமான இருப் பிற்கான வழிகள் பற்றிப் பேசப்படுகின்றன. எங்

கிருந்தோ வந்த இலங்கைத் தமிழர் தமக்கு ஒரு சுமை என்று இலங்கையின் இனவாத அரசுகள் சிந்தித்துச் செயற்படும் இன்றைய நிலையில், இலங்கைத் தமிழரின் இருப்பிற்கான உரிமைப்போர் ஒரு சர்வ தேச சமூகத்தின் அவதானத்திற்கு உரியதாக மாறி வரும் இவ்வேளையில் இலங்கையில் தமிழ்பேசும் குடியினர் அந்நாட்டின் கட்டுமானத்திற்கு என்ன செய்தார்கள் என்ற கேள்விக்கு விடைதேடும் பணி யொன்றும் எமக்குள்ளது.

அப்பணியைத் தனிப்பட்டமுறையில் முன் னெடுத்து அண்மையில் ஒரு ஆங்கில நூற்பட்டியல் (Bibliography) ஒன்றினை உருவாக்கியிருக்கிறேன். நான் வாழ்நாள் பணியாக மேற்கொண்டுவரும் நூல் தேட்டம் என்ற தொகுப்பு முயற்சியின் ஒரு பகுதி யாகவே இந்த ஆங்கில நூற் பட்டியலை உருவாக்கி யிருக்கிறேன். இலங்கைத் தமிழர்களும், தமிழ் பேசும் முஸ்லிம் மக்களும் இதுவரை எழுதி ஆங்கிலத்தில் பிரசுரித்துள்ள 323 நூல்களைப் பல்வேறு ஐரோப்பிய நூலகங்களிலும், தனியார் சேர்க்கைகளிலும் இருந்து இனம்கண்டு அவற்றைக் குறிப்புரையுடன் கூடிய தாகத் தொகுத்து நூலுருவில் 201 பக்கங்களில் ஐரோப் பிய தமிழ் ஆவணக் காப்பக, ஆய்வகத்தினூடாக வெளியிட்டுள்ளேன்.

இந்த ஆங்கில மொழி நூற்பட்டியலை உலக நாடுகளெங்கும் இயங்கும் சர்வதேச நூலகங்களில் சேர்ப்பிக்கவேண்டிய அவசியம் இன்றுள்ளது. வெறும் வெளியீட்டு விழா நடத்தி ஒரு சிறு நண்பர் குழு வினருடன் சந்திப்பை ஏற்படுத்தி அதன்மூலம் இந்த நூலை அறிமுகம்செய்து விற்பனைசெய்து பண மீட்டும் முயற்சி இதுவல்ல. இக்கட்டுரையின் வாயி லாக ஒரு முக்கியமான ஆவணத்தின் இருப்பினை உங்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறேன். இது எனது முதற்கட்ட நடவடிக்கை.

நூல்தேட்டம் ஆங்கிலப் பதிப்பு ஒரு தனித் தொகுதியாகும். இதன் இரண்டாம் பதிப்பினைத் தற் போது சேகரித்துவரும் புதியதும், தவறவிடப்பட்டது மான ஆங்கில நூல்களின் விவரங்களுடன் திருத்திய பதிப்பை 2012இல் வெளியிடத் தீர்மானித்திருக் கிறேன். இவ்வாறு ஆங்கில நூல்தேட்டம் காலக் கிரமத்தில் முழுமையை நாடியதொரு தொகுப்பு முயற்சியாக அமையும் என்பது,எனது நம்பிக்கை.

இந்நூல் தனிப்பட்ட தீவிர ஆய்வாளர் களுக்குப் பயன்பட வேண்டும். அவர்களின் மூலம் ஈழத்தமிழர்களின் பரந்துபட்ட அறிவியல் ஞானம் உலகிற்கு வெளிச்சமிட்டுக் காட்டப்படவேண்டும். இந்த அடுத்த கட்டத்தை முன் நகர்த்திச் செல்லும் பணியைத் தமிழர் வாழ்வியலுடன் அவர்களின் மேம்பாட்டுடன் தம்மை இணைத்துக் கொண்டுள்ள உங்களையொத்த அனைவரிடமும் ஒப்படைத்திருக் கிறேன்.

நூல் விவரம், விலை மற்றும் கிடைக்குமிடம் போன்ற தகவல்களை இக்கட்டுரையின் இறுதியில் வழங்கியிருக்கிறேன். இந்நூலின் ஒரு பிரதியையா வது விலைகொடுத்து வாங்கி, அதனை உங்கள் பிரதேச நூலகத்திற்கு உங்கள் அன்பளிப்பாக வழங்க முன்வருவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். இதன்மூலம் ஈழத்தமிழரின் ஒரு ஆவணம் உலகின் முக்கியமான நூலகங்கள் அனைத்திலும் வைப்பிலிடப்படுவதை உறுதிசெய்துகொள்வோம். தயவுசெய்து இதையும் நானே செய்து முடிக்கவேண்டும் என்று எதிர்பார்க்கா தீர்கள். உலகின் பிரபல நூலகங்கள் விலைகொடுத்து இந்நூலை எம்மிடம் பெற்றுக்கொள்ளத் துடிக்கும் என்று நம்பியிருப்பது மடமை. நாம்தாம் நூலகங்களை நாடி இந்நூலை எடுத்துச்சென்று வழங்கவேண்டும். அதற்கு நீங்கள் முன்வருவீர்களா மாட்டீர்களா என்ற கேள்விகளுடன் இந்த அறிமுகத்தை நிறைவுசெய் கிறேன். நன்றி.

*

## நூல் விவரம்

| | | |
|---|---|---|
| Title | : | Noolthettam : An Annotated bibliography of Sri Lankan Tamils. |
| Compiler | : | N. Selvarajah, Co-ordinator, European Tamil Documentation and Research Centre, London |
| Publishers | : | European Tamil Documentation and Research Centre, London |
| Pages | : | 201 |
| Price | : | £ 15.00 |
| Payment methods | : | |
| Pay pal transaction | : | Noolthettam |
| Cheque | : | (UK only) payable to ETDRC |
| Bank | : | Abbey (Santender), |
| Acount Name | : | ETDRC, Sort Code 09-01-27, A/c. No. 24459051. |
| IBAN | : | GB93ABBY09012724459051 |
| Available at U.K. | : | N. Selvarajah, ETDRC, 48, Hallwicks Road, Luton LU2 9BH, U.K. |

***"Learn to accept the reality of yourself as someone with strengths and weaknesses who will have some good days and some bad days"***

# RATNA & Co SOLICITORS

*(est. 1989)*

*Practising for 20yrs in East Ham and now also in Lewisham*

## We advise on:

- Immigration, nationality, asylum, EU law, sponsorships and entry clearance appeals
- Residential and commercial property, (purchase, sale, re-mortgage, grant and purchase of business leases)
- Transfer of liquor and night cafe licences
- Court representations relating to debts and mortgage arrears cases, land lord and tenant matters, road traffic and drunken drive cases
- Cases before the Employment tribunal relating to unfair dismissal, racial discrimination, and any employment law matters
- Drafting power of attorneys, change of name deeds, affidavits

We are accredited by the solicitor's regulation authority as providers of quality service in all areas of immigration law. We are therefore able to provide free legal advice in all areas of the immigration law, provided you are unemployed.

We do not charge for the first consultation for any of the matters referred above.

For our recent, successful cases please visit our website, which is updated regularly.

**Contact: M or K Ratnapalan**

**Tel:** 0208 470 8818

**Fax:** 0208 475 0131

**Mob:** 07769 748 409

169A High St North
East Ham
London E6 1JB

***Branch:***
225, Lewisham way
London SE4 1UY

*Email: mratnapalan@hotmail.com* *Web: www.ratna.co.uk*

# பத்மநாப ஐயர் ஒரு நடமாடும் நூலகம்!

இளந்திரையன்

அந்த அறை - அப்படித்தான் இருந்தது!

ஊரின் குச்சு ஒழுங்கைகளைப் போல் அந்த அறையின் வாசலில் இருந்து படுக்கைக்கும், கணினி மேசைக்கும் போவதற்குமான ஓர் ஒற்றையடிப் பாதை.

அவ்வழியால் இருவர்கூட பக்கம், பக்கமாக நடந்து போக முடியாது. அந்த அறையின் ஏனைய இடப்பரப்பு எல்லாம் புத்தகங்களால் நிரப்பப்பட்டிருந்தது. அந்த அறையைச் சுற்றி எழுப்பப்பட்டிருந்த சுவரின் அரைப்பகுதி ஒன்றுக்கு மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்களால் மறைக்கப்பட்டிருந்தது. இதுதான் பத்மநாப ஐயரின் அறை.

ஈழத்து இலக்கிய உலகில் மட்டுமல்ல, தமிழக இலக்கிய உலகிலும் நன்கு அறியப்பட்ட ஐயா என எல்லோராலும் அன்பாக அழைக்கப் படுகின்ற பத்மநாப ஐயர் பன்முகப் பார்வை கொண்ட நவீன படைப்பிலக்கிய முயற்சிகளின் உந்து சக்தியாக விளங்கி வருகின்றார்.

தனது வாழ்வில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக ஈழத்து இலக்கியத் துறையிலும், வெளியீட்டுத் துறையிலும் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்துக் கொண்டவர்.

இத்தகையதோர் அற்புதமான மனிதர் இலண்டன் ரூட்டிங் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் 10-4-10 அன்று நடைபெற்ற முத்தமிழ் விழாவில் கௌரவிக்கப்பட்டதை இட்டு மகிழ்ச்சி கொள்கிறேன்.

1941 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28 ஆம் திகதி பிறந்த இவர் இலக்கியம் மீதான தனது தீவிரமான பற்றின் காரணமாக நல்ல இலக்கிய முயற்சிகளை வெளிக்கொண்டு வந்துள்ளதுடன், ஈழத்து இலக்கியங்களைக் கடல் கடந்து தமிழகத்திலும் பரவச் செய்த பெருமைக்குரியவர்.

1984 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஈழத்து இலக்கியத்தைத் தமிழகத்துக்கு எடுத்துச் செல்லும் நோக்குடன் தனது உயிரையும் பொருட்படுத்தாது இவர் மேற்கொண்ட கடல் பயணம் என் நினைவுக்கு வருகின்றது.

இக்காலப் பகுதியில்தான் தமிழீழ விடுதலைப் போராட்டம் தீவிரமடைய ஆரம்பித்திருந்தது. இந்நிலையில், இப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இயக்க வேறுபாடுகள் அற்றுப் பல போராளிகளுக்கும், அவர்களின் தலைவர்களுக்கும் இலக்கியம், ஓவியம் மற்றும் சினிமா குறித்த பிரக்ஞையை ஏற்படுத்தியவர்.

ஒரு புத்தகத்தை வாங்குகின்றபோது அதில் பத்துக்கும் மேற்பட்ட பிரதிகளை வாங்கிப் போராளிகளுக்கும், அதன் தலைவர்களுக்கும் இவர் விநியோகித்து வந்ததை நினைத்துப் பார்க்கின்றேன்.

இக்காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் பல நூல்களும், சிறு பிரசுரங்களும் வெளியீடுகளாகக் கொண்டுவரப்பட்டன. யாழ் பல்கலைக் கழகத்தின் மறுமலர்ச்சிக் கழகம் இத்தகைய வெளியீடுகளைக் கொண்டு வருவதில் முனைப்புக் காட்டியிருந்த வேளையில், அவர்களுடன் தொடர்புகொண்டு புத்தக வடிவமைப்பு மற்றும் தரம் குறித்து அவர்களுக்கு ஆலோசனை வழங்குவார்.

அதுமட்டுமன்றி மறுமலர்ச்சிக் கழகத்தின் வெளியீடுகள் தொடர்பில் மொழி பெயர்ப்பு, பிரதியின் எழுத்துப் பிழைகள் பார்ப்பது, பின்னர் அச்சகத்துக்குச் சென்று எழுத்துப் பிழைகள் பார்ப்பது என இவர் பாரிய பங்காற்றி இருந்தார்.

குறிப்பாக மறுமலர்ச்சிக் கழகத்தின் மாதாந்த வெளியீடான தளிர் சஞ்சிகைக்கு இவர் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது.

இவற்றுக்கு அப்பால் இவரின் இலக்கியம் மற்றும் படைப்புலகம் சார்ந்த பங்களிப்பு என்பது அளப்பரியது. ஈழத்தின் மூத்த இலக்கியவாதிகளான டொமினிக் ஜீவா, கைலாசபதி, காவலூர் ஜெகநாதன் போன்றோரின் முனைப்பினால் தமிழ் இலக்கியம் முன்னெடுக்கப்பட்ட சூழலில், தமிழகத்தில் நமது இலக்கியப் படைப்புகள் குறித்துப் பேச வைத்த பெருமை இவரையே சாரும்.

அதேபோன்று, தமிழகத்தில் எஸ்.வி. இராஜதுரை, வ. கீதா, சுந்தர இராமசாமி, நா. கண்ணன், க்ரியா இராமகிருஷ்ணன் போன்றோரின் நட்புகளால் தமிழக இலக்கியப் பதிவுகளையும் ஈழத்துக்கு எடுத்துவந்தார்.

இதனூடாகத் தமிழகத்தில் வெளிவந்த காலச்சுவடு, கணையாழி, படிகள், எழுத்து, கசடதபற, போன்ற பல சஞ்சிகைகளை ஈழத் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தியதுடன், தமிழகத்தின் பல சிறுகதை மற்றும் நாவல் ஆசிரியர்களையும் அறிமுகப் படுத்தி வைத்தார். இதற்காக இவர் யாரிடமிருந்தும் பணம் பெற்றதில்லை.

இவரின் முயற்சியினால் வெளியிடப்பட்ட அலை இதழ்களின் தொகுப்பு, ஓவியர் மார்க்ஸ் அவர்களின் தேடலும் படைப்புலகமும், தரமான கவிதைகளின் தொகுப்பான மரணத்துள் வாழ்வோம். ஈழநாடு ஆசிரியர் சபாரத்தினம் எழுதிய ஆசிரியத் தலையங்கங்களின் தொகுப்பான ஊரடங்கு வாழ்வு போன்ற நூல்கள் ஈழத்து இலக்கிய உலகில் பலராலும் பேசப்பட்டவை.

குறிப்பாக, தேடலும் படைப்புலகமும் எனும் நூலில் வெளிவந்த ஓவியர் மார்க்ஸ் அவர்களின் ஓவியங்களும் மரணத்துள் வாழ்வோம் கவிதைத் தொகுப்பில் வெளிவந்த கவிதைகளும் 1983-1985

ஆம் ஆண்டுக் காலப்பகுதியின் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை மற்றும் விடுதலைப் போராட்டம் குறித்த பதிவுகளைக் கொண்டிருந்தது.

இவற்றுடன் இவரின் வெளியீட்டு முனைப்புகள் நின்றுவிடவில்லை. இவரின் தமிழியல் வெளியீட்டு நிறுவனத்தின் சார்பில் 1988 ஆம் ஆண்டு வெளிவந்த சண்முகம் சிவலிங்கத்தின் நீர்வளையங்கள் எனும் கவிதைத் தொகுப்பு, இவரின் துணைவியாரால் எழுதப்பட்ட இலங்கையின் தோட்டப் பள்ளிக்கூடங்களின் கல்வியமைப்பும் பிரச்சினைகளும் எனும் நூலும் அக் காலப்பகுதியில் மிகவும் முக்கியமானது.

அத்துடன், விடுதலைப் போராட்டக் காலங்களில் இவரால் வெளியிடப்பட்ட கலாநிதி இரகுபதியின் Early Settlements in Jaffna, யேசுராசாவின் தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும் மற்றும் அறியப்படாதவர் நினைவாக போன்ற நூல்களும் அக்காலப் பகுதியில் அதிகம் பேசப்பட்ட நூல்களாகும்.

இதனைவிட இன்னும் பல நூல்களை அவர் வெளியிட்டுள்ள போதிலும் அவை என் நினைவுக் குறிப்புக்கு உடனடியாக வரவில்லை. அதற்கப்பால் தன்னுடைய வெளியீடுகளுடன் அவர் தனது செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ளாமல், ஏனைய பதிப்பகங்களுக்கு ஊடாக வெளிவரும் பதிப்புகளையும் இவர் ஊக்கப்படுத்தி வந்தார்.

அதுமட்டுமல்லாது பல எழுத்தாளர்களுக்கும், பல வெளியீடுகளுக்கும் இவர் செய்த நிதியுதவி அளப்பரியது. இதனை அவர் எவரிடமும் கூறுவதில்லை. அதற்கப்பால் உதவி கேட்டுச் சென்றவர்களுக்கும் அவர் இல்லை என்று சொல்லியதில்லை.

தற்போது 69 வயதை அடைந்துள்ள இவர் தொடர்ந்தும் ஒரு இளைஞனைப் போல் தீவிர இலக்கியச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றார். அரசியல் ஆய்வாளரும், விமர்சகருமான மு. திருநாவுக்கரசுவின் ஒற்றை மைய உலக அரசியலில் போரும் சமாதானமும் என்ற நூலைக் கடந்த வருடம் தமிழியல் வெளியீடாகக் கொண்டு வந்த இவர், தொடர்ச்சியாக வெளியீடுகளைச் செய்வதற்கு வரிசையாக நூல்களை வைத்திருக்கின்றார்.

இந்த வெளியீடுகளுக்காக இவர் எவரிடமும் நிதி கேட்டுச் சென்றதில்லை. தனது உழைப்பினால் வருகின்ற வருமானத்தைச் சிறுகச் சிறுக சேகரித்தே இத்தகைய வெளியீட்டு முயற்சிகளைச் செய்துவருகின்றார். அதுமட்டுமல்ல, இத்தகைய வெளியீடுகளுக்குப் பணம் கொடுத்து வாங்கிப் படிக்கும் பழக்கம் என்னவோ, எம்மவர் மத்தியில் இல்லை. இதனால், அவருக்கு நூலினை வெளியிடுகின்ற போது ஏற்படுகின்ற செலவுகள்கூட நூல் வெளிவந்த பின்னர்க் கிடைப்பதில்லை.

ஆயினும், அவர் சலித்துவிடவில்லை. தன்னுடைய இலக்கிய முயற்சிகளை அவர் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றார். ஈழத்தில் இருந்து புலம்பெயர்ந்து வந்த பின்னரும் இந்த அவசர வாழ்க்கையில் அவர் மேற்கொண்டு வருகின்ற இலக்கிய முயற்சிகள் அளப்பரியது.

இலக்கியம் மட்டுமல்ல-அரசியல், சினிமா, கருநாடக இசை, ஓவியம், வரலாறு, சமூகம் சார்ந்து இவர் பல தளங்களில் பணியாற்றிவருகின்றார். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 1981களில் இருந்தே மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வந்தவர். இப்போராட்டம் சார்ந்து தான் முரண்பட்ட கருத்துகளை வெளிப்படையாகவே முன்வைக்கும் பக்குவம் இவரிடம் இருந்தது. இதற்கப்பால் கருத்து முரண்பாடுகளுக்கு அப்பால் அனைவரையும் அணைத்துச் செல்லும் பக்குவமும் இவரிடம் மேலோங்கி இருந்தது.

நூலகம். கொம் (noolakam.com) எனும் பெயரில் நடத்தப்படுகின்ற ஈழத்து நூல்களுக்கான இணைய நூலகத்துக்கு இவர் ஆற்றிய பங்களிப்பு மிகவும் பெரியது. ஈழத்தின் அரும்பெரும் நூல்களை இவ் விணையத்தில் பதிவாக்க உதவியதுடன், இவ் விணையம் தடையின்றித் தொடர்ந்து நடத்தப்படுவதற்குப் பெரும் நிதியுதவியையும் செய்துள்ளார்.

இலண்டனில் தமிழ் மக்களுக்கு என ஒரு கலாச்சார மையத்தை உருவாக்க வேண்டும் என்பதில் புலம்பெயர்ந்து வந்த நாள்களில் இருந்து கனவு கண்டு வரும் இவர், அதற்காக எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னரே வரைபொன்றையும் தயாரித்து வைத்துள்ளார். ஆனால் அதற்காக நிதியுதவி செய்யக் கூடியவர்கள் எவரும் முன்வரவில்லை என்பதுதான் கவலைக்குரிய விடயமாகும். இத்தகைய கலாச்சார மையத்தின் அவசியம் குறித்து அண்மையில்கூட என்னோடு கலந்துரையாடியிருந்தார்.

இவரது இப் பணிகளைப் பற்றிக் குறிப்பிடும் போது இவர்தம் துணைவியாரைப் பற்றிக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. பத்மநாப ஐயரின் இலக்கிய முயற்சிகளுக்கு அவர்தம் துணைவியார் வழங்கிவந்த ஆதரவு அவர் மேன்மேலும் தீவிரமாக இலக்கியத் துறையில் செயற்பட வைத்தது. ஆனால், என்ன துயரம்! வாழ்க்கைப் பயணத்தின் இடைவழியில் காலன் அவரைப் பிரித்துவிட்டார்.

2004ஆம் ஆண்டில் கனடா இலக்கியத் தோட்டமும், ரொரண்ரோ பல்கலைக்கழகத் தென்னாசிய மையமும் இணைந்து வழங்கிய இயல் விருது இவருக்கு வழங்கிய அதிவுயர் விருதென்று சொன்னால் அது மிகையாகாது.

தனது வாழ்வை அமைதியாகவும் எளிமையாகவும் வாழ்ந்துவருகின்ற இவர் விருதுகளைத் தேடிச் செயலாற்றுபவர் அல்லர். இந்நிலையில், இவரோடு இணைந்து இவரின் பன்முகப்படுத்தப்பட்ட முயற்சிகளுக்குத் தோளோடு தோள் நின்று செயலாற்றுவதே நாம் அவருக்குச் செய்யும் கௌரவமாகும். ✱

# புலம் பெயர் மக்களும் நாடு கடந்த தேசியத்துவமும்

இதயச் சந்திரன்

நாடு கடந்த தேசியத்துவம் (Transnationalism) என்றால் என்ன என்பது குறித்த தெளிவுகளும், பதில்களும் இல்லாவிட்டால், நாடு கடந்த அரசியலைப் புரிந்துகொள்ள முடியாது.

மறுக்க முடியாததொரு வகிபாகத்தை, இந்த நாடு கடந்த தேசியத்துவக் கருத்தியல் அனைத்துலக அரசியல் தளத்தில் முன்வைக்கப்படும் இவ்வேளையில், அதன் நதிமூலத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டிய அவசியமொன்று ஏற்படுகிறது. கற்பனாவாத ரிஷி மூலத்தைத் தேடும் பணியல்ல இது. மாறாக, தாயகம் கடந்து, வேற்று நாடுகளில் வாழும் போராடும் மக்கள், தமது சுதந்திரத் தாய்நாட்டை நிருமாணிப்பதற்கும், வாழும் தேசங்களில் தேசிய அடையாளத்தைப் பேணுவதற்கும், பல போராட்டங்களை நிகழ்த்திக் கொண்டிருப்பதை அவதானிக்கலாம்.

உலக மயமாக்கல் (Globalization) என்பதுகூட, பொருளாதார நாடு கடந்த தேசியத்துவம் (Economic Transnationalism) என்கிற கருத்தியல் வரையறைக்குள் பொருத்திப் பார்க்கப்படுகிறது.

ஏகாதிபத்தியங்களின், நாடு கடந்த முதலீட்டு முகங்களான, பல் தேசிய நிறுவனங்களையும் (Multi-national Corporation) இவ்வட்டத்துள் உள்ளடக்குகின்றார்கள்.

அதேவேளை, 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், நாடு கடந்த தேசியத்துவத்தின் முக்கியத்துவம் தொடர்பாக, ரன்டோல்ப் சிலிமன் போர்ன் (Randolph Siliman Bourne) என்கிற, அக்கால முற்போக்குச் சிந்தனையாளர் தனது கருத்தினை முன்வைக்கிறார்.

அமெரிக்க நியூ ஜெர்சி (New jersey) புளூம்பீல்ட் நகரத்தில் பிறந்த ரன்டோல்ப் அவர்கள், சமூக உறவு குறித்த புதிய சிந்தனை முறைமை ஒன்றினை, நாடு கடந்த தேசியத்துவக் கோட்பாட்டின் ஊடாக வெளிப்படுத்துகிறார்.

முதலாம் உலகப்போர் நிகழ்ந்த காலத்தில், இச் சிந்தனை முன்மொழிதலின் காரணிகள், அமெரிக்காவின் பல்வேறு தேசிய இனங்களில் நல்லிணக்கத்திற்கு அடிப்படையாக விளங்கியது.

அமெரிக்க வாழ் பல் தேசியங்கள், ஆங்கிலேயக் கலாச்சார தளங்களுள் கரைந்துவிடாமல், அவர்களின் சமூக, கலாச்சாரத் தனித்துவம், அதன் உயர் விழுமியப் பரிமாணங்கள் சிதைவடையாமல், அமெரிக்க அதிகார மையக் கட்டமைப்பினுள் உள்வாங்கப்படுதலே, சிறப்பானதாக இருக்குமென்கிற கருத்தினை அவர் முன்வைத்தார்.

தனி நபருக்கும், அவர் சார்ந்த ஆத்மார்த்த பூர்வமான தாயகத்திற்கும் இடையிலுள்ள உறவுகள், புதிய தேசத்தில், அவருடைய தேசிய இனத்துவ அடையாளத்தைத் தீர்மானிக்கும் என்பதாகவும் ரண்டோல்பின் கூற்று அமைகிறது.

புலம்பெயர்ந்து வேறு நாடுகளில் இம்மக்கள் வாழ்ந்தாலும், தமது பூர்வீகத் தாயகத்தின் கலாச்சாரப் பண்புகளை மிக இறுக்கமாக, பேணிப் பாதுகாக்க முனைவார்கள் என்று இவர் திடமாக நம்புகிறார்.

ஆகவே, இத்தகைய உயர்விழுமிய கலாச்சார ஆளுமையைக் கொண்ட ஏனைய தேசிய இனங்கள், அமெரிக்காவை ஒரு நாடு கடந்த தேசியத்துவ தேசங்கள் (Transnational Nation) கூட்டிணைந்த, புதிய கலாச்சாரச் செழுமைமிக்க நாடாக மாற்ற உதவுவார்கள் என்பதனை ரன்டோல்ப் போர்ன் வலியுறுத்துகின்றார். வேற்றுக் கலாச்சாரப் படிநிலைகள் அழிந்து போகாமலும், அதேவேளை ஒன்றோடொன்று பிரிக்க முடியாத வகையில் பொருந்திக் கொள்வதாலும், அமெரிக்கா வலிமை பெறுமென்பதை, முதலாம் யுத்த காலத்தில் அவர் தெரிவித்திருந்தார்.

ஆனாலும், புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழினத்தின் இன்றைய வாழ்நிலையானது, ஒரு நாட்டுக்குள் மட்டும் உள்ளடக்கப்பட்ட விடயமில்லை என்பது தெளிவானது. ஏனெனில், ஈழத் தமிழர்கள் பல நாடுகளில் சிதறி வாழ்கின்றார்கள்.

வித்தியாசமான சமூகக் கட்டமைப்பு மற்றும் கலாச்சாரச் சூழலில் வாழும் இனக் குழுக்களோடும், தேசிய இனங்களோடும் கூடி வாழவேண்டிய நிர்ப்பந்தத்துள் ஈழத் தமிழினம் தள்ளப்பட்டுள்ளது. ஆயினும், குடும்பம், ஊர் மற்றும் பிரதேச ரீதியிலான உறவுப் பரிவர்த்தனைகளைத் தொடர்ந்தபடியே வாழ்கின்றார்கள்.

அதேபோன்று தாயகத்தில் வாழும் மக்களோடு, தமது சமூக, பொருளாதாரத் தொடர்பாடல்களைப் பேணி வருவதனையும் அவதானிக்க முடிகிறது. இவர்களை ஒன்றிணைத்து, ஒரு பலமான கட்டமைப்பினை உருவாக்குவதன் ஊடாக, அடுத்த சந்ததிக்கான தமிழ்த் தேசியத் தளத்தினை நிலை நிறுத்தலாம். அக் கட்டமைப்பானது, முன்னெப்பொழு

தும் பரீட்சித்துப் பார்க்கப்படாத புதிய விடயமாகவே இருக்கும்.

புலம்பெயர்ந்து பல நாடுகளில் சிதறுண்டு வாழும் பூர்வீக ஈழத்தமிழ் மக்களை, ஓர் உயர் கட்டமைப்பிற்குள் நிறுத்துவதன் மூலம், இரண்டு விடயங்கள் சாத்தியமாகும்.

முதலாவதாக, கால நீரோட்டத்தில், எமது அடுத்த சந்ததியினர், தாம் வாழும் நாட்டுக் கலாச்சாரப் பண்பாட்டுத் தளத்தினுள், சுயத்தை இழந்து, முற்றாகக் கரைந்து போகாமல் தடுக்கலாம்.

அடுத்ததாக, அந்நியராலும் சிங்கள தேச ஆட்சியாளர்களாலும் மறுக்கப்பட்ட அல்லது பறிக்கப்பட்ட தாயக மண்ணின் இறைமையை, மீளப்பெறும் போராட்ட இலக்கிற்கு வலுவான சக்தியாகவும் திகழலாம்.

எதிர்காலச் சந்ததியினரின் தமிழ்த் தேசிய ஆளுமையை உறுதிப்படுத்தும் அதேவேளை, இறைமை கொண்ட தேசமொன்று நிறுவப்படல் வேண்டுமென்பதே இவ்விரு குறிக்கோள்களாகும். அடுத்த சந்ததியினர், நமது கலை, பண்பாட்டு அடித்தளத்திலிருந்த விலகிச்சென்று விடுவார்களோ என்கிற அச்சம், பெரும்பாலான புலம்பெயர்ந்து வாழும் பெற்றோர்கள் மனங்களில் ஊடுருவி இருப்பதை அவதானிக்கக் கூடியதாகவிருக்கிறது.

ஆலயங்கள், தமிழ்ப் பாடசாலைகள், பொது நிகழ்வுகள் போன்றவற்றில் மட்டுமே தாயக மக்களில் பெரும்பாலானோர்கள் ஒன்று கூடுகின்றனர். பழைய மாணவர் சங்கம், ஊர்ச்சங்க ஒன்று கூடல் யாவும், ஒரு சிறுவட்டச் சந்திப்புகளாகவே அமைந்து விடுகின்றன.

இவை தவிர, மாவீரர் தினம், மற்றும் தேச விடுதலைக்கான கவனயீர்ப்புப் போராட்டங்கள் என்பவற்றை, அரசியல் தளத்திலிருந்து முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளாகக் கருதலாம்.

ஆகவே, இத்தகைய யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு, இதைவிட காத்திரமானதொரு சமூக, அரசியல், பொருளாதார, அறிவியல் சார்ந்த தளக் கட்டமைப்பொன்றினை உருவாக்க வேண்டியதொரு வரலாற்றுக் கடமை, புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழ் மக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதனை உணர வேண்டும்.

மாறிவரும் புதிய புவிசார் அரசியலின் நகர்வுகளைத் தெளிவாகப் புரிந்துகொள்வதன் ஊடாக, விடுதலையை வென்றெடுக்கும் வழிமுறைகளை, சன நாயகக் கட்டமைப்பொன்றை நிறுவுவதன் மூலம் வகுத்துக் கொள்ளலாம். தாயக அரசியலில் தற்போது நிகழ்ந்துவரும் சிதைவுகளையும், பின்னடைவுகளையும் எண்ணிச் சோர்வடையாமல், எம் முன்னே விரிந்து கிடக்கும் சாதகமான தளங்களை இனங் கண்டு, பலங்கொண்டு எழுவதே புலம்பெயர் ஈழத் தமிழினத்தின் ஒரே தெரிவாக இருக்கும்.

மே 18 இற்குப் பின்னர், எம்மிடையே உருவான முரண்பாடுகளைக் களைந்து மறுபடியும் ஒன்று சேர்ந்து செயற்படக்கூடிய தளமாக இந்த நாடு கடந்த அரசாங்கத்தைப் பார்க்கலாம். எமது இனத்தை அழிப்பதற்கு, கட்சி வேறுபாடு இன்றி, சிங்கள தேசம் எப்போதும் ஒன்றிணைந்தே இயங்குகின்றது. இந்த வரலாற்றுப் பட்டறிவுச் செய்தியை இனியாவது நாம் உணரவேண்டும்.நிமிர்ந்தெழுவோம்!...அணிதிரள்வோம்!... மீண்டும் நம்பிக்கையுடன் கிளர்ந்தெழுவோம்! ✱

## வானுயர தமிழினம் ஓங்கி விட்டால் - இன்று

வானுயர தமிழினம் ஓங்கி விட்டால் - இன்று
மேலிருந்து கீழே பார்க்கும் அனைத்துலகம்
கீழிருந்து மேலே பார்க்க வேண்டும்
யார் விரும்புவார் கீழ் நோக்க?

வளம் மிகுந்த பூமியிலே கவலையின்றி,
'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என வாழந்த
இனம். அதனாலா!

ஐந்நூறாண்டுகளுக்கு முன் ஆக்கிரமிப்புச்
சக்திகளின் ஆதிக்கத்துக்குள்ளாகி,
இன்று சிங்களப் பேரினவாதத்தின் துணையுடன்
ஒடுக்க நினைக்கும்
அச்சக்திகளின் கால்களுக்குப் பஞ்சணையாய்ப்
போய்விட்டது?

ஆனாலும்! கவனம்! தமிழனே! நீ உயிர்வாழ
விரும்பினால் பேசாதிரு.
அல்லாமல் நீ உரிமை கேட்டால்! கவனம்!
தமிழனே!
உன்உயிர் சிங்களப் பேரினவாதத்தின் ஊடாக
அனைத்துலகுக்கே சொந்தம்.
ஆனாலும்! தமிழனே! இது சனநாயக தேசம்!
வாய்திறந்து கூற உன்னால் முடியும்!
உனக்கு உன் உரிமை மீது முதன்மை இல்லையா?

ஆம்! இன்று தமிழனுக்கு விடுதலை கிடைத்துவிடுமென்று பயங்கொள்ளும் அனைத்துலகம், அதனால் அவன் எட்டப்போகும் உயரத்தை மிக உன்னிப்பாக ஆராய்கிறது. அதனால்தான் நாம் அறியா எம்மினத்தின் உயர்ச்சியை நிறுத்த இன்று ஒவ்வொரு ஆராய்ச்சியாளர்களும் அவரவர் விருப்புக்கு ஏற்றவாறு உறுதியெனப்பட்ட தமிழீழத்தைக் கூறுபோட்டு, எம் உரிமைப் போராட்டத்தைத் தாம் நினைத்தவாறு சித்திரிக்கின்றனர்.

ஆனாலும்! இது உறுதி.
இன்று வேண்டுவது நம்பிக்கை.
நாளை மலர்வது தமிழீழம்!

# திட்டமிடுவோம்! வெற்றி பெறுவோம்!!

சோம. வள்ளியப்பன், மனிதவள மேம்பாட்டுப் பயிற்சியாளர், சென்னை, தமிழ்நாடு

தயக்கம் ஒரு சுருக்குக் கயிறு

சிலருக்குத் தடை அவர்களேதாம். அவர்களுடைய மனோபாவம், தயக்கம், இது அவர்களை அவர்களது இலட்சியத்தை அடைய விடாது. அவர்கள் காலைப்பிடித்துக் கவ்வும்.

''அவர்களை எப்படிக் கேட்பது?''

''என்ன நினைத்துக் கொள்வார்கள்?''

''அசிங்கம்... தப்பாக நினைப்பார்கள்...''

''கேலி செய்வார்களோ!''

''நம் அறியாமை வெளிப்பட்டுவிடுமோ!''

''யாருமே கேட்கவில்லையே! செய்யவில்லையே! நாம் மட்டும் எப்படித் தனியாக...''

இப்படி இன்னும் பல நினைப்புகள் காலைச் சுற்றிய பாம்பு மாதிரி பயமுறுத்தும்.

தயக்கம். இந்த மனோபாவம் நமக்கு எதிரி. தன்னடக்கம் வேறு, தனக்கு வேண்டியதைக் கேட்பது வேறு.

வாயுள்ள பிள்ளை பிழைக்கும், அழுதபிள்ளைதான் பால் குடிக்கும். பசிக்கையில் அழ வேண்டும். இல்லாவிட்டால் மூன்று மாத பிள்ளைக்குப் பசிப்பது அம்மாவுக்கு எப்படித் தெரியும்?

பலர் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பேசாமடந்தை ஆகிவிடுவார்கள். பாடம் முடித்தபின் வகுப்பு அமைதியாக இருக்கும்.

''ஏதாவது சந்தேகம் இருந்தால் கேளுங்க''

உடனே வகுப்பு படு அமைதியாகிவிடும். ''இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று எல்லாம் புரிந்து இருக்க வேண்டும். அல்லது எதுவுமே புரியாமல் இருக்க வேண்டும்'' என்று சிலர் விளக்கமளிப்பது உண்டு.

மூன்றாவதாகவும் ஒரு காரணம் உண்டு. அதுதான் தயக்கம்!

பாதி புரிந்தும் புரியாமலும் இருக்கும். ஆனால் கேட்கத் தயக்கம்.

வகுப்பறை எதற்கு? புரிந்து கொள்ளத்தானே! கேள்வி பதில்கள் இன்றி அது சாத்தியமா? தைரியமாக விளக்கங்கள் கேட்கவேண்டும். சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

வகுப்பறையில் செய்த சோதனை

ஒரு முறை இந்தப் பிரச்சினையை விளக்குவதற்காக, முதலாண்டு எம்.ஏ. படிக்கும் மாணவர்களுக்கு வகுப்பு எடுக்கும்பொழுது, தைரியக் குறைவாக உள்ள ஒரு மாணவனை வகுப்புக்கு வெளியே, சற்று தள்ளிச் சென்று நிற்கச் சொன்னேன்.

பிறகு கரும்பலகையில் 'சாமாத்' என்று பெரிதாக எழுதினேன். வகுப்பில் இருந்த மற்ற மாணவர்களிடம் அதை வாசிக்கச் சொல்லச் சரியாகவே வாசித்தார்கள். அதை அழித்துவிட்டுப் பிறகு நான் சொன்னேன். ''இப்பொழுது நான் வெளியில் நிற்கும் மாணவனை அழைத்து அமரச் சொல்லி விட்டுத் தொடர்ந்து பாடம் நடத்துவேன். இடையில் அதே 'சாமாத்' என்ற வார்த்தையை எழுதிவிட்டு உங்களில் சிலரை அதை வாசிக்கச் சொல்லுவேன். அழைக்கப்படும் அனைவரும் ஒரே மாதிரியாக அதனை 'சமத்' என்றே தவறாக வாசிக்க வேண்டும்'' என்று சொல்ல மாணவர்கள் உற்சாகமாக சம்மதித்தார்கள். வெளியில் நின்றிருந்த மாணவனை அழைத்தோம். வகுப்பு தொடர்ந்தது. நடுவில் 'சாமாத்' என்று எழுதிவிட்டு, திட்டமிட்டபடி, சிலரை எழுப்ப, அவர்கள் 'சமத்' என்று வாசித்தார்கள். எவரும் சிரிக்கவில்லை.

வெளியில் இருந்துவிட்டு வந்த மாணவன் முகத்திலோ குழப்பம். அவனை வாசிக்கப் பணித்தேன் சீரியசாக... அவன் எழுந்து தயக்கத்துடன் 'சமத்' என்று வாசித்ததும் அறை முழுக்கச் சிரிப்பொலி அவன் கலங்கிவிட்டான்.

இதை 'ஆட்டுமந்தை' புத்தி என்பார்கள். சுயமாக சிந்திப்பதும் இல்லை. சரியில்லாதவற்றைச் சொல்ல, எடுத்துக்காட்டத் தயக்கம். கும்பலோடு ஒன்றி அடையாளம் இன்றி இருப்பதைப் 'பாதுகாப்பாக இருப்பதாக' எண்ணும் மனப்பாங்கு. "Call a spade a spade" என்பார்கள். ஆனால் சிலருக்கு ஏனோ தயக்கம்.

விவேகானந்தர் சொன்ன விளக்கம்

இப்படிப்பட்டவர்களுக்கு விவேகானந்தர் சொல்லுகிறார்.

''தம்பி, முதலில் உன்னைப் பார்த்து உலகம் கேலி செய்யும்; பிறகு எதிர்க்கும்; அதன்பிறகே கொண்டாடும்!''

முதன் முதலில் செய்தவர்களை இந்த உலகம் என்ன செய்தது? கேலி செய்தது. உதாரணம் 'ரைட்பிரதர்ஸ்';

விடாது அவன் தொடர்ந்து செய்தால் அவனை எதிர்க்கும்; இதென்ன இவன் வித்தியாசமாக இருக்கிறானே என்று. உதாரணம் : உலகம் உருண்டை என்று சொன்ன கலிலியோ.

மற்றவர் சிரிப்புக்குப் பயந்து தயங்கியவர், மற்றவர் எதிர்ப்புக்குப் பயந்து தயங்கியவர், இவர் களெல்லாம் வெற்றி பெறுவது எப்படி முடியும்?

எதிர்ப்பில் வளரக்கூடிய சக்தியை மனிதன் பெற்று இயல்பாகவே இருக்கிறான்.

ஆகவே, தயக்கத்தைத் தள்ளத் தயங்கவே வேண்டாம்!

தடைகளைத் தகர்ப்பதற்கான உபாயங்கள்

தடைகள் பல சமயம் 'பிரச்சினைகள்' மூலம் வரும். அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பல வழிமுறைகள் (Problem Solving Techniques) உண்டு.

பலருக்குத் தங்களுக்கு எது பிரச்சினை என்பதே சமயத்தில் தெரியாமல் போய்விடுகிறது.

எங்கே போகிறோம் என்பது தெரியாமல் எப்படிப் போவது என்பதுபோலத்தான் இதுவும்!

எது பிரச்சினை என்று தெரியாமலே அதனைத் தீர்ப்பது சாத்தியமன்று.

பிரச்சினை இன்னதுதான் என முடிவு செய்வது முக்கியமானது.

ஒரு கார் ஆள் நடமாற்றம் இல்லாத சாலையில் போய்க் கொண்டிருந்தபொழுது அதன் பின் டயர் பஞ்சராகிவிட்டது. அந்தக் காரில் ஓடக் கூடிய மற்றொரு ஸ்டெப்னி டயர் டிக்கியில் இருக்கிறது.

ஆனால் அதை மாட்டுவதற்கு உதவக்கூடிய 'ஜாக்கி' அந்தக் காரில் இல்லை.

அந்தக் காரில் இருப்பவர்களின் தற்போதைய பிரச்சினை என்ன? இந்தக் கேள்வியைப் பயிற்சி வகுப்புகளில் கேட்கும் பொழுது சிலர் அவசரப் பட்டுச் சொல்வார்கள், 'ஜாக்கி இல்லை. அவர்களுக்குத் தேவை ஒரு ஜாக்கி' என்று.

## தமிழா! நீ பேசுவது தமிழா...

கவிஞர் காசி ஆனந்தன்

அன்னையைத் தமிழ்வாயால் மம்மி என்றழைத்தாய்!...
அழகுக் குழந்தையைப் பேபி என்றழைத்தாய்!...
என்னடா தந்தையை டாடி என்றழைத்தாய்!...
இன்னுயிர்த் தமிழைக் கொன்று தொலைத்தாய்!...

உறவை லவ் என்றாய் உதவாத சேர்க்கை!...
ஒய்ப் என்றாய் மனைவியை! பார் உன்றன் போக்கை...
இரவை நைட் என்றாய்! விடியாதுன் வாழ்க்கை!...
இனிப்பை ஸ்வீட் என்றாய்! அறுத்தெறி நாக்கை!...

வண்டிக்காரன் கேட்டான் லெப்ட்டா? ரைட்டா?
வழக்கறிஞன் கேட்டான் என்ன தம்பி பைட்டா?
துண்டுக்காரன் கேட்டான் கூட்டம் லேட்டா?
தொலையாதா தமிழ் இப்படிக் கேட்டா?

கொண்ட நண்பனை பிரண்டு என்பதா?
கோலத் தமிழ்மொழியை ஆங்கிலம் தின்பதா?
கண்டவனை எல்லாம் சார் என்று சொல்வதா?
கண்முன் உன் தாய்மொழி சாவது நல்லதா?

பாட்டன் கையில வாக்கிங் ஸ்டிக்கா?
பாட்டி உதட்டுல என்ன லிப்ஸ்டிக்கா?
வீட்டில பெண்ணின் தலையில் ரிப்பனா?
வெள்ளைக் காரன்தான் நமக்கு அப்பனா?

இது சரியென்றால், காரில் உள்ளவர்கள் இறங்கி ஆளுக்கு ஒரு பக்கம் ஒரு ஜாக்கிக்கு முயற்சி செய்ய வேண்டும்.

வேறு கார்களோ, வண்டிகளோ அந்தப் பக்கம் வரவில்லை. ஜாக்கி கிடைக்க வழியே இல்லை. சிறிது நேரம் கழித்து, ஒருவர் சொல்லுவார், 'அவர் களுக்குத் தேவை 'வண்டியை உயர்த்திப் பிடிக்கக் கூடிய ஒரு அமைப்பு' என்று.'' இந்த விடைதான் சரியானது.

அது 'ஜாக்கியாகத்தான் இருக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லையே! ஜாக்கிதான் வேண்டும். அதுதான் பிரச்சினை என்று முடிவெடுத்துச் செயல் படுவதற்கும், 'வண்டியை உயர்த்திப் பிடிக்கக்கூடிய ஒரு அமைப்பு' என்று தேடிச் செயல்படுத்து வதற்கும்தான் எவ்வளவு வித்தியாசம்!

சிறிது நேரத்தில் நான்கைந்து கற்களை வைத்து வண்டியை உயர்த்திப் பஞ்சரான டயரைக் கழற்றி வேறு டயர் மாற்றி வண்டியில் போய்க் கொண்டே இருக்கலாமே!

பல சமயம் விடைகள் கிடைக்காததற்குக் காரணம் பிரச்சினைகளைச் சரியாகப் புரிந்து கொள் ளாமையே! -தொடரும்

# அபிவிருத்தியின் பேரால் தமிழ்த் தேசிய உணர்வை மழுங்கடிக்க மானமுள்ள தமிழன் துணை போகமாட்டான்

அருளம்பலம் இராஜரட்ணம், எல்.எல்.பி., சிரேஷ்ட சட்டத்தரணி, சட்ட விரிவுரையாளர்.

தமிழன் தனக்கெனத் தமிழ் இராச்சியத்தை உருவாக்கி ஆண்ட சரித்திரம் உண்டு. இந்த வகையில் 16 ஆம் நூற்றாண்டுக் காலத்தின் இறுதியில் தமிழ் அரசனான சங்கிலிய மன்னனால் இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணமும் வேறு சில பகுதிகளும் உள்ளடங்கலாகத் தமிழ் இராச்சியம் பரந்து இருந்தமை வரலாற்று ரீதியான உண்மையாகும். இந்த வகையில் தமிழர் தாயகம், தமிழ்த் தேசியம் என்பவற்றைப் பேசுவதற்கும் அனுபவிப்பதற்கும் ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் உரிமை உண்டு என்றும், அந்த உரிமையையும் தமிழர் கொண்டிருந்த இறைமையையும் இன்றுவரை எவரிடமும் தமிழன் ஒப்படைக்கவில்லை என்றும் கொள்வதே சாலச் சிறந்ததும், பொருத்தமானதுமாகும்.

அந்நியராம் ஆங்கிலேயர் தம்மால் கைப் பற்றப்பட்டு ஆளப்பட்ட இராச்சியங்களானக் கண்டி, கோட்டை, யாழ்ப்பாணம் இராச்சியங்கள் என்பன எந்த இனத்தால் ஆளப் பட்டதோ அவ் இனத்திடம் மீள ஒப்படைக்கப்பட முன்வரும்போது முன்னைய தமிழ்த் தலைவர்கள் முன்பிருந்த சிங்களத் தலைவர்களுடன் ஒன்றாக ஆளுவதற்கு நிபந்தனைகள், புரிந்துணர்வு, நன்னம்பிக்கை அடிப்படையில் இணக்கம் கண்டார்களே தவிர தமிழ்த் தேசிய உணர்வைத் தமிழர் தாயகமாகிய வடக்குக் கிழக்கு மாகாணத்தைப் பெரும்பான்மைச் சமூகத்திடம் தாரை வார்த்துக் கொடுக்கவும் இல்லை. தமிழர்கள் தம்முடைய இறைமையை யாரிடமும் ஒப்படைக்கவும் இல்லை.

இக்கருத்து தமிழ்த் தலைவர்கள் நால்வர்களுக்கு எதிராக யூரலல்லாத விசாரணையில் மேல் நீதிமன்ற வழக்கில் ஜி.ஜி. பொன்னம்பலம் (கி.இ.) முன்னை நாள் சொலிசிற்றர் ஜெனரல் பிள்ளை நாயகம் (கி.இ.), மு. திருச்செல்வம் (கி.இ.) ஆகியோர்களால் முன்வைக்கப்பட்ட வாதமும்கூட. தமிழ்த் தலைவர்களும் சிங்களத் தலைவர்களும் ஏற்றுக் கொண்ட நியதிகளின்படி தென்னிலங்கை ஆட்சியாளர்கள் நடவாமல் பெரும்பான்மைச் சமூகம் சிறுபான்மைச் சமூகத்தைத் தனித்து ஆளப் புறப் பட்டதனாலேயே தன்னைத்தான் ஆண்ட தன்மானமுள்ள தமிழன் அந் நோக்கத்திற்காகத் தன்னால் ஒப் படைத்திருக்காத இறைமையைப் பிரயோகிக்கவும் தனது தேசியத்தை, தனது வடக்குக் கிழக்கு இணைந்த தமிழர் தாயகக் கோட்பாட்டை நிலை நிறுத்தவும் பெரும்பான்மைச் சமூகத்தின் நடவடிக் கைகளால் தள்ளப்பட்டனர். எனவே இந்நிலையில் தமிழரின் எதிர்பார்ப்பு தமிழ்த் தேசிய உணர்வே தவிர அபிவிருத்தியல்ல எனக் கூறுவதே சாலப் பொருத்தமானதாகும். தமிழ் மக்கள் அதுவரை காலமும் அனுபவித்துவந்த உரிமைகளை வென்றெடுப்பதற்காக, ஆரம்ப காலத்தில் தமிழர்களுடைய பெரும் கட்சியாகத் திகழ்ந்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் மறைந்த தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலம் பெரும்பான்மை இனத்துடன் சம உரிமையுடன் இணைந்து வாழும் போக்கைக் கைக்கொண்டு பெரும்பான்மை சமூகத்தினருடைய ஆட்சியாளரால் பல கோணத்திலும் ஏமாற்றப்பட்ட நிலையில் அவரால் கைக்கொள்ளப்பட்ட நடை முறை தோல்வியைத் தழுவியது.

தலைவர் ஜி.ஜி பொன்னம்பலத்துடன் இணைந்து செயற்படும் போக்கு எந்தக் காலத்திலும் வெற்றி பெறுமா என்பது அரசால் முன்னெடுக்கப்பட்டு நடந்துவந்த செயற்பாடுகளின்படி கேள்விக் குறியாகவே அமைகின்றது. காரணம் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த அரசு காலத்திற்குக் காலம் தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட குடியேற்றத்தின் மூலம் தாயக நில அபகரிப்பைச் செய்ததுடன் வேலைவாய்ப்பு, அபிவிருத்தி என்பவற்றில் சிறுபான்மையோர் மீது காட்டிய புறக்கணிப்பைப் பற்றி நாடாளுமன்றத்திற்கு உள்ளும் புறமும் தமிழ்க் கட்சிகளால் எடுத்துக் கூறியும் இவ்விடயங்களை ஆட்சேபித்தும் பெரும்பான்மையோரின் அரசின் போக்கில் இன்றுவரை எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. எனவே, சிறுபான்மை - பெரும்பான்மையுடன் ஒற்றுமையாகச் சேர்ந்து செயற்படும் கோட்பாடு தென்னிலங்கை ஆட்சியாளரது குறுகிய நோக்கால் வெற்றி பெறவில்லை.

மற்றுமொரு கட்சியான தமிழரசு கட்சியின் தலைவர் தந்தை செல்வாவால் சமஷ்டி ஆட்சி முறை முன்வைக்கப்பட்டது. இதுவரை காலமும் சமஷ்டி ஆட்சிமுறை தென் இலங்கை ஆட்சியாளரால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதுடன் அமரர் எஸ். டபிள்யு ஆர்.டி. பண்டாரநாயக்காவைப் பிரதமராகக் கொண்ட அரசு சமஷ்டி ஆட்சி முறையை முன்னெடுத்தபோது ஐக்கியத் தேசியக் கட்சி அதனை எதிர்த்து அக்கொள்கையும் கைவிடப்பட்டு சமஷ்டி ஆட்சி முறைக் கோட்பாடும் தோல்வியடைந்து விட்டது.

இக்கோட்பாடுகள் ஒரு புறமிருக்க தமிழர்களுடைய தாயகக் கோட்பாடு, தமிழ்த் தேசியம் என்ப

வற்றை இலங்கையில் இருந்து அகற்றி இலங்கை ஒரு பௌத்த நாடு என்றும் சிங்கள மொழி அரச மொழி என்றும் எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டார நாயக்காவின் ஆட்சியில் 19-6-1956 ஆம் திகதி முன் வைக்கப்பட்ட கருத்து ஒட்டுமொத்தமாகத் தமிழர் தாயகத்திற்கும் தமிழ்த் தேசியத்திற்கும் இந்த நாட்டில் இடமிருக்கமாட்டாது என்பதற்குப் பச்சைக் கொடி காட்டப்பட்ட செயலாகும். குறித்த சமஷ்டி ஆட்சி முறைச் செயற்பாடுகளுக்குப் பெரும்பான்மை சமூகத்தாலும் எதிர்க்கட்சியாலும் காட்டிய எதிர்ப்புக் களால் 1958இல் இனக் கலவரம் ஏற்பட்டதும், பண்டா-செல்வா ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு அது பின் ஐக்கிய தேசியக் கட்சியின் பாத யாத்திரை எதிர்ப்பால் கிழித்தெறியப்பட்டதும் வரலாறாகும்.

நில ஆக்கிரமிப்பு, இன ஒழிப்பு, இன ஒடுக்கல் போன்ற செயல்களைத் தடுத்த நிறுத்த மேற் கொண்ட, சேர்ந்து வாழும் புரிந்துணர்வுக் கோட்பாடும் ஒரே இலங்கையில் சமஷ்டி முறை ஆட்சிக் கோட் பாடும் தோல்வியைத் தழுவிய அதே நேரம், தமிழர் களுக்கும் தமிழ்த் தாயகத்துக்கும் தேசியத்துக்கும் மாறான அச்சுறுத்தும் செயற்பாடு துரிதமாகச் செயற் பட அதனைத் தடுத்து நிறுத்த வேண்டிய நிலையில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலம், தந்தை செல்வா ஆகியோரால் பல கடையடைப்பு, சட்டமறுப்புப் போராட்டம், சத்தியாக் கிரகம், உண்ணாவிரதப் போராட்டங்கள் எனப் பல வித சாத்வீக முறையிலான போராட்டங்கள் மேற் கொண்டும் பயனளிக்கவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் தீர்வுகள் முன் வைக்கப்படும்பொழுது அதனை ஐக்கிய தேசியக் கட்சி செயற்படுத்தாமல் தடுத்ததும் குறிப்பாக முன்னைநாள் ஜனாதிபதியான சந்திரிகா குமார துங்க வினால் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டம் ஐக்கிய தேசிய கட்சியால் குழப்பப்பட்டதும் அதே போல ஐக்கியதேசியக் கட்சி முன்வைத்த மாவட்ட சபை ஆட்சிமுறைக்கு (ஈ.ஈ.இ.) ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யால் எதிர்ப்புத் தெரிவித்திருந்தும் அச்சபை முறை (ஈ.ஈ.இ.) நடைமுறைக்கு வந்ததுமான செயற்பாடு கள் அனைத்தும் சமஷ்டி ஆட்சிக்கோ தமிழர் தாயகக் கோட்பாட்டிற்கோ, தமிழ்த் தேசியத்திற்கோ எந்தக் காலத்திலும் இலங்கையில் இடமிருக்காது என்ற தென்னிலங்கை ஆட்சியாளர்களின் தொடர்ச்சியான செயற்பாடுகள் அறைகூவல்களாக அமைகின்றன.

1987இல் இந்தியாவின் தலையீட்டினால் ஐக்கிய தேசியக் கட்சியால் நிறைவேற்றப்பட்ட 13ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தின் வாயிலாக உருவாக்கப் பட்ட மாகாண சபை ஆட்சிமுறையில் மாகாண சபைக்குச் சட்டத்தில் கிடைத்த அதிகாரம்கூடப் பெரும்பான்மை அரசால் மாகாண சபை அமைக்கப் பட்டும் அதிகாரம் வழங்கப்படாமலும் இதுவரை வட கிழக்கு மாகாணங்களுக்கு ஒரு தமிழர் ஆளுநராக நியமிக்கப்படாமலும் இன்றுவரை சாக்குப் போக்குக் காரணங்கள் கூறித் தட்டிக் கழிக்கப்பட்டு வருகின் றன என்றால் வடகிழக்கு இணைந்த தமிழ்த் தாயகம், தமிழ்த் தேசியம் என்பது தமிழர்களைப் பொறுத்த வரை சிங்களப் பெரும்பான்மை இன அரசு தானாக முன்வந்து வழங்கும் என்றோ அல்லது பேச்சு மூலம் தீர்க்கப்படும் என்றோ எதிர்பார்க்கக்கூடிய ஒன்றல்ல.

ஒவ்வோர் அரசியல் கட்சிகளும் தாம் ஆட் சிக்கு வந்தால் சிறுபான்மைத் தமிழர்களுடைய அபி லாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், தமிழர் கள் திருப்தியடையும் வகையில் அரசியல் தீர்வு வழங்கப்படும் எனக் காலகாலமாகத் தேர்தல் காலங் களில் வாக்குறுதிகளை அள்ளி வழங்கினரே தவிர, குறித்த வாக்குறுதிகளை இதுவரை எந்தக் கட்சியும் நிறைவேற்ற முன்வரவுமில்லை, நிறைவேற்றி இருக்கவுமில்லை.

இது இவ்வாறிருக்க வழமையான பாணியில் இம்முறையும் இதே கோஷம் தென்னிலங்கைக் கட்சிகளால் முன்வைக்கப்படுகிறது என்பது மட்டு மல்லாமல் தமிழர்களுடைய உரிமைகளை வலி யுறுத்த அவர்களுக்கு என ஓர் உறுதியான கட்சியோ அல்லது பிரதிநிதித்துவங்களோ கிடைக்காது போகும் வகையில் பல யுத்திகள் கையாளப்படுகின்றன. தமிழ்த் தேசியம், தமிழ்த் தாயகக் கோட்பாடு என்ப வற்றை மழுங்கடிக்க முனையும் வெளியுலக வலைப் பின்னலில் தமிழ்க் கட்சிகளைச் சிக்கவைத்து உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் குறித்த கொள்கைக்கு மாறான செயற்பாடு நடைபெற்றுக் கொண்டிருப்பது, நடந்துகொண்டிருக்கும் நடவடிக்கைகளை உன்னிப் பாக ஆராயும்பொழுது உணர்ந்து கொள்ளக்கூடியதாக இருப்பதாகப் பலரும் பேசிக் கொள்வதில் எந்தவித அர்த்தமும் இல்லையெனக் கொள்வதற்கு இடமில்லை.

உலக நாடுகளிடையே தற்காலத்தில் காணப் படும் மனித சமுதாயத்தின் உரிமை மதிக்கப்பட வேண்டும். அவர்களுடைய ஆட்சி, மொழி, சமயம், அரசியல் பிராந்தியம் கௌரவிக்கப்படவேண்டும் என்ற தற்காலப் போக்கிற்கு அமைய, சர்வதேசங் களின் அழுத்தங்களினாலேயே ஒரே இலங்கைக்குள் தமிழர்களுக்கு ஒரு தன்னாட்சி அமைய வேண்டும் என்ற நிலை இருந்து வருகின்றது. இந்த வகையில் இலங்கை நாடு இந்தியப் பிராந்தியத்திலிருந்து பிரிந்த பகுதி, இந்தியாவில் இருந்து வந்தவர்களே இலங்கை மக்கள் என்கின்ற தன்மையில் இலங்கைப் பிரச்சினையில் தலையிட இந்திய நாட்டுக்கு முதல் உரிமையுண்டு. அதேபோலச் சங்கிலியன் ஆட்சி யைப் பறித்த போர்த்துக்கல், ஒல்லாந்து, ஆங்கில நாடு ஆகியவர்களுக்கும் இலங்கையின் இறைமை

யைப் பாதிக்காத வகையில் தலையீடு செய்து பிணக்கைத் தீர்த்து வைக்க உரிமையுண்டு. தமிழரசு ஆட்சியை 1947 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு மூலம் பிரித்தானிய ஆட்சியாளர் பாதுகாப்பு ஏற்பாடுகளை ஏற்படுத்தி உரிமையை வழங்கி அப்பாதுகாப்பு ஏற்பாடுகள் 1972 ஆம் ஆண்டு இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுயாப்பால் நீக்கப்பட்ட உத்தரவாதம் மீறப்பட்டு, குறித்த 1972 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பால் பெரும்பான்மை இனத்திற்கு மட்டும் சிறப்புரிமை வழங்கியமை, மற்றும் 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பால் சிங்கள மொழி அரச மொழி என உறுதிபடக் கூறித் தமிழ் மொழியும் அரச நிருவாக மொழியாக அமையும். ஆனால், அதற்கான சட்டங்கள் ஆக்கப்பட வேண்டும் எனக் கண்துடைப்பிற்கான வாசகம் காட்டப்பட்டு அதற்கான சட்டங்களை ஆக்காது தவிர்க்கும் அதேநேரம் தமிழர்கள் விடயத்தில் மென்மைப் போக்கு கடைப்பிடிப்பதாக உலகிற்குக் காட்டி வருவதை மனிதாபிமானத் தன்மையில் தட்டிக் கேட்பதற்கும் பிரச்சினையில் தலையிடவும் மேற்குறித்த நாடுகளுக்கு உரிமை கிடைக்கிறது எனலாம்.

தமிழர் தாயகம், தமிழ்த் தேசியம் என்பன இல்லை என்றால் அபிவிருத்தி என்பது அர்த்தமற்றது. அபிவிருத்தி என்பது எக் காலத்திலும் மேற்கொள்ளக்கூடிய ஒன்று. ஆனால், அனுபவித்து வந்த தமிழர் தாயகம், தமிழ்த் தேசியத்தை இழந்தால் அப்பிரதேசத்தில் அபிவிருத்தி மேற்கொண்டாலும்கூட உரிமைப் பாதிப்பால் அங்கு அபிவிருத்தியை அனுபவிக்க முடியாமல் வேதனை நிறைந்த வாழ்க்கையாகத்தான் தமிழர்களுடைய வாழ்க்கை அமையலாம். அரசினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகள் இலங்கை முழுவதும் இருந்து பெறும் வரிகள், வெளிநாட்டு உதவிகள் மூலம் மேற்கொள்ளப்படுவதால் அதேவேளை ,வடக்கு கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தியை மேற்கொண்டு ஓரம் காட்டாது சமநிலையில் அபிவிருத்தி செய்ய வேண்டிய கடப்பாடு அரசுக்கு உண்டு. எனவே வடக்குக் கிழக்கில் அபிவிருத்திக்காகப் பெரும்பான்மை சமூகக் கட்சிகளுக்குச் சிறுபான்மையோரின் ஆதரவைப் பெற்ற அரசியல் கட்சி துணைபோக வேண்டும் என்பது காரணமாக அமையமாட்டாது. இலங்கை நாட்டின் பாகமாக வடக்கு கிழக்கு மாகாணங்கள் அமைவதால் அதற்குரிய அபிவிருத்தியை அரசு புரிய வேண்டிய கட்டாய நிலை இருப்பதால் அபிவிருத்திக்காக அரசுடன் நிற்க வேண்டியுள்ளதென அரசுக்கு மறைமுகமாக உதவி நிற்பது அரசையும் அதேவேளை தன் இனத்தையும் ஏமாற்றும் மாபெரும் துரோகமான செயலாகும். அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழர், தாயகம், தமிழ்த் தேசியம் என்ற உணர்வை மழுங்கடிக்கும் நோக்கத்துக்கு மானமுள்ள எத்தமிழனும் துணை போக மாட்டான் என்பதே தமிழ்ச் சமூகத்தின் ஒட்டு மொத்த உணர்வாக அமையுமென்பதில் இரு வேறு பட்ட கருத்து இருக்க முடியாது.

தற்பொழுது எதிர்நோக்கும் நாட்டின் அபிவிருத்தியா? தேசியமா? என்ற போட்டியில் அபிவிருத்தி அணி வெற்றியீட்டின் தமிழர்களுக்காக அவர்களின் உரிமைக்காகக் குரல் எழுப்பும் மேலைத்தேய நாடுகளும், இந்திய மாநிலமும் உறங்கிவிடும். அதன்பின் தமிழ்த் தாயகம்,தேசியம் மழுங்கடிக்கப்பட்டுவிடும். தட்டிக் கேட்க முடியாத நிலை ஏற்பட்டு விடும்.

தமிழ்த் தாயகம், தேசியம் சார்பான அணி வடக்கிலும் கிழக்கிலும் வெற்றிபெறுமாயின் தமிழனுக்கு ஒரே இலங்கைக்குள் ஆனால், தன்னைத் தான் ஆளும் கௌரவமான பூரண அதிகார ஆட்சி அமைவதற்கு வெளிநாடுகளின் அழுத்தம் அமைய சாத்தியமுண்டு என்பதுடன் அபிவிருத்தியும் ஏற்பட வாய்ப்பிருக்கும் என்பதில் இரு வேறுபட்ட கருத்தும் இருக்க முடியாது. நமது நாட்டு இரு தேசியங்கள் இரு தாயகங்கள் இவை இரண்டும் ஒரே நாட்டுக்குள் இணைந்த அலகுகளாக ஒரு இலங்கைக்குள் யாப்பு ரீதியாக அரசியல் தீர்வு அமைவதன் மூலமே நீண்ட, நிரந்தர அமைதியான தீர்வு அமைய முடியும். எதிர் வரும் பொதுத் தோதல் முடிவே இதற்குப் பதிலாக அமையப் போகிறது. பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ✱




**தமிழ் இலெமுரியா**

**மராட்டிய மாநிலத்திலிருந்து வரும் மாறுபட்ட மாத இதழ்**

உலகெலாம் தமிழ் மணம் பரப்பும் தமிழ்ச் சஞ்சிகையாகத் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. தமிழர் வரலாறுகளையும், ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாறுகளையும் மற்றும் ஆக்க பூர்வமான அறிவுபூர்வமான படைப்புகளையும் கொண்டு வெளிவந்து கொண்டிருக்கிறது. தமிழர் வாழும் பல நாடுகளில் நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது.

தொடர்புகளுக்கு : Mr.KUMANARAJAN,
Editor in chief, Tamil Lemuriya, 102 'B' Wing,
Danes Building, Veer Savarkar Nagar,
Thane (W)Maharashtra-4000 606
E-Mail : tamil.lemuriya @gmail.com

இலண்டனில் இவ்விதழைப் பெறுவதற்கு
**CHUDEROLI PUBLICATION SOCIETY**
15,Rutland Road,London E7, 8PQ

கதை நேரம்-18

# சொற்களா? செயலா?

தி.க. சந்திரசேகரன், மனிதவள மேம்பாட்டுப் பயிற்சியாளர், திருப்பத்தூர், தமிழ்நாடு

ஒரு வீடு தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. அந்தத் தெருவில் இருந்த பல வீட்டுக்காரர்களும் ஓடோடித் தங்களால் முடிந்த அளவுக்கு வீட்டைக் காப்பாற்றப் போராடிக் கொண்டிருந்தார்கள். குடம் குடமாகத் தண்ணீரை ஊற்றினார்கள். சிலர் மணலைக் கொட்டினர். முடிந்த பொருள்களை வீட்டிலிருந்து வெளியே எடுத்துப் போட்டனர்.

எதிர்வீடு எரிவதை இளஞ்செழியன் பார்த்துக் கொண்டிருந்தான். தீ கொழுந்துவிட்டு எரியும்போது அவன் இதயம் படபடத்தது. உணர்ச்சிவசப் பட்டான். அவன் ஒரு கவிஞன். ஒரு தாளை எடுத்தான்; கவிதை எழுதினான்.

''எரிவது என்ன வீடா?
நாமிருப்பது ஒரு நாடா?
இல்லை இது ஒரு காடா?
நாமெல்லாம் மாடா?
அரசாங்கம் ஒரு கேடா?
நாம் ஏந்துவது திருஓடா?
எரியுது வீடு நீ போடா!
குடிக்காதே கோலி சோடா!
மாத்தாதே நாட்டைச் சுடுகாடா!
நீ ஆடுவது என்ன சடுகுடா!
நீ என்ன பெரிய கடாமாடா?''

அடுத்த நாள் காலை, எரிந்து போன வீட்டிற்குச் சொந்தக்காரர் தன் வீட்டின் முன் சோக மாக நின்று கொண்டிருந்தபோது இளஞ்செழியன் அவரிடம் சென்றான். ''ஐயா, உங்கள் வீடு எரிந்து கொண்டிருந்ததைப் பார்த்தேன். என் மனம் தாங்க வில்லை; என் வேதனையைக் கவிதையில் வடித் திருக்கிறேன். இதைப் படியுங்கள்!'' என்று தான் எழுதிய கவிதையைக் கொடுத்தான்.

அவர் அதை வாங்கிப் பார்த்துவிட்டு, கசக்கிக் கீழே எறிந்தார். ''அடப்பாவி! நீ ஒரு எதிர் வீட்டுக்காரன், வீடு தீப்பற்றி எரிகிறது. நீ கவிதை எழுதுகிறாய். இந்தக் கவிதை எழுதிய நேரத்தில் ஒரு நாலு குடம் தண்ணீர் ஊற்றி இருந்தால், அந்த நாற்காலியையாவது காப்பாற்றி இருக்கலாமே!'' என்றார் வெறுப்பாக.

ஒருமுறை சுவாமி விவேகானந்தர் கூறினார். 'பசியோடு இருப்பவனிடம் பகவத் கீதையைப் பற்றிப் பேசாதே! அவனுக்கு ஒரு துண்டு ரொட்டியைக் கொடு' - என்று

அன்பு என்பது வெறும் சொல்லல்ல! அது ஒரு செயல் வார்த்தை! 'அன்பு செலுத்துகிறேன்' என்று சொற்களால் கூறுவதற்கு எந்தப் பொருளும் இல்லை. அன்பு என்பது செயல் மூலம் வெளிப்பட வேண்டும்.

வீடு தீப்பற்றி எரியும்போது தேவைப்படுவது ஒரு கவிதை அல்ல. தண்ணீர்க் குடங்களும், தீயணைப்பு முயற்சியும் மட்டுமே!

பசியோடு இருக்கும் மனிதர்களுக்குத் தேவை உணவுதான். வெறும் வார்த்தைகளால் புகழுவதோ, ஆறுதல் கூறுவதோ, திட்டுவதோ எல்லோராலும் எளிதில் செய்யக் கூடியதே! ஆனால், உண்மையில் செய்ய வேண்டிய செயல் அவர்களுக்கு உதவுவதே!

கொல்கத்தாவின் சாலையோரங்களில் கிடந்த நூற்றுக்கணக்கான தொழு நோயாளிகளையும், பிச்சைக்காரர்களையும் பார்த்து நம்மால் அனுதாபப் பட மட்டுமே முடிந்தது.

ஆனால், அவர்களுக்கென்று ஒரு காப்பகம் அமைத்துக் காப்பாற்றியது அன்னை தெரசா அவர் களே! அதனால்தான் அவர்கள் வரலாற்றில் இடம் பிடித்தார்.

அப்படியானால் ஆறுதல், அன்புச் சொற்கள் தேவையில்லையா? அவற்றிற்கு மதிப்பில்லையா?

நிச்சயமாக உண்டு!

முதலில் நம்மால் முடிந்த உதவியைச் செய் வோம்; பின்னர் அன்பான சொற்களைப் பேசி ஆறுத லளிப்போம்.

வெறும் சொற்கள் - வீணான முயற்சியே! ✳



கோலாலம்பூர் கலா மண்டபத்தில் செல்வன் நவீன் ஆறுசிங்கம், செல்வி ஹசினி ஆகியோரின் திருமணம் இனிதே நடைப்பெற்றது. மகாலட்சுமி, மகாலிங்கம், சரஸ்வதி, டாக்டர் திருமதி குணரத்தினம், டாக்டர் குணரத்தினம், சாந்தி, இராஜி ஆகியோர் உடன் உள்ளனர். வாழ்வில் இணையும் இளம் இணையரைச் சுடரொளி வாழ்த்துகிறது.

# S. SATHA & Co.

## SOLICITORS

Estd. 1997

www.satha.co.uk

"We are committed to delivering outstanding and fully integrated legal services that are designed to help achieve our clients' business objectives."



- injunction
- Family Law
- Immigration
- Criminal Law
- Conveyancing
- Legal Aid Work
- Prison Law

IN AN EMERGENCY

CALL

07956 288 671



**S. Satha & Co.**

376-378, High Street North

Manor Park, London E12 6PH

Tel : 020 8471 9484

Fax : 020 8471 9485

Dx. 133012 UPTON PARK 2

Email : info@satha.co.uk

# Accident courtesy

## வாகன விபத்தா?

**BRANCH**
142 Pinner Road,Harrow,
Middlesex,HA1 4JE

**BRANCH**
Trocoll House Wakering Road,
Barking,Essex,IG11 0TJ


**BRANCH**
13 Progress Business Park
Progress Way, Croydon
Surrey CR0 4XD

**HEAD OFFICE**
Beechfield House,
Lyme Green Business Park,
Winterton way, Macclesfield,
Cheshire,SK11 0LP

எம்மை நேரடியாக
தொடர்பு கொள்பவர்களுக்கு
எவ்வித கொமிஷனும்
அறவிடப்படமாட்டாது
அதாவது 100 %
நஷ்டஈடு பெறுவீர்கள்

**தொடர்பு கொள்ளுங்கள்!**

**0845 8710 196**
07903 810 196
Web: www.accidentcourtesy.com
www.accidentcourtesy.co.uk



"accident courtesy Ltd regulated by ministry of justice our Authorisation Number: CRM2523"

We don't charge any commision for whoever calls directly
This means they get 100 % compensation

# CARNATIC MUSIC CONCERT


Presented by

## London School of Carnatic Music Lewisham

by leading Musician

## *Smt. Vasundhra Rajagopal*

with a mellifluous voice and excellent presentation.
Highly rated in Music circles of India.



Violin:
***Dr Jyotsna Srikanth***

Mridangam:
***A Somasundara Desigar***

Morsing:
***K Sithamparanathan***

**Venue : London Sivan Centre**

**Date : Saturday 1st May 2010**
**Doors open 6.30 pm**

**ADMISSION:**
Donation : Family £10.00
Music Students under 16yrs free